

KALKI
19-12-1965
கல்கி
35 காசு


மபத்லால் க்ரூப்
2X2


கல்கி

ஆண்டவனே! நான் உன்னைப் பற்றிக் கூறும் சிறு சிறு கிண்டல் மொழிகளை மன்னித்து விடு; அப்போது நீ என்னைப் பெரிய அளவில் கேலி செய்திருக்கிறாயே அதை நான் மன்னித்து விடுகிறேன்! - ஃப்ராஸ்ட்

பொருளடக்கம்

விசுவாவசு மார்கழி 4 ❊ டிசம்பர் 19

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


சர்வகலாசாலை
அரசியல் தலையீடு
பிரெஞ்சுத் தேர்தல்
டிகாலே
PK

மலர் 25 • இதழ் 21



சந்தானம் சொல்வது சரி

'பதினைந்தாண்டுகளுக்கு முன்பு அரசியல் நிர்ணய சபையினால் சிரத்தையுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாஸனத்தைக் காக்க வேண்டும்; அதன் வழியே ஒழுக வேண்டும்' என்று ஸ்ரீ சந்தானம் அவர்கள் சென்னை சர்வ கலாசாலைப் பிரசங்கமொன்றில் கூறி யிருக்கிறார்கள். குறிப்பாக, சாஸனம் அளிக்கும் ஜீவாதார உரிமைகளை உள்ளவாறே மதிப்பது ஒரு புனிதமான கடமை என்பதையும், முறையில்லாமல் 'நெருக்கடி கால'த்தை நீடித்துச் சாஸனம் உறுதி கூறும் உரிமைகளைப் பறிப்பது தவறு என்பதையும் அவர் வார்த்தைகளில் கட்டுப்பாட்டுடன் — ஆனாலும் அழுத்தமாக — கண்டித்திருக்கிறார். இதே விஷயமாக, முன்பு இந்திய சர்க்காரின் பிரதம வழக்கறிஞராக இருந்த ஸ்ரீ ஸெடல்வாட் போன்றவர்களும் வலிவாகப் பேசி யிருக்கிறார்கள். ஆயினும் இந்த ஆட்சேபணைகளுக் கெல்லாம் இதுவரை எத்தகைய நல்ல பயனும் காணோம்.

யுத்தமாயினும் சரி, பஞ்சமாயினும் சரி அதை 'நெருக்கடி' என்று சொல்லும்போது அதற்கு ஓர் ஆரம்பமும் உண்டு. முடிவும் உண்டு. சீன அபாயமென்பது சீனத்தின் விஸ்தரிப்பு ஆசை உள்ள அளவும் உண்டு; அதாவது சீன அபாயம் நிரந்தரமானது. இந்த மண்ணாசையைத் தடுத்து நிறுத்துவது பூகோள ரீதியில் சாதிக்கக்கூடியதல்ல. எனவே ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின் முடிவுற வேண்டிய 'நெருக்கடி நிலை'யாக இதனைக் கருதுவதற்கில்லை. அசல் படையெடுப்புத்தான் நெருக்கடி; படையெடுக்கக் கூடிய வாய்ப்பு நிரந்தரமாக இருப்பின் அதனை 'நெருக்கடி' யாகக் கொள்வதற்கில்லை. நிரந்தர அபாயத்துக்காக அரசியல் சாஸனத்தை நிரந்தரமாக நிறுத்தி வைப்பது சரியாகாது. சீன அபாயம் காரணமாகச் சாஸனத்தின் மூன்றாம் பிரிவாகிய ஜீவாதார உரிமைகளை மதிப்பதற்கில்லையெனில் அப்போது 'அண்டை நாடாகிய சீனத்தின் அபாயம் எப்போது மிருப்பதால் இந்தியாவில் ஜனநாயக ஆட்சி நடத்துவதே சாத்தியமில்லை; எனவே இங்கு சட்டத்தின் ஆட்சியை ஒதுக்கி விட்டு காங்கிரஸின் சர்வாதிகாரத்தை ஏற்படுத்த வேண்டும் என்று பகிரங்கமாகவே கூறிவிடலாம்.

பகைவர்களோ, ஆக்கிரமிப்பு வழியைப் பின்பற்றும் அண்டை நாடுகளோ இல்லாத ஒரு நாடுதான் ஜனநாயகத்தை அனுஷ்டிக்க முடியும் என்று கொள்ளக்கூடாது. ஜனநாயகமென்பது ஒரு வாழ்முறை; எந்தச் சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுக்காமல் தீரத்துடன் பின்பற்றவேண்டிய வாழ்முறை. மக்களுக்கு அம் முறையில் தீரம் வாய்ந்த தன்னம்பிக்கை இருக்க வேண்டும். ஜனநாயக நம்பிக்கையைப் பலாத்காரத்தினால் குலைப்பதற்கு இடமே இருக்கக் கூடாது. இத்தகைய தீரத்தை ஜனாதிபதி ஜான்ஸனின் அமெரிக்கா உலகுக்குக் காட்டி வருகிறது. பற்பல கோஷ்டியினரின் நெரிசல் இருந்தபோதிலும் ஜான்ஸன் அவர்கள், அரசியல் சாஸனம் தமக்களித்துள்ள அதிகார வரம்பை மீறாமலே தீரமான நடவடிக்கை எடுத்துவருகிறார். தம் கொள்கையை எதிர்ப்பவர்கள் யாவரும் தேச விரோதிகள் என்று அவர் நினைத்து விடுவதில்லை. எனவே, மக்களின் உரிமை சாஸனத்தைத் தாற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு அவர் எண்ணுவதேயில்லை. பொது மக்களின் கருத்துக்கு மதிப்புத் தருவது போலவே இத்தகைய துணிச்சலையும், தன்னம்பிக்கையும் காட்டுவதும் ஜனநாயகத்தின் தேவையாகும். இல்லாவிடில் ஒரு நாட்டின் இலட்சியங்கள் அந் நாட்டின் பெரும்பாலோரின் தயவில்கூட இல்லாமல், பகைவர்களின் தயவில் உருவாக வேண்டியிருக்கும். ஏனெனில் பகைவர்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கையால் 'நெருக்கடி' தோன்றி அரசியல் சாஸனத்தின் சாரமான பாகம் அக்காலத்தில் ரத்தாகி விடுமல்லவா?

சபலத்துக்கு ஆளாகக் கூடிய சமயத்தில் மனம் தளராதிருப்பதும், சிரமத்தின்

இடையிலும் தீரத்தோடு இருப்பதுமே சீலம். சௌகரியப்படும்போது மட்டும் தருமத்தை அநுசரிப்பவன் சீலவான் ஆகமாட்டான். இதுபோல் கஷ்டங்களும், சபலத்துக்கிடமான சூழ்நிலையும் உள்ளபோது மக்களின் ஜீவாதார உரிமைகளைக் காக்கும் சர்க்கார்தான் உண்மையில் ஜனநாயக சர்க்கார்.

ஜனநாயகத்தில் இத்தகைய ஈடுபாடு இல்லாவிடில் என்ன நேரும் என்பதை ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்களின் வாக்கில் கேட்போம். அவர் ஒரு முதிர்ந்த தேச பக்தர். காங்கிரஸ் அபிமானத்துடனேயே பிறந்தவர் என்று அவரைப் பற்றிக் கூறலாம். 'ஹோம்ரூல்' இயக்க நாட்களிலிருந்து இந்திய தேசியக் காங்கிரஸில் சுயநலப் பற்றின்றி ஈடுபட்டவர் அவர். சமீபத்தில் அவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

''தற்போது தனிமனிதன் எந்த நிலைக்கு வந்துவிட்டான் என்பதையும், சர்க்காரில் உள்ளவர்களிடம் எவ்வளவு அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளன என்பதையும் காணும்போது ஐம்பதாண்டுகளாகப் பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள எனக்குச் சொல்லொணா நோவு காண்கிறது. இப்படிப்பட்ட ஒரு 'சுயராஜ்ய'த்துக்காக நான் உழைக்கவில்லை. என்னுடைய துரதிர்ஷ்ட நாட்டில் நடப்பதையெல்லாம் காண்பதற்கு உயிரோடு இருக்கிறேனே என்று வருந்துகிறேன்.

''சுயமரியாதையை அறவே இழந்துவிட்ட மக்கள் மீது — லஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் மாமூல் விஷயங்கள் என எண்ணுகிற மக்கள் மீது — 'ஒன்று சர்க்காரில் இடம் பெற்றுப் பொறுப்பில்லாமல் அதிகாரம் செலுத்த வேண்டும்; அல்லது ஆட்சியாளர்களின் மனம் போனபடி பயமுறுக்கப்பட்டுக் கொடுமைக்கு ஆளாகும் அடிமையாகவேண்டும்' என்ற சூழ்நிலைக்கு அடிபணிந்துவிட்ட மக்கள் மீது — ஆட்சிபுரிவதென்பது ஏதோ வேடிக்கையல்ல என்று ஆட்சியாளர்களுக்குக் கூற விரும்புகிறேன்.''

முதலில் ஸ்ரீமதி பெஸன்ட் அம்மையாரோடும் பிறகு காந்திஜியுடனும் இந்திய சுதந்திரத்துக்காகப் போராடியவரும், பார்லிமென்டில் நீண்ட காலம் சேவை செய்தவரும், பிறகு பல மாகாணங்களுக்குக் கவர்னராக நியமிக்கப்பட்டவருமான ஒரு தீவிர காங்கிரஸ் அபிமானி இவ்விதம் எழுத வேண்டுமாயின் எவ்வளவு உணர்ச்சியும், அந்த உணர்ச்சியின் உண்மையில் நிச்சய புத்தியும் இருக்க வேண்டும்? ஸ்ரீ ஸ்ரீபிரகாசா மட்டும் இவ்வாறு கருதவில்லை. அவரைப் போலவே நினைக்கும் நல்ல மனிதர்கள் பலர் இருக்கிறார்கள்.

ஸ்ரீ ஜவாஹர் அவர்களுக்குத் தேச பக்தி உத்தல் உண்டு. ஆயினும் தமது இளம் பருவத்திலிருந்தே மனத்தில் புகுந்த கருத்துக்களில் அவர் ஊறிப்போனபடியால் இந்திய தேசத்தை அதற்குரிய எளிமைப் பாதையிலிருந்து அப்புறப்படுத்தி, சோவியத் ருஷியாவின் இலட்சியத்தை நமது தேசிய இலட்சியமாக மாற்றினார். எல்லாம் ஆலைத் தொழிலாக வேண்டும் என்கிற ஆவேசத்தை உண்டு பண்ணினார். தேசத்தின் தலைவிதியை நிர்ணயிக்க அவர் போட்ட பாதை இன்றைய நிலைக்குக் கொண்டு வந்துவிட்டிருக்கிறது. இதிலிருந்து மீள விவேகம் இருந்தால் மட்டும் போதாது; அபாரமான தீரமும் இருக்க வேண்டும். 'சமூகத்துக்குச் சமநீதி கிட்ட வேண்டும்; ஏற்றத் தாழ்வுகள் இருக்கக் கூடாது; யாவருக்கும் சமமாக சுபிட்சம் ஏற்படவேண்டும்' என்பதெல்லாம் மகத்தான இலட்சியங்கள்தாம். ஆனால் பளுவான அந்நியக் கடன், மத்திய திட்டம், பெர்மிட் — லைசென்ஸ் ஆட்சி இவற்றின் மூலம் அந்த இலட்சியத்தை அடைய முற்பட்டதுதான் தேசத்தின் விதியை நாசமாக்கியது. இதன் விளைவு குறித்துத்தான் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்கள் மனம்கசந்து பேசுகிறார்.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது.)

நிர்ப்பந்தம் வேண்டாம்

தேசப் பாதுகாப்புக்காக என்னென்ன உதவிகள் செய்ய இயலுமோ அவ்வளவும் செய்ய நம் மக்கள் சுயேச்சையாகவே தயாராக இருக்கிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் மக்களிடமிருந்து கட்டாய கெடுபிடிகள் மூலம் யுத்த நிதிக்கோ, தங்கப் பத்திரத்துக்கோ வசூலிக்க வேண்டிய அவசியமில்லை. எந்த அளவுக்கு மக்கள் மனமுவந்து உதவுகிறார்களோ அது சர்க்காரின் இலக்குக்குப் போதவில்லை என்பதனால் நிர்ப்பந்த முறைகளை மேற்கொண்டு சுமுகமாக நடைபெற வேண்டிய காரியத்தில் கசப்பை உண்டாக்கக்கூடாது! நாட்டில் சுமார் 3,000 கோடி ரூபாய்க்குத் தங்கம் இருப்பதாகக் கணக்குப் போட்டு இதில் 500 கோடியாவது வசூலிக்கவேண்டுமென முதலில் அரசாங்கம் கருதியது. பிறகு இந்தக் கணக்குகள் ஏட்டளவோடுதான் நிற்கும் என்பதால் தங்கள் இலக்கை ஐம்பது கோடி ரூபாயாக்கிக் கொண்டதாகக் கேள்வி. ஆனால் மக்கள் எவ்வளவோ கிராம்கள் தங்கம் வழங்கியும் இவற்றின் மதிப்பு ஒரு சில கோடிக்கு மேல் வரவில்லை. சர்க்காரின் இலக்குக்கும் மக்களின் சுயேச்சையான நன்கொடைக்கும் மிகவும் வித்தியாசம் இருக்கிறது. ஆனால் இதைக் காரணமாகக் கொண்டு கட்டாயப்படுத்தும் முறைகளை மேற்கொண்டால் நம் மக்கள், சர்க்கார் இரு சாராரும் வெளி உலகில் கௌரவத்தை இழக்க நேரிடும்.

ஆயினும் இத்திசையில்தான் சர்க்கார் செல்லக்கூடும் என்ற பயம் எழும்புகிறது. வடார்க்காட்டில் மட்டும் ஐந்து லட்சம் கிராம் தங்கம் வசூலிக்க வேண்டுமென இலக்கு நிர்ணயித்திருப்பதாக ஒரு செய்தி தெரிவித்தது. அதாவது சென்னையில் பிரதமருக்கு அளிக்கப்பட்ட

மகத்தான நன்கொடையைப் போல் ஐந்து மடங்கைச் செல்வச் செழிப்பு அதிகமில்லாத ஒரு மாவட்டத்தில் வசூலிக்க உத்தேசித்திருக்கிறார்கள். இதேபோல் தென்னார்க்காட்டிலும் ஒவ்வொரு தாலுக்காவுக்கும் பல்லாயிரக் கணக்கான கிராம் வீதம் நிர்ணயித்திருப்பதாகச் செய்திகள் வருகின்றன. மற்ற மாவட்டங்களிலும் இப்படியேதான் 'இலக்குகள்' அமைக்கப்பட்டிருக்கும். அதிகாரிகளை அனுப்பி வைத்து ஒவ்வொரு பகுதிக்கும் இவ்வளவு தங்கம் திரட்டியாக வேண்டும் என்று இலக்கும் விதித்துவிட்டால் நிர்ப்பந்த முறை அதில் புகாமலிருக்குமா? அதிகாரிகள் போதாதென்று காங்கிரஸ் சர்வாதிகாரிகளையும் தங்கச் சேகரிப்புத் திட்டத்தில் ஈடுபடுத்தக் கட்சி அக்கிராஸனர் முனைந்திருக்கிறார்.

மக்கள் இயன்றதையெல்லாம் தாமாகவே செய்வார்கள். சர்க்காரும் தன்னால் இயன்ற சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். இதுவரை நடந்து வரும் திட்டங்களை மட்டும் நிறைவு செய்வதோடு நிறுத்திக் கொண்டு புதிதாக இருபதினாயிரம் கோடி ரூபாய்க்கு வகுத்துள்ள திட்டத்தைக் கணிசமாக வெட்டினாலே பிரச்னையை எளிதில் சமாளித்துவிட முடியும். பழைய திட்டத்தைக் கைவிடாமலே பாதுகாப்புச் செலவையும் உயர்த்திவிட்டு, எல்லாவற்றுக்கும் மக்கள் மீது சுமையை ஏற்றலாமா?

தங்கத் திட்டத்துக்குப் போதிய ஆதரவு இல்லாவிடில் வரிகளை அதிகரிப்போம் என்று பயம் காட்டுகிறார்கள். ஸ்ரீ மஸானி எடுத்துக் காட்டியிருப்பது போல், மொரார்ஜியின் தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தையும் மீறித் தங்கத்தைப் பதுக்கியிருப்பவர்களிடமிருந்துதான் புதுத் தங்கத் திட்டத்துக்குக் கணிசமான உதவி கிடைக்க வேண்டும். 'பதுக்கல்காரர்களை அப்படியே மன்னித்துவிடுவோம்' என்று கூறும் சர்க்கார் பழைய மொரார்ஜி சட்டத்தையும் அதே சமயத்தில் கைவிடாமல் இருப்பது மிகவும் விசித்திரம். அது போதாதென்று, பதுக்கல்காரர்கள் தங்கத்தை வெளிக் கொண்டு வராவிடில் அப்பாவிப் பொதுமக்கள்மீது வரிச் சுமையை ஏற்றுவோம் என்பது அதனினும் விசித்திரம்.


தங்கத் திட்டம் விஷயமாக ஒரு யோசனை: 'நாங்கள் பதினைந்தாண்டுக்குப் பின் தங்கத்தைத் திருப்பித் தரமாட்டோம் என்று ராஜாஜி கூறுகிறார். நிச்சயமாக தங்கமாகவே திருப்பித் தருவோம்' என்று ஆட்சியாளர்கள் கூறுகிறார்கள். அப்படித் திருப்பித் தரவேண்டுமென்பதுதான் ராஜாஜியின் விருப்பமும். ஆனால் எப்படித் திருப்புவது? ரூபாய் நோட்டு அச்சிட்டுத் தருவது போல், தங்கத்தைச் சிருஷ்டி செய்து தர முடியாது. ஆனால் சர்க்காரோ, 'ரூபாயல்ல; தங்கமாகவே திருப்புவோம்' என்கிறார்கள். எனவே இப்போது வசூலிக்கும் தங்கம் அந்நியச் செலாவணிக்குப் பயனாகி விட்டால் பதினைந்தாண்டுகளுக்குப் பின் புதிதாக இங்கு அந்நிய நாட்டிலிருந்து தங்கச் செலாவணி பெற்றாக வேண்டும். அதற்குரிய முறையில் நம் ஏற்றுமதியைப் பெருக்கத் திட்டமிட வேண்டும். ஏற்றுமதி பெருக வேண்டுமாயின் உள்நாட்டு உற்பத்தி பெருக வேண்டும். எனவே, ராஜாஜி சமீபத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறியது போல், இப்போதுள்ள திட்டக் கமிஷனை ரத்து செய்துவிட்டுப் பதினைந்தாண்டுகளுக்குப் பின் தங்கத்தைத் திருப்புவதற்கு வழி என்ன என்று கண்டறிவதற்காக ஒரு புதிய திட்டக் கமிஷனை நிறுவ வேண்டியதுதான்!

என்ன சேதி?

- இசைவிழாத் தலைவர்கள்
- ஜப்பான் - ஓர் அதிசயம்
- கம்பனுக்கு யோகம்

சென்னை மியூஸிக் அகாடெமியின் சங்கீத விழாவுக்குத் தலைமை தாங்க வித்வான் ஆலத்தூர் சீனிவாசய்யர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதைச் சங்கீதப்பிரியர்கள் அனைவரும் வரவேற்கிறார்கள். ஆலத்தூர் சகோதரர்களில் ஒருவராகச் சங்கீத மேடைகளை முப்பதாண்டு காலமாக அலங்கரித்து கர்நாடக சங்கீதத்தின் லட்சண லட்சிய நுட்பங்களை அள்ளி வீசிக் கொண்டிருப்பவர் ஸ்ரீ சீனிவாசய்யர். தமது சங்கீத சகோதரர் சிவசுப்பிரமணிய அய்யருடைய மறைவுக்குப் பின் தாமாகவே தனி முறையிலேயே வித்வான் சீனிவாசய்யர் பிரகாசித்து வருகிறார். நயமான சாரீரம் படைத்த இவ்விசைக் கலைஞர் ஆலத்தூர் முத்திரை தாங்கிப் பிரபலமடைந்துவிட்ட விவகார சங்கீதத்துக்கு இருப்பிடமாக இப்போது விளங்கி வருகிறார். மியூஸிக் அகாடெமியின் சம்பிரதாயத்தைப் போற்றிப் பாதுகாத்துப் போஷித்துச் சோபிக்கச் செய்வதில் வித்துவான் ஆலத்தூர் சீனிவாசய்யர் ஆற்றலும் ஆர்வமும் பெற்றவர். இவ்வாண்டு விழா பூரணப் பொலிவுடன் விளங்கப்போகிறது என்பதற்கு இவர் சங்கீத கலாநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதே ஒரு முன்னறிவிப்புப் போல் அமைந்திருக்கிறது.

தமிழ் இசைச் சங்கத்தின் இவ்வாண்டு இசை விழாவுக்கு பாபநாசம் சிவன் அவர்கள் தலைமை தாங்குவது குறித்துப் பெரு மகிழ்ச்சி கொள்ள வேண்டும். இசைக்கே தமது வாழ்நாளை அர்ப்பணித்துக்கொண்டு, பக்தியையும், இசையையும் குழைத்துச் சுவைத்துக் கேட்போரை உருகச் செய்யும் அபூர்வ ஆற்றல் பெற்ற முதுபெரும் கலைஞர் ஸ்ரீ சிவன். அவர்



பாபநாசம் ஸ்ரீ சிவன்

தமிழ் இசைக்கு ஆற்றியுள்ள தொண்டு அளப்பரிது. அவருடைய கணக்கற்ற சாகித்தியங்களை அவரிடமே பாடமாகக் கற்று இசை மேடைகளில் பல்லாண்டுகளாக வித்வான்கள் ரசித்துப் பாடும் அற்புதத்தைக் கண்டும் கேட்டும் புளகாங்கிதமடைந்தவர் பலர். இந்த அற்புதத்தைத் தமது காலத்திலேயே காணும் பாக்கியம் பெற்றவர் சிவன் அவர்கள்.


நலிந்த தோற்றமும் உயர்ந்த பண்பும் அன்பு கனிந்த உள்ளமும் நெகிழ்ந்துருகும் குரலுமாகத் திகழும் ஸ்ரீ சிவனை இசைப் பேரறிஞர் என்ற விருது வழங்கித் தமிழையும், தமிழ் இசையையும் ஒரு பெரும் தமிழரையும், தன்னையுமே கௌரவித்துக் கொண்டிருக்கிறது தமிழ் இசைச் சங்கம்.

*　　　*　　　*

"ஓ! இத்தனை நேரம் இந்திரலோகத்தில் இருந்தாற்போல் அல்லவா இருந்தது. உண்மையில் ஒரு கப்பலில் அல்லவோ இதுகாறும் இருந்திருக்கிறோம்!" என்ற உணர்ச்சிதான் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்த ஜப்பானிய மிதக்கும் பொருட்காட்சியான "ஸகூரமாரு" கப்பலைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்.

ஜப்பான் சின்னஞ் சிறு தேசம். பலப் பல தீவுகளினாலான தேசம். சதுர மைல் விகிதாசாரக் கணக்கெடுத்தால் மிகமிக நெருக்கமும், அடர்த்தியுமான ஜனத்தொகை கொண்ட தேசம். பல மூலப்பொருள்களுக்கும், உணவுப் பொருட்களுக்கும் வெளி நாடுகளை எதிர் நோக்கியிருக்கும் நாடு. அப்படிப் பல அசௌகரியங்கள் பெற்ற கிழக்காசிய நாடு. மேனாட்டுத் தொழில் வளர்ச்சியையும் விஞ்சக் கூடியவகையில் முன்னேறியிருப்பதைக் காண நமக்கு மலைப்பு ஏற்படுகிறது. ஜப்பான் முன்னேறியிருக்கும்போது நாம் ஏன் முன்னேற முடியாது என்ற நம்பிக்கையும் பிறக்கிறது.

இக்கப்பலில் எஃகுத் தொழிற்சாலைகள், நெசவு யந்திரங்கள், அச்சு யந்திரங்கள்,



ஆலந்தூர் ஸ்ரீ சீனிவாசய்யர்

மோட்டார்—சைக்கிள் உற்பத்தி சாலைகள் ஆகியவற்றோடு, ஆயிரக் கணக்கான 'எலக்ட்ரானிக்' பண்டங்களைக் கண்டபோது மெய் சிலிர்க்கத்தான் செய்தது. நாம் இங்கே எழுதுவதை ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் அப்படியே எழுதும் யந்திரத்தைக் கண்டோம். எத்தனை வகை டிரான்ஸிஸ்டர்கள், டெலிவிஷன்கள், டெலிபோன்கள், காமிராக்கள்! நுட்பமும், வனப்பும், உறுதியும் வாய்ந்த அப் பொருட்களைக் காணக் காண வியப்புத்தான் மேலிட்டது.

இப்பொழுது ஜப்பானின் கூட்டுறவுடன் நம் நாட்டில் பெங்களூரில் கைக் கடிகாரங்களும், சென்னையில் பைலட் பேனாக்களும் செய்வதை அறிவோம். இன்னும்பல தொழில் துறைத் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன்தான் இக் கப்பல் பல நாடுகளுக்குச் சென்று வருகிறது.

நம் நாட்டுத் தொழில் பிரமுகர்கள் இவ்வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறோம்.

ஆயினும் சர்க்காரின் வரிக் கொள்கைகள் தளர்ந்தாலன்றிப் புதிய தொழில்கள் எப்படி ஏற்பட முடியும் என்ற ஆற்றாமையும் கூடவே எழத்தான் செய்கிறது.

*　　　*　　　*

பன்மொழிகளைப் பயின்ற காலஞ்சென்ற மகான் வ.வே.சு. அய்யர் அவர்கள் கம்பனின் கவிதா சந்நிதியில், உலக மகா கவிகள் அனைவரும் சிரம் தாழ்த்த வேண்டியதுதான் என்று உணர்ந்து கூறினார். இப்பொழுது தமிழகத்துக்கு வெளியே பாரத தேசமெங்கணும் கம்பர் பெயரை அறிய வாய்ப்புத்தர உத்தேசித்துள்ள சர்க்காரைப் பாராட்டுகிறோம். கவிச்சக்கரவர்த்தி கம்பர் திரு உருவம் படைத்த தபால் பில்லைகள் வெளியிடத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற செய்தி கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும் அன்பர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டும்.

★

தொழில் துறை ஏக போக்கியங்களைத் தடுப்பதற்கு வழி வகைகள் காண வேண்டுமென்பதாகப் பேச்சு அடிபடுகிறது. ஏக போக்கியம் ஏற்படுவதற்குக் காரணம் பெர்மிட்–லைசென்ஸ் ஆட்சி முறைதான். நேரடியாக அரசாங்கமே தொழில் நடத்துகிற முறை தோல்வி அடைவதன் விளைவாக, ஆளும்கட்சியின் சோஷலிஸ சித்தாந்தமானது 'பெர்மிட்-லைசென்ஸ் முறை' என்ற மாற்றுருவம் எடுத்துக்கொண்டது. இதன் விளைவாகச் சிறிய அளவிலும், பெரிய அளவிலும் ஏக போக்கியங்கள் ஏற்பட்டே தீரும். இவற்றில் சிறிய ஏகபோக்கியங்களினால் ஏற்படும் தீமை மிகவும் அதிகம். பொருளாதாரத்தில் மத்திய வர்க்கத்தினரான மக்கள் சுதந்திரமாகத் தங்கள் அறிவையும், உற்பத்தித் திறனையும், வியாபார சாதுரியத்தையும் பயன்படுத்தமுடியாதபடி பெர்மிட்-லைசென்ஸ் பெற்ற சிறிய ஏகபோக்கியங்கள் அவர்களை நசுக்கி வைத்திருக்கின்றன. பெர்மிட்டும் லைசென்ஸும் பெறும் போட்டியில் சர்க்கார் உத்தியோகத்தில் ஊழல் ஏற்பட்டு விட்டது. அரசியல்வாதிகளின் பிரவேசமும் அதிகரித்து விட்டது. அரசியல் ஜமீன்தார்களையும் சர்க்கார் சிப்பந்திகளையும் அடியோடு நம்பி வாழ்ந்தாலே கதி உண்டு என்ற எண்ணம் சொஸ்தப்படுத்த முடியாத ஒரு வியாதி போல் மக்களிடை பரவிவிட்டது.



முன்பு அதிக தாரதம்மியம் இல்லாத வர்க்கத்தினரிடையே பெர்மிட் — லைசென்ஸ் முறையினால் புதிய ஏற்றத் தாழ்வுகள் உண்டாகி விடுகின்றன. ஏகபோக்கியங்களைத் தடுக்க வேண்டும் என்ற உண்மையான உணர்ச்சி இருக்குமாயின், பெர்மிட்-லைசென்ஸ் ஆட்சிமுறைக்கு முடிவு கட்ட வேண்டும்; சுதந்திரத் தொழில் முறைக்கு உயிரளிக்க வேண்டும். சர்க்கார் தலையீட்டை அதிகப்படுத்துவதால் காங்கிரஸ் நிதிக்கு அதிகப் பணம் சேகரிக்க முடியலாமே ஒழிய, தேசத்துக்கு ஒரு நன்மையும் கிடைக்காது.

★

எதிர்க் கட்சிகள் ஆட்சி பீடத்தை அடைய முடியும் என்கிற வாய்ப்புக்கள் இல்லாவிடினுங்கூட, அவை ஜனநாயகத்தில் ஒரு முக்கியமான இடம் பெற்றுள்ளன. ஏனெனில் அவை தமது விமரிசனங்களின் மூலம் சர்க்கார் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவி புரிகின்றன. இந்தியாவிலேயே இதற்கு உதாரணங்கள் பார்த்திருக்கிறோம். சட்ட சபைகளில் எதிர்க் கட்சிகள் மிகவும் குறைவான ஸ்தானங்களை பெற்றிருப்பினும், அவற்றின் கண்டனங்களினாலும், வலியுறுத்தலாலும் காங்கிரஸ் சர்க்கார் பலமுறை பயனடைந்திருக்கிறது. 'காங்கிரஸ் கட்சி மிருகத்தனமான மெஜாரிட்டி பலம் பெற்றிருக்கிறதே; பொருளாதார சக்தி முழுவதையும் கைப்பற்றித் தொழில்களின் மென்னியை முறித்துத் தனக்குப் பொதுத் தேர்தல் வெற்றிகளை ஸ்திரப்படுத்திக்கொண்டு விட்டதே; இதை எதிர்ப்பதில் என்ன பலன் இருக்கக் கூடும்?' என்று யாரும் மனமிடிந்து போக வேண்டியதில்லை. மத்திய பார்லிமெண்டும், மாகாண சட்ட சபைகளும் சட்டங்கள் செய்வதற்கு மட்டுமோ, ஆள்கிற கட்சியின் அதிகார உரிமையைச் சோதிப்பதற்கு மட்டுமோ ஏற்பட்ட ஸ்தாபனங்கள் அல்ல. அவை நிரந்தரமான கல்விச் சாலைகளும் ஆகும். சர்க்கார் தனது மாயப் பிரமைகளிலிருந்து விடுபட்டு, நல்ல கருத்துக்களைப் பெறுவதற்குப் போதனை தரும் கல்வி நிலையமே சட்டசபை.

★

ஆந்திர சர்வகலாசாலை மசோதாவின்படி சர்வகலாசாலையின் ஒரு முக்கியமான அங்கமாகிய செனட்டில் ஆசிரியர்களுக்குரிய ஸ்தானம் அறுபதுசதவிகிதத்திலிருந்து முப்பத்தேழு சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது; சிண்டிகேட்டின் ஆசிரியர்கள் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. இவர்களுக்குப் பதிலாக அத்தியட்சகர் சிலரை நியமனம் செய்வார். கல்வித்திட்ட அமைப்பு, போதனை மொழி, உயர் பட்டப் படிப்புக்கள் ஏற்படுத்துவது — ஆகிய எல்லாக் கொள்கைகளிலும் சர்க்காரின் யோசனைப்படியே சர்வகலாசாலை நடக்க வேண்டுமென்கிறது இம்மசோதா.

இது நிறைவேற்றப் பட்டால் சர்வகலாசாலையின் சுதந்திரமும் சுயாட்சிப் பொறுப்பும் அடியோடு குலைக்கப்படும் என்று ஆந்திர சர்வகலாசாலை எடுத்துக் காட்டியிருக்கிறது. இது உண்மை. அத்தியட்சகர் என்பவர் ராஜ்ய கவர்னரே ஆவார். அவர் மந்திரிசபையின் யோசனைப்படியே செயலாற்றுவது சம்பிரதாயம். எனவே, ஆந்திர சர்வகலாசாலை மசோதா ஷரத்துக்களின்படி, சர்வகலாசாலை என்பது அரசியல் கட்சிக் கருத்துக்களின் கருவியாகக் கூடிய நிலை ஏற்படும்.

சர்வகலாசாலை அரசியலிலிருந்து பூரணமாக விடுபட்டு அரசியல் நோக்கங்கள்—சூழ்ச்சிகள் இவற்றிலிருந்து பூரணமாக விடுபட்டுப் பண்பாட்டை வளர்ப்பதற்காகத் தனித்துச் சுதந்திரமாக இயங்கவேண்டிய நிறுவனமாகும். கூட்டுறவுச் சங்கங்களிலும், பஞ்சாயத்துக்களிலும், மற்றும் பல அமைப்புக்களிலும் கட்சி அரசியல் புகுந்து விட்டது போல் சர்வ கலாசாலையிலும் புக இடம் தருவோமாயின் அது பரிதாபகரமாகும்.



கண்ணைப் பறிக்கும் வெண்மை! கச்சிதமான தூய்மை! எல்லாம் ஸர்ப் செயல்...அதன் எல்லை கடந்த வல்லமை! ஏராளமான நுரை, சலவையே வெகு எளிது. சிறுவர் ஆடை, சட்டை, சேலை....எதற்கும் நிகரில்லாத வெண்மை, சிகரமான தூய்மை. கைப்பட வீட்டிலே சலவை செய்திடவே கைகண்ட துணை ஸர்ப்.

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

** செய்திப் படங்கள் **






● நெய்வேலியிலுள்ள 'ஸிராமிக்ஸ் அண்ட் ரிஃப்ராக்டரீஸ்' தொழிற்சாலைக்குச் சென்னை கவர்னர் விஜயம் செய்தார். தொழிற்சாலையின் தலைவர் திரு சித்ரா நாராயணசாமியும் டைரக்டர் விசுவநாதனும் அங்கு தயாரான பீங்கான் பொருள்களைக் கவர்னருக்குக் காண்பித்து விளக்குகிறார்கள்.

● கவிஞர் அரு. சோமசுந்தரனின் 'திருமுறைகள் விட்டு நூல்' கவிதை வெளியீட்டு விழாவில் அகிலன் பாராட்டுரை வழங்குகிறார்.

● ஃபைஸர் ஸ்தாபனத்தின் புரொட்டீன் சத்து அடங்கிய 'புரொட்டினெக்ஸ்' தயாரிப்புத் தொழிற்சாலைக்கான அஸ்திவாரக்கல்லை டாக்டர் படேல் இடுகிறார்.

● சென்னை நுண்கலைப் பிரியர்களுக்கு வாய்ப்பாகச் சென்னையிலுள்ள பிரிட்டிஷ் கௌன்சில் பிரிட்டிஷ் சிற்பக் கலைக் கண்காட்சியை 1966 ஜனவரி 13ந் தேதியிலிருந்து 22ந் தேதி வரை ராஜாஜி ஹாலில் நடத்தவிருக்கிறது. படம்: உலோகச் சிற்பத்தில் 'விழுந்த பறவை'.





வெற்றித் திருநகர்

அகிலன்



அத்தியாயம் பதினைந்து

அரசரின் லட்சியம்

தெற்கே நாகம நாயக்கர் புறப்பட்டுச் சென்றவுடன், வடக்கத்திய அபாயத்தைப் பற்றி ஆலோசிப்பதற்காகத் தமது சிற்றரசர்களையும் அமர நாயக்கர்களையும் சபையில் கூட்டியிருந்தார் சக்கரவர்த்தி. டில்லியின் ஆட்சி இப்ராஹிம் லோடியின் கொடுங்கோன்மையால் சீரழிந்து போயிருப்பதையும், அதை ஒழிப்பதற்காக லாகூர் சுல்தான் தௌலத்கான் காபூலிலிருந்து பாபர் என்ற அன்னியனைப் படையெடுத்து வருமாறு தூண்டியிருப்பதையும் அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

''காலம் மாறி வருகிறது. பரத கண்டத்தின் நான்கு எல்லைகளும் நன்கு காக்கப்பட்டால்தான் இனி இங்குள்ள எந்த நாடுமே பாதுகாப்போடு விளங்க முடியும். வரப்போகும் பகைவன் டில்லியோடு நிற்கமாட்டான். தெற்கில் மற்றொரு படைவெள்ளம் பாயப் போவதை, நாம் அதன் பிறப்பிடத்திலிருந்தே தடுத்து நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் இன்று டில்லிக்கு வரும் அபாயம் நாளைக்கு நமக்கே வந்து தீரும்'' என்றார் கிருஷ்ணதேவராயர்.

வடக்கில் நெடுந்தொலைவுக்குப் படையெடுத்துச் செல்வதில் உள்ள சிரமங்களையும் அவர் விளக்கினார். எண்ணற்ற வீரர்களும் ஆயுதங்களும் பெரும் பொருளும் அதற்கு வேண்டுமென்றும், அவை எல்லாவற்றையும் விட அனைவரும் ஒன்றுபட்டு நின்றாலே வெற்றி கிடைக்கும் என்பதையும் விளக்கினார்.

''மிகப் பெரிய சாதனையாக இருப்பதால்தான் இது பற்றி உங்கள் கருத்தை அறிந்து கொள்ள விரும்புகிறேன். நீங்கள் மனம் விட்டுப் பேசலாம்; எனக்காகத் தயங்க வேண்டாம்'' என்றும் கூறினார்.

கிருஷ்ணதேவ ராயரின் தம்பி அச்சுதராயரின் தலைமையில் சில சிற்றரசர்கள் சேர்ந்து கொண்டு, ''வடக்கே உள்ள சுல்தான்களும் ரஜபுத்திர ராணுக்களும் சிந்திக்க வேண்டிய விஷயம் இது'' என்றார்கள். மலைப்பும் திகைப்பும் மிகுந்திருந்தன அவர்களுடைய



பேச்சில். மேலும், டில்லிக்கும் விஜயநகரத்துக்கும் இடையில் பல சிறு நாடுகள் இருப்பதால், அவற்றைத் தாண்டிப் பகைவன் வந்தால் அப்போது அவனை எதிர்க்கலாம் என்றார்கள். உடனடியாக விஜயநகரத்துக்குப் பலன் தராத ஒரு முயற்சிக்காக மிகப் பெரிய போர் ஒன்று அவசியமில்லை என்று எடுத்துரைத்தார்கள்.

அவர்களுடைய முடிவான கருத்தைப் பிரதிபலிப்பதுபோல் அச்சுதராயர் கூறினார்.

''நமக்கு வடக்கிலும் மேற்கிலும் உள்ள பாமினி சுல்தான்களுக்குத் தான் நம்மைவிட ஆபத்து அதிகம். இப்போது நாம் வடக்கே படையெடுத்துச் சென்றால், அதனால் பயனடைபவர்கள் அவர்களாகவும் தியாகம் செய்பவர்கள் நாமாகவும் இருக்கும்.''

கிருஷ்ணதேவராயர் வருத்தத்தோடு சிரித்தார். ''நமக்குள் ஏற்பட்டிருக்கும் இந்தப் பிணக்கு என்றுதான் தீருமோ தெரியவில்லை! ஏன், அவர்களுக்காகவும் சேர்த்து நாம் போராடினால்தான் என்ன?

அவர்கள் எல்லோருமே இந்த மண்ணோடு கலந்து விட்டவர்கள். அவர்களில் இருவர் இந்துக்களாக இருந்து மதம் மாறியவர்களின் வழியில் வந்தவர்கள். மற்றவர்கள் இந்துப் பெண்களை மணந்துகொண்டு மக்களைப் பெற்றவர்கள். பாமினி சுல்தான்கள் வேறு எங்கிருந்தோ இங்கு வந்து விடவில்லை. நமக்குள் இனியும் எதற்காக இந்த வேற்றுமை? படையெடுத்து வந்தவெளி நாட்டுச் சுல்தான்களின் ஆட்சியை ஒழித்துவிட்டுப் பாமினி நாட்டை உருவாக்கியவர்கள்தாமே அவர்களும்?— நாட்டில் வாழும் குடிமக்களைப் பற்றியே யாரும் சிந்திக்க மாட்டேன் என்கிறீர்களே?''

அச்சுதராயரும் அவரைச் சார்ந்தவர்களும் மௌனம் சாதித்தார்கள். சக்கரவர்த்தியின் கட்டளையை மீறும் துணிவு அங்கு யாருக்குமே இல்லை யென்றாலும், அவர்கள் முழு மனத்தோடு அவர் கூறுவதை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

''நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?'' என்று சக்கரவர்த்தி தமது மருமகனை ராமராயரைக் கேட்டார்.

''பாமினி சுல்தான்கள் ஐவருக்கும் தனித் தனியே இதை எடுத்துச் சொல்லி, முதலில் அவர்களுக்குள் உள்ள பகைமையைத் தீர்க்க முயல்வோம். அவர்களும் நம்முடன் சேர்வதானால் நாம் சேர்ந்து புறப்படுவோம். இல்லாவிட்டால் விட்டுவிடுவோம்.''

எல்லோருமே இந்த ஆலோசனையை ஒருமுகமாக ஏற்றுக் கொள்வதாகக் கூறினார்கள். அப்படி ஏற்றுக் கொண்டதற்கு முக்கியமான காரணம் பாமினி அரசர்கள் அதற்கு உடன்படமாட்டார்கள் என்று அவர்கள் நிச்சயமாக நம்பியதுதான் !

''உங்களை நான் புரிந்து கொண்டு விட்டேன்!'' என்று சிரித்துக் கொண்டே கூறினார் சக்கரவர்த்தி; ''அவர்களை நீங்கள் நம்பவில்லை; ஆனால் நான் நம்புகிறேன்!''

அமைச்சர் சாளுவநரசிம்மரிடம் அவரது கருத்தைக் கேட்டார் கிருஷ்ணதேவராயர். நரசிம்மர் மறுமொழி கூறுவதற்குத் தயங்கினார். ''சக்கரவர்த்திகள் கருத்து எதுவோ அப்படிச் செய்யலாம்'' என்று தமது கருத்தைக் கூறாமல் தப்பிவிட முயன்றார். சக்கரவர்த்தி அவரை விடவில்லை.

'' நினைப்பதைச் சொல்லி விடுங்கள் !'' என்றார் கோபத்துடன்.

''அவர்கள் உடன்பட்டு வந்தாலே நாம் இதை மேற்கொள்ளலாம். இல்லாவிட்டால் நாம் வடக்கே செல்லும் சமயத்தில் பீஜப்பூர் அதில்ஷா நம்மையே தாக்க முற்படலாம்'' என்றார் சாளுவ நரசிம்மர்.

''நாம் திரும்பி வராமலா போய் விடுவோம் ?'' என்று சீறினார் சக்கரவர்த்தி. பிறகு சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, ''சரி, உங்கள் கருத்தையே நான் இதில் ஏற்றுக் கொள்கிறேன்; ஒற்றுமையாக வாழாவிட்டால் இனி வாழ்வே நமக்கு இல்லை என்ற காலம் இப்போது வந்திருக்கிறது: இதை நீங்கள் உணர்ந்தால் போதும்'' என்று கூறிச் சபையைக் கலைத்தார்.

பாமினி நாடுகளுக்குத் தூதுவர்களையும் அன்றே அவசரமாக அனுப்பி வைத்தார். விவரமாக ஓலைகள் எழுதச் செய்து, ஒவ்வொருவரும் அவரவர் சொந்த நலனுக்காகவே அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாக வற்புறுத்தியிருந்தார். தம்மோடு மனவேறுபாடு கொண்டிருந்த பீஜப்பூர் அதில்ஷாவுக்கு மட்டும் பகைமையை மறந்து ஒன்றுபடுமாறு கேட்டுக் கொண்டார்.

பிற்பகலில் சக்கரவர்த்தியும் விசுவநாதனும் தனித்திருந்தனர். சக்கரவர்த்தி என்றுமே இல்லாத மனநிலையில் மிகவும் குழப்பத்தில் அகப்பட்டவர்போல் காணப்பட்டார். அது வரையிலும் அவருக்கு ஏற்பட்டிராத ஓர் உணர்ச்சி, அவர் மட்டிலும் தனித்து விடப்பட்டது போன்ற ஓர் உணர்ச்சி, அவரை வாட்டத் தொடங்கியது. அவரது சாம்ராஜ்யத்தின் தூண்களாக விளங்கிய சிற்றரசர்களே அவரைச் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை என்பதை அவர் கண்டுகொண்டார்.

விசுவநாதன் மெதுவாகத் தாம்பூலப் பேழையைத் திறந்து சக்கரவர்த்திகளுக்குத் தாம்பூலத்தை மடித்து நீட்டினான். அவரது போராட்டத்தை அவனால் மட்டிலும் உணர முடிந்தது.

''ஓ! நீ என் அருகில் இருக்கிறாயா?'' என்று கனிவோடு கேட்டுவிட்டு, அதை வாங்கித் தரித்துக் கொண்டார். பிறகு ஒரு பேழையைச் சுட்டிக்காட்டி அதை எடுத்து வரச் செய்தார். அதற்குள்ளிருந்த திறவுகோல்களையெல்லாம் எடுத்து அவன் கையில் கொடுத்தார்.

''விசுவநாதா! விஜயநகரம் வலிமையோடு நிலைத்திருக்கும் வரையில்தான் இங்குள்ள ஒவ்வொருவரின் வாழ்வும் நிலைத்திருக்கும். இது நிலைத்திருக்க வேண்டுமானால் தெற்கில் பாண்டிய நாடு ஒரு கோட்டை போல் விளங்க வேண்டும். அதேபோல் வடக்கே டில்லியும் ஒரு பாதுகாப்பு அரண் போல் விளங்க வேண்டும். இந்தக் கண்ணோட்டமோ விழிப்போ இன்னும் நம் அமர நாயக்கர்களுக்கே ஏற்படவில்லை.

''ஒவ்வொருவரும் அவரவர் வீட்டைச் சுற்றியோ ஊரைச் சுற்றியோ கோட்டை கட்டி வாழ நினைக்கிறார்களே தவிர, நாட்டுக்கு ஒரு கோட்டை வேண்டும் என்ற நினைவு அவர்களுக்கு வரவில்லை. நாட்டுக்கு ஓர் அபாயம் வந்தால் இவர்களுடைய சொந்தக் கோட்டையும்தானே பறி போகும்?''

இதைக் கேட்டுப் பேரதிர்ச்சியுற்றான் விசுவநாதன். அவனுடைய தந்தை நாகம நாயக்கர், 'நமக்கென்று நாம் தனிக் கோட்டை கட்டி வாழ வேண்டாமா ?' என்று அவனிடம் தம் ஆவலை வெளியிட்ட நினைவு வந்ததால், அவனுக்கு அது தாங்க முடியாததாக இருந்தது.

''உட்பகைக்குக் காரணமே தன்னலந்தான். உட்பகையை இவர்கள் அழிக்கவில்லையானால் நாளைக்கு விஜயநகரமும் அழிந்துவிடும்; பாமினியும் அழிந்து விடும். இவர்களே தங்களில் ஒருவனை ர பொ ர (ர ் அழிக்க முற்படும் போது, மூன்றாவது ஒருவன் வந்து இவர்கள் இருவரையும் தலைதூக்க முடியாதபடி செய்து விடுவான். இருக்கட்டும். பாமினி நாடுகளில் பீஜப்பூரும் கோல்கொண்டாவும்



எக்காலத்திலும்
மேன்மையானது
அரவிந்த
இப்பெயர் மிக கீர்த்தியான ஜவுளி ரகங்களின் சின்னம்
விதவிதமான திறுசுகள்
ஸான்ப்ஃ பாப்ளின்ஸ்:
ஷர்ட்டிங்ஸ்: ஸ்டிரைப், டாப்பி, செக், பைஜாமா
தோதீஸ்: மெர்ஸிரைஸ்ட் லான்: 5531, ஸூட்டிங்ஸ்: காபர்டீன்
பிரின்ட்ஸ்: ப்ரின்டட் லான்ஸ், வாயில்ஸ், பாப்ளின்ஸ்
நெசவான கலர் புட்டாக்கள்
2 x 2 கவர்ச்சியான முழு வாயில்கள் - லினோவிலும், புட்டாக்களிலும்
·SANFORIZED·
Arvind Quality
டெபிலேஸ்ட் * மற்றும்
டெபிலேஸ்ட் டபுள்
டெஸ்டெட்
அரவிந்த் மில்ஸ் லிமிடெட்
அஹமதாபாத்
* REGISTERED USER

மட்டிலும் நம்மோடு இணங்கி வந்தால் போதும்!''

மனம் திறந்து அவர் வழக்கமாக யாரிடமும் பேசுவதில்லை. விசுவநாதனிடம் அவர் கொண்டிருந்த நம்பிக்கையே அவரை இந்த அளவுக்கு அவனிடம் பேச வைத்தது.

''நான் உயிருடன் உள்ளவரையில் தங்களுடைய லட்சியத்துக்காகவே போராடுகிறேன், சக்கரவர்த்திகளே!'' என்றான் விசுவநாதன் நாத் தழுதழுக்க. ''தாங்கள் மிகவும் உயரத்திலிருந்து எதையும் காண்கிறீர்கள்; தொலைவில் உள்ள நிலப் பரப்பும் தொலைவில் உள்ள எதிர்காலமும் தங்கள் பார்வையில் படுகின்றன; வருங்காலச் சந்ததிகளுக்காகவும் தாங்கள் சிந்திக்கிறீர்கள்'' என்றான்.

''விசுவநாதா! நீ ஒருவனாவது என்னைப் புரிந்து கொள்ள முயல்கிறாய்; இதுவே எனக்கு ஆறுதல் தருகிறது'' என்று தமது கரங்களில் அவன் கரத்தை நெடுநேரம் வைத்திருந்தார்.

பிறகு திடீரென்று கடமையின் நினைவு வந்து விட்டது போல், ''பொக்கிஷத்தின் பொறுப்பு உன்னிடமிருந்தால் அது என்னிடமிருப்பது போலாகும்; கோடானுகோடி குடி மக்களின் நல்வாழ்வுக்குரிய பொருள் இப்போது உன்னிடம் இருக்கிறது'' என்றார்.

நன்றி கூறினான் விசுவநாதன்.

''நம்முடைய சாம்ராஜ்யம் தங்கச் சுரங்கங்கள் கொண்டது; வைர வயல்கள்கொண்டது; நன்முத்துக்களும் நம்மிடம் ஏராளமாக இருக்கின்றன. இந்தப் பரதகண்டத்தில் வேறு எங்குமே இல்லாத அளவுக்கு நாம் பொன்னையும் பொருளையும் குவித்து வைத்திருக்கிறோம். ஆனால் இவையெல்லாவற்றையும்விட நான் எதை மிக உயர்ந்த செல்வமாகக் கருதுகிறேன், தெரியுமா ?''

விசுவநாதன் சக்கரவர்த்தியை ஏறிட்டுப் பார்த்தான்.

''மனிதனைவிட மிக உயர்ந்த செல்வம் இந்த உலகத்தில் இல்லை. அவன் மனிதனாக, மனிதப் பண்புகள் கொண்டவனாக, பரந்த மனமுள்ளவனாக வாழ வேண்டும். உன்னை நான் மனிதன் என்று நம்புகிறேன். நீ இந்த நம்பிக்கையைக் காப்பாற்றினால் போதும்...!''

சக்கரவர்த்திகள் அவனுக்கு விடை கொடுத்து அனுப்பி வைத்தார். வாய்விட்டுச் சொல்ல முடியாததொரு புதிய அனுபவத்தோடு அவன் தன் மாளிகைக்குச் செல்வதற்காகக் குதிரையின் மீது ஏறி அமர்ந்தான்.

வழியில் அமைச்சர் சாளுவநரசிம்மரின் மாளிகைக்கு முன்பாகச் சிவிகைகள் பல காத்திருப்பது தெரிந்தது. சிவிகைகளின் தோற்றத்திலிருந்து அங்கே சில அமரநாயக்கர்கள் அமைச்சரைத் தேடி வந்திருக்க வேண்டுமென்று கண்டுகொண்டான். அவர்களுக்கு இங்கு என்ன வேலை? ஏனோ அவன் மனம் துணுக்குற்றது.

ஒரு கணம் தயங்கிவிட்டு, குதிரையிலிருந்து மெல்ல இறங்கினான் அவன். அங்கு சென்று நடப்பதைக் காண வேண்டுமென்ற துடிப்பு அவனுக்கு ஏற்பட்டது. ஆனால் லட்சுமி ஓடோடியும் வந்து அவனை வரவேற்று மேல்மாடத்துக்கு அழைத்துச் சென்றாள். அவன் உள்ளே செல்வதை அவளும் விரும்பவில்லையா ?

அத்தியாயம் பதினாறு

இரகசியக் கூட்டம்

சாளுவ நரசிம்மரின் மாளிகைக்கு முன்பு காணப்பட்ட சிவிகைகளைக் கண்டுவிட்டு அதற்குள் நுழைவதற்கு முயன்ற விசுவநாதன் அப்படி ஒரு வரவேற்பை லட்சுமியிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. அவசரமும் பரபரப்புமாக ஓடோடியும் வந்து லட்சுமி அவனை வழிமறிப்பது போல் நின்றுகொண்டு மேல் மாடத்துக்கு அழைத்துச் சென்றாள். அவளுடைய விசித்திரமான போக்கு அவள்மீது அவனை ஐயம் கொள்ளச் செய்தது.

அப்படி அவன் ஏதும் நினைத்துவிடக் கூடாதே என்பது போல் லட்சுமியும் அளவுக்கு மீறிய பரிவோடு நடந்துகொண்டாள். ''வாருங்கள், நாம் அங்கே சென்று தனித்துப் பேசுவோம்!'' என்று அவன் காதருகில் கூறி, அவனை மேல் மாடத்தின் படிகளுக்கு அழைத்துச் சென்றாள். என்றாலும் விசுவநாதன் அவளிடம் ஏதோ ஒரு மாறுதலைக் கண்டு கொண்டான். வெளியில் காத்திருந்த சிவிகைகள், உள் வாயில் கதவருகே கழற்றி வைக்கப்பட்டிருந்த மிதியடிகள், கட்டுக்காவல் யாவுமே அப்போது மாளிகைக்குள் சிலர் கூடியிருக்கிறார்கள் என்பதை அவனுக்குக் காட்டிக் கொடுத்து விட்டன.

எப்போதுமே சாளுவரின் மாளிகைக்குள் அவன் அனுமதியோடு நுழைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதில்லை. அவனுடைய சொந்த மாளிகையாகவே அதையும் அவன் பாவித்து வந்தான். முன்னைவிட இப்போது அங்கு அவனுக்கு இருவகையான சலுகைகளுமிருந்திருந்தன. அவன் இப்போது சாம்ராஜ்யத்தின் தனாதிகாரி. அவனை இன்முகத்துடன் வரவேற்பதற்கு லட்சுமியும் காத்திருந்தாள்.

லட்சுமியின் வரவேற்பில் அவனால் குறை காண முடியவில்லை என்றாலும் கதவருகே நின்றுகொண்டிருந்த காவல் வீரர்களின் முகங்கள் அவனுக்கு என்னவோபோலத் தோன்றின.

''லட்சுமி! நான் தனாதிகாரி என்ற முறையில் உன் தந்தையை இப்போது காண வந்திருக்கிறேன்'' என்றான் விசுவநாதன்.

''இருந்தால் என்ன? கூட்டத்தில் அவர்களைக் கண்டு பேசுவதைவிடப் பிறகு தனித்துப் பேசலாமே! அமைச்சரானதிலிருந்து இப்படித்தான் அவர்களைப் பலர் சூழ்ந்து விடுகிறார்கள். நான்கூட முன்போல் அவர்களை அருகிலிருந்து கவனிக்கமுடிவதில்லை.''

விசுவநாதனுக்கு ஓர் உண்மை அப்போது பளிச்சென்று புலப்பட்டது. அவர் பழைய சாளுவ நரசிம்மரல்லர். அமைச்சராக உயர்ந்து விட்டவர். அப்பாஜி என்ற பெயர் பெற்ற இராஜதந்திரியின் பொறுப்பில் அப்பாஜிக்குச் சொந்தமாக இருந்த மாளிகையில் அவரைப் போலவே வாழ்பவர். அவன் அதிகாரியாக உயர்ந்து இன்னும் சில தினங்கள் கூட ஆகவில்லை. ஆனால் அவரோ ஒரு மாதத்துக்கு முன்பே அமைச்சராகி விட்டார்.

படிகளில் ஏறிக் கொண்டிருந்த விசுவநாதன் தயங்கி நின்றான். "என் மாளிகைக்குச் சென்றுவிட்டு நாளைக்கு வருகிறேனே!" என்று அரை மனத்தோடு கூறினான்.

அவனுடைய மனநிலையைப் புரிந்து கொண்ட லட்சுமி கலகலவென்று சிரித்துவிட்டு, "உங்களுக்குக் கோபம் வந்துவிட்டது போலிருக்கிறது!" என்றாள்.

அவன் பதிலளிக்காமல் அவளது பல்வரிசைகளின் மின்னொளியைக் கவனித்தான்.

"தவறாக நினைத்துக் கொள்ளாதீர்கள். அவர்கள் அங்கு ஏதோ இரகசியம் பேசுவார்கள் போலிருக்கிறது. நாமும் இங்கே இரகசியமாய்ப் பேசலாம் என்றுதான் தனியாக உங்களை அழைத்து வந்தேன்" என்றாள் இனிய குரலில்.

"என்னைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தானே நீ காவலுக்கு வந்து நின்றாய்?"

"காவலுக்கா? அதற்கு நான் எதற்கு? அதற்காகத்தான் காவலர்கள் இருக்கிறார்களே...?"

"அவர்களுக்கு என்னைத் தடுக்கத் துணிவிருக்காது!"

"என்னைவிட உங்களுக்கு என் அப்பாதான் முக்கியமென்றால் இப்போதே அங்கு செல்லுங்கள்; நான் ஒன்றும் உங்களைத் தடுக்கவில்லை" என்று சிணுங்கினாள் லட்சுமி.

விசுவநாதன் ஒரு கணம் யோசனை செய்தான். எங்கே அவன் திரும்பிவிடப் போகிறானோ என்று பயந்தவள் போல், "வாருங்களேன், யார் வந்திருக்கிறார்கள் என்ற விஷயத்தைச் சொல்கிறேன்" என்று கூறி, அவனை அழைத்துக் கொண்டு மேல் மாடத்துக்குச் சென்றாள் அவள்.

மேல் மாடத்துக் கூடத்தில் நுழைந்தவர்கள் அங்கு உட்காரவில்லை. லட்சுமி அவனைத் தன்னுடைய அறைக்கு அழைத்துச் சென்றாள். இளவரசிகளின் அறையை ஒத்த செல்வச் சிறப்போடும் பேரழகோடும் விளங்கியது அது. வாசனைத் திரவியங்களின் நறுமணம், திரைச் சீலைகளின் வண்ணம், ஆசனங்களின் மென்மை எல்லாமே லட்சுமியின் கலை உள்ளத்தை அவனுக்கு எடுத்துக் காட்டின. சின்னஞ்சிறு வீணையொன்று அவளுடைய கட்டிலின் மீது வைக்கப் பெற்றிருந்தது. விசுவநாதனுக்கு உடன்பிறந்த தங்கையோ தமக்கையோ இல்லாததால், இளம் பெண்களின் தனி அறையை அவன் அதற்கு முன்பு கண்டதில்லை. வியப்போடு அங்கிருந்த ஒவ்வொரு பொருளையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றான் விசுவநாதன்.

லட்சுமி அதற்குள் மெல்லக் கூடத்துக்கு வந்து, அங்கிருந்து சாளரத்தின் வழியாகக் கீழே எட்டிப் பார்த்தாள். அமைச்சர் சாளுவ நரசிம்மரும் கிருஷ்ணதேவராயரின் தம்பி அச்சுதராயரும் அருகருகே அமர்ந்திருக்க, சுற்றிலும் சில அமரநாயக்கர்கள் கூடியிருந்து பேசிக் கொண்டிருந்தனர். சிலருடைய குரலை மட்டும் லட்சுமி தெளிவாகவே கேட்க முடிந்தது.


சட்டென்று திரும்பிச் சென்று தன் அறைக்குள் நுழைந்தாள் லட்சுமி. விசுவநாதன், பொன்னாலும் வெள்ளியாலும் தந்தத்தாலும் செய்யப் பெற்று ரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டிருந்த அவளுடைய வாசனைத் திரவியச் சிமிழ்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டிருந்தான். மலர் போலும் அன்னம் போலும் பல்வேறு மிருகங்கள் போலும் அந்தச் சிமிழ்கள் செதுக்கப்பட்டிருந்தன.

வியப்போடு லட்சுமியை அவன் திரும்பிப் பார்த்தான்.

"என்ன இப்படிப் பார்க்கிறீர்கள்?"

"உன்னுடைய அந்தப்புரம் ஒரு கலைக் கூடமாகவல்லவோ இருக்கிறது?"

லட்சுமிக்கு இது பெருமையாக இருந்தது. தஞ்சையிலும் விஜயநகரத்திலும் அவள் வாழ்ந்தவளாதலால் தமிழகத்தின் அழகுக் கலையையும் தெலுங்கு நாட்டு அழகுக் கலையையும் அவள் நன்கு பயின்றிருந்தாள். அந்தக் கலையில் தேர்ச்சி பெற்றவர்களையே



சாளுவ நரசிம்மரும் அவளுக்குப் பணிப்பெண்ணாக நியமித்திருந்தார்.

"நாம் இங்கேயே தங்கிப் பேசுவோமா? அல்லது தோட்டத்தில் சிறிது நேரம் உலவி வருவோமா?" என்று கேட்டாள் லட்சுமி. அந்த இடத்தில் இருந்தால் கீழேயிருந்து பேச்சுக்களின் குரல் கேட்கக் கூடும் என்ற தவிப்பு அவளுக்கு இருந்தது.

விசுவநாதனுக்கும் அந்த அறைக்குள் இருந்தால் ஏதோ ஒரு வகை மன மயக்கம் ஏற்பட்டு விடும் போல் தோன்றியது. விஜய நகரத்தில் ஆடவரும் பெண்டிரும் மண மாகாத பருவத்தில் நெருங்கிப் பழகும் வழக்கம் குறைவுதான். பெண்டிரின் தனி அறைக்குள் பிற ஆடவர் நுழையவும் முடியாது. ஆனால் சாளுவநரசிம்மர் விசுவநாதனை வேற்று மனிதனாக நினைக்கவில்லை. லட்சுமி அவருடைய ஒரே புதல்வி என்பதாலும், விசுவநாதனுக்கு அவருடைய மனத்திலும் ஓரிடம் இருந்ததாலும், லட்சுமி அவனை அங்கு வரவழைத்திருந்தாள்.

ஆனால் விசுவநாதனால் அந்த அழகு மயக்கத்தை நெடுநேரம் தாங்க முடியாதுபோல் தோன்றியது.

"நாம் தோட்டத்துக்கே சென்று விடுவோம்!" என்று நீண்ட பெருமூச்சுவிட்டவாறே கூறினான் அவன்.

மேல்மாடத்தைக் கடந்து அதன் பின் புறத்துப் படிகளில் இறங்கி அவர்கள் தோட்டத்துக்குள் சென்றார்கள். திராட்சைக் கொடிகளிலிருந்து முத்துக் குவியல்கள் தலைகீழாகத் தொங்குவதைப் போன்று கொத்துக் கொத்தாகத் திராட்சைகள் குலுங்கின. நன்றாகக் கனிந்திருந்த ஒரு கொத்தைக் கிள்ளி எடுத்துக் கொண்டே விசுவநாதனுக்கு முன்னால் நடந்தாள் லட்சுமி. திராட்சைப் புதர்களை அடுத்துப் பெரிய பெரிய மரங்கள் வளர்ந்திருந்தன. அவற்றினிடையே வெளிக் கோட்டைச் சுவரை ஒட்டினாற்போல் ஒரு பளிங்கு மேடையிருந்தது. அதன் ஓரமாகச் சென்று அமர்ந்தாள் லட்சுமி. விசுவநாதனும் மறு ஓரத்தில் அமர்ந்தான். அங்கிருந்து அவர்கள் பார்த்தபோது, சுற்றிலும் மரங் களடர்ந்த ஒரு காட்டுக்குள் இருப்பது போன்ற உணர்வே அவர்களுக்கு ஏற்பட்டது. கிளிகள் மரக் கிளைகளினூடே பாய்ந்து மழலை பேசிக் களித்துக் கொண்டிருந்தன.

"அப்பாஜி இருந்த போது நான் இந்த மாளிகைக்கு வந்திருக்கிறேன். இங்கே இப்படி ஓர் இடம் இருப்பது எனக்குத் தெரியாது" என்றான் விசுவநாதன்.

"அதிகாரிகளுடன் அவர் அந்தரங்கமாகப் பேசுவதென்றால் இங்குதான் பேசுவாராம்" என்றாள் லட்சுமி. இப்படிச் சொல்லிவிட்டு அவனிடம் திராட்சைக் கொத்தை நீட்டினாள்.

அந்தரங்கப் பேச்சு என்று அவள் கூறியவுடனேயே விசுவநாதனுக்கு அப்போது மாளிகைக்குள் நடைபெறும் பேச்சைப் பற்றிய நினைவு வந்து விட்டது. அவளுடைய விருப்பத்துக்காகத் திராட்சையைப் பெற்றுக் கொண்டு, "ஏதோ சொல்லப் போவதாக இங்கு அழைத்து வந்தாயே?" என்று அவள் முகத்தைப் பார்த்தான்.

"சக்கரவர்த்திகளின் தம்பியார் அச்சுதராயர் இன்னும் சிலரோடு அப்பாவைக் காண வந்திருக்கிறார். அவர்தாம் தமது பேச்சு முடியும் வரையிலும் யாரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாமென்று கட்டளையிட்டார். ஆனால் தாங்கள் இங்கே வரக்கூடுமென்று அப்பா எதிர்பார்த்தார்கள் போலிருக்கிறது. அதை அச்சுதராயரிடம் வெளியிடவும் அப்பாவுக்கு விருப்பமில்லை. அதனால்தான் தாங்கள் ஏதும் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாதே என்று என்னை வாயிலில் காத்திருக்கச் செய்தார்கள்."

பெரியதொரு மனச் சுமை நீங்கியது போலிருந்தது விசுவநாதனுக்கு. சாளுவ நரசிம்மரைப் பற்றித் தவறாக நினைத்து விட்டதை எண்ணித் தனக்குள் வருந்தினான்.

"லட்சுமி! அச்சுதராயர் எதற்காக வந்திருக்கிறார் என்று தெரியுமா?"

"அரண்மனையில் ஏதும் ஆலோசனை நடந்திருக்கும். அது பற்றிப் பேச வந்திருப்பார்" என்றாள் லக்ஷ்மி.

விசுவநாதன் நீண்ட சிந்தனையில் ஆழ்ந்து விட்டான். அரண்மனையில் அச்சுதராயரின் போக்குத்தான் சக்கரவர்த்திக்கு மிகுந்த மனக் கலக்கத்தைக் கொடுத்திருந்தது. சக்கரவர்த்தி அவனிடம் தாம் தனித்து விடப்பட்டதாகக் கூறியது அப்போது விசுவநாதனின் நினைவுக்கு வந்தது.

"ஒன்றுமே பேசாமல் இருக்கிறீர்களே!" என்றாள் லட்சுமி.

"தொலைவில் வரும் அபாயம் ஒன்று தீர்க்கதரிசியான சக்கரவர்த்திகளுக்குத் தெரிகிறது. அது மற்றவர்களுக்குத் தெரியவில்லை. அது பற்றி நான் உன் அப்பாவிடம் பேச நினைத்தேன். அதற்குள் மற்றவர்கள் முந்திக் கொண்டு விட்டார்கள்."

"இதில் அப்பா என்ன செய்ய முடியும்?"

"அவர் மனம் வைத்தால் மற்றவர்களை யெல்லாம் சக்கரவர்த்திகளின் வழிக்குத் திருப்ப முடியும். சக்கரவர்த்திகள் கட்டளையிட்டுத் தமது அதிகாரத்தால் இதைச் செய்ய விரும்பவில்லை. மற்றவர்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு இருந்தால் வடக்கே படையெடுத்துச் சென்று, வரவிருக்கும் ஆபத்தை முறியடிக்க முடியுமென்று நம்புகிறார். ஆனால்......?"

"ஒருவேளை அப்பாவும் நீங்கள் நினைப்பதையே செய்து கொண்டிருப்பார். அவருடைய இராஜதந்திரத்தால் மற்றவர்களைச் சக்கரவர்த்திகளின் வழிக்குத் திருப்பிவிடக் கூடியவராயிற்றே அவர்!"

விசுவநாதனுக்குத் திடீரென்று புதிய நம்பிக்கை பிறந்தது. "வா, நாம் போய் அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் பேசுவதைக் கவனிப்போம்" என்று உற்சாகத்துடன் எழுந்து மேல்மாடத்துக்குச் சென்றான்.

லட்சுமியால் அவனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. வேறு வழியின்றி அவனைப் பின்பற்றிச் சென்றாள். (தொடரும்)



செம்பாலான
அடிப்பாகம் கொண்ட
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல் பாத்திரங்களில்
சுகாதார ரீதியாக
உங்கள் உணவைச்
சமையுங்கள்!

- உணவு காந்துவதோ, தீய்ந்து போவதோ இல்லை.
- சூடு சமமாகப் பரவுகிறது.
- சுத்தம் செய்வதும், துப்புரவாக வைத்துக்கொள்வதும் சுலபம்—கழுவித் துடைத்தால் போதும்—வேறெதுவும் ...செய்யவேண்டியதில்லை!

செம்பாலான அடிப்பாகம் கொண்ட ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் சமைப்பதற்குச் சிறந்தவை. மேலும், அவை ஆயுட்காலம் வரை நீடித்துழைக்கின்றன.

அவற்றை இன்றே வாங்குங்கள். அவற்றில் சமைப்பதே பேரானந்தம் அளிக்கும்...சுத்தம் செய்வதோ [illegible]

அவை உங்கள் வட்டாரத்தில் கிடைக்காவிட்டாலும், தயாரிப்பாளர்களின் பிரதிநிதிக்கு எழுதுங்கள்:

மகாலக்ஷ்மி மெடல் இண்டஸ்ட்ரீஸ், 192 B, [illegible] ரோடு, [illegible]

இந்த வியாபாரச் சின்னத்தைப் பார்த்து வாங்குங்கள் **Meghdoot**


ஆரோக்
கியமான.
பளபளக்கும்
கூந்தலுக்கு...
டாடாவின் நறுமண
கோகோனட் ஹேர் ஆயில்
தூய தேங்காய் எண்ணெய் அடங்கியது.
டாடாவின் கோகோனட் ஹேர் ஆயில் தூய தேங்காய் எண்ணெய் மட்டுமே என்பதை அறிவுள்ள அன்னையர் அறிவர். கூந்தலின் வேர்களுக்குச் சத்தூட்டி, கூந்தல் அடர்த்தியாகவும், ஆரோக்கிய மாகவும் இருக்கச் செய்கிறது. தவிர, ரோஜா, லேவண்டர், மல்லிகை, புஷ்பா என் மனோகரமான நாலு நறுமணங்களுடனும் வருகிறது டாடாவின் கோகோனட் ஹேர் ஆயில்.
கூந்தல் எப்பொழுதும் எழிலுடன் மிளிர டாடாவின் கோகோனட் ஹேர் ஆயில்.
Tata's Perfumed
HAIR OIL
COCONUT
SHBI-TCO-96



சேவைக்கு ஒரு சகோதரி

மோனிகா ஃபெல்டன் - அநுத்தமா

2

1911ம் வருடம் சரத்காலத்தில் சுப்புலக்ஷ்மிக்கும் மிஸ். லின்ச்சுக்கு மிடையே முதல் சந்திப்பு ஏற்பட்டது.

மிஸ் லின்ச் விடுமுறையில் இங்கிலாந்து சென்றிருந்தாள். அவள் திரும்பி வந்ததும், தான் சென்னையில் தங்கி இருந்துகொண்டு வேலை பார்க்க வேண்டுமென்ற உத்தரவு பற்றிக் கேள்வியுற்று மிகவும் திருப்தி கொண்டாள். ஆனால் அந்தத் திருப்தி அதிக நேரம் நீடிக்கவில்லை. பிராமண விதவைகளுக்கு விடுதி ஸ்தாபிக்க வேண்டும் என்ற தன்னுடைய திட்டம் மூன்றரை வருடங்களாகப் பரிசீலனை செய்யப்பட்டும் இன்னும் சர்க்காரால் அனுமதிக்கப்படவில்லை என்று அறிந்ததும் அவள் ரொம்பவும் ஏமாற்றமடைந்தாள்.

அப்போதுதான் அவள் சுப்புலட்சுமிக்குச் சொல்லியனுப்பினாள்.

இந்தப் பேட்டியை வெகுநாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சுப்புலக்ஷ்மிக்கு, அந்த ஆவல் தந்த உள்ளக் கிளர்ச்சி காரணமாய் நடுக்கமாகவே இருந்தது. எப்போதும் போல் அவள் கவனத்தோடு ஆடை அணிந்துகொண்டாள். அழகான காஞ்சிபுரம் பட்டுப் புடவையைத் தழையத் தழைய, கச்சிதமான கொசுவங்களுடன் கட்டிக் கொண்டு ரவிக்கை தெரியாமல் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டிருந்தாள். நேர் வகிடு எடுத்து, அவளது அழகிய கருங்கூந்தல் பளபளவென்று வாரப்பட்டுப் பின்னால் இறுக முடியப்பட்டிருந்தது. வெண்ணீற்றின் மூன்று வரிகள் நெற்றியை அலங்கரித்தன. எப்போதும் அணிந்திருக்கும் வைரத் தோடுகள் செவியில் மின்னின.

அவளுடைய முதல் விசிட்டிங் கார்டு (Visiting card) அப்பொழுதுதான் அச்சகத்திலிருந்து வந்திருந்தது. அலுவலகத்தின் முன் பகுதியில் இருந்த குமாஸ்தாவினிடம் அதைக் கொடுத்துவிட்டுக் காத்திருந்தாள்.

ஒரு மணி நேரம் போல் தோன்றியது என்றாலும் உண்மையில் ஒரு நிமிஷப்

தான் இருக்கக் கூடும். கடிகாரத்தின் 'டிக் டிக்' என்ற ஒலி கேட்டுக்கொண்டிருந்தது. அவள் உள்ளே அழைக்கப்பட்டாள்.

மிஸ் வின்ச் மேஜையின் பின்னால் அமர்ந்திருந்தாள். அவளுடன் வேலை செய்தவர்கள் கூறியது போல் கம்பீரமானதொரு தோற்றம். சுப்புலக்ஷ்மியோ உயரத்தில் ஐந்தடிக்கும் ஓர் அங்குலம் போல் குறைவாக இருக்கலாம், மூங்கில்போல் ஒல்லியான சரீரம் அவளுடையது. இப்பொழுது தான் மிகவும் சிறியவள் என்ற உணர்ச்சியைப் பெற்றாள் சுப்புலக்ஷ்மி.

''உட்காருங்கள்'' என்று அன்புடன் கூறினாள் மிஸ் வின்ச்.

சுப்புலக்ஷ்மி அவ்வாறே செய்தாள். மிஸ். வின்ச்சின் தலை குனிந்திருந்தது. அவள் சுப்புலக்ஷ்மியைப் பார்க்கவில்லை. அவளுடைய விசிட்டிங் கார்டைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள். இடமான மோவாயும், கோபமாகவோ சிரிப்பை அடக்க முயன்றுகொண்டோ இருப்பது போல் வாயை இறுக மூடிக் கொண்டிருக்கும் அதரங்களும் படைத்த அவள் முகம் சுப்புலக்ஷ்மிக்கு நன்றாகத் தெரிந்தது. விசிட்டிங் கார்டில் சிரிக்கும் படி ஒன்றும் இல்லை என்பதை சுப்புலக்ஷ்மி அறிவாள். ஆயினும் மிஸ் வின்ச்சுக்குக் கோபம் வருவானேன்? தன்னுடைய கார்டில் தன் தகப்பனாரின் பெயரையும் அச்சடித்திருக்க வேண்டும் என்று அவள் எதிர்பார்த்தாளோ? மிஸ் வின்ச் வெகு நாட்கள் தென்னிந்தியாவில் இருந்ததில் நம் பெயர் எழுதப்படும் முறையை அறிந்திருக்க வேண்டுமே? மேனாடுகளில் குடும்பப் பெயரை உபயோகிப்பது போல் நம் ஊரில் சொந்தப் பெயரை அல்லவா முழுமையாக எழுதுவோம்? பெயருக்கு முன் சொந்த ஊரின் பெயர், தகப்பனாரின் பெயர் ஆகியவற்றின் முதல் எழுத்துக்களை மட்டும் எழுதும் பழக்கத்தை மிஸ் வின்ச் அறிந்திருக்க வேண்டுமே? சிலர் சொந்த ஊரைக் குறிப்பிடும் எழுத்தை விட்டுவிடுவதும் உண்டு. ஆனால் சுப்புலக்ஷ்மியின் விசிட்டிங் கார்டில் இரு எழுத்துக்களுமே இருந்தன. 'ஆர்' என்பது அவர்களது பூர்வீக ஊரான ரிஷியூருக்காகவும், 'எஸ்' என்பது தகப்பனாரின் பெயரான சுப்பிரமணிய ஐயர் என்பதற்காகவுமிருந்தன. அதனால் அதில் ஸிஸ்டர் ஆர்.எஸ். சுப்புலக்ஷ்மி என்றிருந்தது ஆங்கிலத்தில்.

மிஸ் வின்ச் நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்கள் கடல் நீரைப் போல் தெளிந்த நீலமாக இருந்தன. ஆழ்ந்த குரல் கடுமையாக ஒலித்தது. ''ஏன் உன்னைச் 'சகோதரி' என்று கூப்பிட்டுக் கொள்கிறாய்?'' என்று அவள் கேட்டாள்.

அந்தக் கேள்வி சுப்புலக்ஷ்மிக்குப் புதுமையானது. ஆயின், அதற்குப் பதிலோ அவளுக்குத் தெள்ளெனத் தெரிந்த ஒன்று. அவள் தன் முகத்தில் புன் முறுவல் தோன்றுவதை உணர்ந்தாள். ''நான் பாடம் சொல்லித் தரும் ஒரு வகுப்பில் என்னுடைய இரு தங்கைகளும் படிக்கிறார்கள். அவர்கள் என்னை 'ஸிஸ்டர்' என்று அழைக்கத் தொடங்கவும், பள்ளிப் பெண்கள் அனைவருமே அவ்வாறு அழைக்கத் தொடங்கி விட்டார்கள்.'' வேறொரு காரணமும் இருந்தது. துணிவைக் கூட்டிக்கொண்டு அவள் அதைக் கூறி முடித்தாள். ''தவிரவும், எல்லா இளம் விதவைகளுக்கும் நான் ஒரு சகோதரியாக இருக்க விரும்புகிறேன்.''

''ஓ, அப்படியா?'' இதைக் கேட்டதும் மிஸ் வின்ச் இளகி விட்டாள். அந்த ஒரு கணத்தில் அவள் தோற்றம் பயப்படும்படியாக இல்லாமல் மனிதத் தன்மையோடு கூடியதாக மாறிவிட்டது. புதிதாக வந்த யுவதியிடம் சரிசமமாகப் பேசும் பாவம் மிளிரத் தொடங்கியது. சுப்புலக்ஷ்மியின் தந்தையைத் தான் சந்தித்ததைக் கூறினாள். தன் திட்டம் அனுமதிக்கப்படுவதற்குத் தான் எடுத்துக் கொண்ட முயற்சிகளை விவரித்தாள். 'அரச மர வீட்'டில் தங்கியிருக்கும் பெண்களைப் பற்றி விசாரித்து அறிந்து கொண்டாள். அவர்களை வந்து பார்ப்பதாக வாக்களித்தாள். அவள் தொடர்ந்து கூறினாள்: ''சர்க்கார் நம் திட்டத்தை அனுமதிப்பதற்கு இப்பொழுது நாம் தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இதுபற்றி நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்.''

அவள் நிறுத்தினாள். சுப்புலக்ஷ்மி ஒன்றும் புரியாமல் மிஸ் வின்ச்சே தொடர்ந்து பேசக் காத்திருந்தாள்.

மிஸ். வின்ச் கூறினாள்: ''ஏழைப் பெற்றோர்களின் பெண்கள் சிலரை வைத்துப் பராமரிக்க நாம் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொள்வதற்குப் போதிய நிதி திரட்ட வேண்டும். நம்மால் செய்ய முடியும் என்பதைப் பார்த்தார்களானால் அதிகாரிகள் நமக்குச் சர்க்காரின் அனுமதியைக் கட்டாயம் தந்து, நாம் அந்த விடுதியைத் தொடர்ந்து நடத்த வேண்டிய பண வசதியையும் செய்து கொடுப்பார்கள். நீ என்ன சொல்லுகிறாய்?''

வயதோ அனுபவமோ அதிகமில்லாதவளாயிருந்தாலும் சுப்புலக்ஷ்மி,


ஆபீஸ் வேலை தலைக்குமேல் — தலைவலியோ
மண்டையைப் பிளக்கிறது!
தலைவலி தாள முடியலை. இத்தனை வேலையையும் எப்படி செய்யப் போறேனோ!
ஒரே ஒரு வில்லை ஸாரிடான் சாப்பிடு விஸ்வநாதா! தலைவலி ஓடிப்போகும் பார்!
விஸ்வநாதன் ஸாரிடான் சாப்பிடுகிறார்
பிறகு ...
பிரமாதம், பிரமாதம்! தலைவலி ஓடிப் போச்சே!
ஒரே ஒரு ஸாரிடான்
'ரோஷ்'
வலியைப் போக்குகிறது ஆசுவாசப் படுத்துகிறது புத்துணர்ச்சி யூட்டுகிறது
உலகப்புகழ் பெற்ற வலி நிவாரணியான ஸாரிடான் தலைவலி, பல்வலி, உடல்வலி மற்றும் சாதாரண உடற் கோளாறுகள் இவற்றிலிருந்து விரைவில், அபாயமின்றி, நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. பெரியவர்களுக்கு 1 வில்லை, குழந்தைகளுக்கு விருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.
Saridon
ஸாரிடான் ஒரே வில்லை போதும்
ஒரு வில்லை 13 பைசா
'ரோஷ்' தயாரிப்பு
ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்



வெள்ளம் வருமுன் அணை கோல வேண்டும்

எதிர்காலத்தில் நீங்களும் உங்கள் குடும்பமும் இன்பமாக வாழ வேண்டாமா? அதற்கு இன்றே வழி கோலுங்கள்.

உங்கள் பிற்கால வாழ்க்கையை மலரச் செய்வதில் எங்கள் சேவை உங்களுக்குத் தேவை. பாங்க் ஆஃப் பரோடா என்றும் உங்கள் நலத்தை நாடி பலவகை சேமிப்புத் திட்டங்களை உங்களுக்கு அளிக்கிறது. அவற்றில் ஒன்றில் இன்றே சேர்ந்து பயனடையத் தவறாதீர்கள்.

'சிறு துளி பெருவெள்ளம்'. குறைந்தபட்சம் ஒரே ஒரு ரூபாயைக் கொண்டு எங்கள் சேமிப்புத் திட்டத்தில் ஒரு நபராகச் சேருங்கள். பிரதி மாதமும் உங்களால் இயன்ற தொகையை சேமிப்பாகக் கட்டி விடுங்கள். உங்கள் முதல் 4 சதவீதம் வட்டியைப் பெற்று வளர்கின்றது. உங்கள் வாழ்க்கையும் புது நம்பிக்கையுடன் மலருகிறது.

எங்கள் பல சேமிப்புத் திட்டங்கள் பின்வருமாறு:

★ சேவிங்க்ஸ் பாங்க் (சேமிப்பு நிதிகணக்கு)
★ வயது வராதவர்களுக்கு தனிப்பட்ட சேவிங்க்ஸ் கணக்கு
★ மாதத் தவணை சேமிப்பு (Recurring Deposit)
★ குறிப்பிட்ட காலத்திற்கு முதலீடு செய்தல் (Fixed Deposit)

இவை சம்பந்தமான விவரங்களுக்கு உங்கள் அருகாமையில் உள்ள பாங்க் ஆஃப் பரோடா மானேஜரை நேரிலோ தபால் மூலமாகவோ, அணுகினால் அவர் இத் திட்டங்களை விளக்குவார்.

மதராஸ் ராஜ்யத்தில் எங்களுக்கு கோயமுத்தூர், காரைக்குடி, மணச்சநல்லூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, இவ்விடங்களிலும், மதராஸ் நகரில் நார்த் பீச் ரோடு (முக்கிய கிளைக் காரியாலயம்), ஈரபாலு செட்டி தெரு, மைலாபூர், தியாகராயநகர், மௌண்ட் ரோடு, அம்பத்தூர், இவ்விடங்களிலும் கிளைகள் உள்ளன.

ஒழுங்காக சேமியுங்கள்

தி
பாங்க் ஆஃப் பரோடா
லிமிடெட்
(ஸ்தாபிதம் : 1908)
தலைமைக் காரியாலயம் : பரோடா

'உங்கள் சேவை எங்கள் கடமை' என்ற எங்கள் இலவச புத்தகத்தில் எல்லா விவரங்களும் உள்ளன. இதைப் பெற இன்றே கேட்டு எழுதுங்கள்

JWT-BB-3488

ஆழ்ந்த ஞானம் படைத்திருந்ததை மிஸ் வின்ச் இந்தச் சம்பாஷணையின் போது கண்டுகொண்டாள். நிறைய இடைஞ்சல் வரும் என்று சுப்புலக்ஷ்மி குறிப்பிட்டாள். எல்லாவற்றையும் எதிர்த்தாக வேண்டும். இறுதியில் வெற்றி காணலாம் என்று சந்தேகமில்லாமல் உறுதியுடன் கூறினாள் அவள்.

சுப்புலக்ஷ்மி எல். டி. பரீட்சை தேறும்வரையில் அவளுக்கு இத்தகைய ஒரு விடுதியை உருவாக்க, உழைக்க நேரம் இருக்காது. அல்லது குறைந்த அளவு நேரம்தான் இதற்காக அவள் செலவிட முடியும்.

இதை இருவருமே அறிந்து கொண்டார்கள். ஒரு வழியாகப் பரீட்சையெல்லாம் முடிந்த பிறகுதான் பணம் வசூலிப்பதற்கோ, வீடு தேடுவதற்கோ, தன் பராமரிப்பின் கீழ் இருக்குமாறு பெண்களை அனுப்பும்படி பெற்றோர்களை இசைய வைப்பதற்கோ பாடுபட முடியும். இதற்கு இடையில் அரசமரத்து வீட்டில் உள்ள பெண்கள் தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கலாம். அவசியமேற்பட்டால் இன்னும் இரண்டு மூன்று பேர்களையும் அங்கு சேர்த்துக் கொள்ளலாம்.

1912ம் வருஷம் ஏப்ரல் மாதம் சுப்புலக்ஷ்மி பரீட்சை தேறிவிட்டாள். ஜூலை மாதத்துக்குள் இரண்டாயிரம் ரூபாய் அவள் சேர்த்தும் விட்டாள். அற்புதமான சாதனை இது.

பத்திரிகைகளில் விண்ணப்பங்கள் பிரசுரித்ததில் கொஞ்சம் பணம் வந்தது. சாரதா லேடீஸ் யூனியனின் அங்கத்தினர்களும் அவர்கள் நண்பர்களும் பெருமளவு கொடுத்தார்கள்.

சாரதா லேடீஸ் யூனியன் சில மாதங்களுக்கு முன்புதான் (1912ம் வருடம் ஜனவரி மாதம்) தொடங்கப்பட்டது. இதற்கு முன் பல வருஷங்களாகவே சுற்றுப்புறத்தில் உள்ள பெண்கள் பகல் நேரங்களில் அரசமரத்து வீட்டுக்கு வந்து கூடி, சித்தி மகாபாரதம், ராமாயணம் போன்ற புனித நூல்களை உரக்கப் படித்து விளக்கம் கூறுவதைக் கேட்பார்கள். சித்தி மிகவும் அழகாகப் படிப்பாள். அவள் கூறும் விளக்கமும் மிகவும் பொருத்தமாகவும் சிந்தனையைத் தூண்டும் வகையிலும் அமைந்திருந்தபடியால் படித்து முடித்த பிறகும்கூட அப்பெண்மணிகள் தாங்கள் இதுவரை சிந்தித்துப் பார்க்காத விஷயங்களை யெல்லாம் கலந்து பேசி ஆலோசிப்பார்கள். சாதாரணமாக நன்னடத்தையைப் பற்றியோ மதத்தைப் பற்றியோ சிறு கேள்வியில்



வீட்டில் குடியிருப்பவர்: போகாமல் இருந்து அடம் பிடிக்கும் கறைகள் மேல் இதைத் தேய்த்தால் உடனே போய்விடுமாம், பார்த்தீரா!

வீட்டுச் சொந்தக்காரர்: அட, போய்யா! உம்ம பேரிலே அதை முதலில் தேய்த்துப் பரிசோதனை செய்யுங்க. வெளியே போங்கய்யா!

ஆரம்பித்து வேதாந்தம், சரித்திரம், தொல்பொருள் ஆராய்ச்சி, கலைகள், ஏன் அன்றைய அரசியல் நிலைமை போன்ற பல விஷயங்களுக்கும் இழுத்துச் சென்றுவிடும் அவர்கள் விவாதங்கள்.

இந்தப் பேச்சுக்கள் எல்லோருக்கும் பிடித்துப் பரவிவிட்டமையால் வர விரும்பிய எல்லாப் பெண்களுக்கும் அச்சிறிய வீட்டில் இடம் போதவில்லை. எனினும் எல்லோரும் வரவேற்கப்பட்டனர். ஆலோசனைகளும் பலரகப்பட்டவையாக இருந்தன. சித்தி பெருந்தன்மையுடனும் சகிப்புத்தன்மை காட்டியும், பரந்த நோக்கத்துடனும், தாராள மனப்பான்மையுடனும் விவாதங்களை நடத்தி வந்ததால் கிறிஸ்துவர், முஸ்லிம், பார்ஸி பெண்மணிகள் ஆகிய பல மதத்தவர் வந்து கலந்து கொள்ள விரும்பினார்கள். இதை முறையான நிறுவனமாக உருவாக்க வேண்டும் என்று தீர்மானித்ததும், எல்லோரும் அந்தப் பெண்கள் சங்கத்துக்குக் கல்விக் கடவுளாகிய சாரதாவின் பெயரை வைக்க வேண்டும் என்றும் மிஸ் பாட்டர்ஸன்தான் அதற்கு முதல் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானித்தார்கள். சுப்புலக்ஷ்மி அதற்குக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். ஒவ்வொரு சனிக்கிழமை பிற்பகலும் பி. டி. பள்ளிக்கூடத்தில் கூட்டங்கள் நடைபெற்றன.

ஒருவர் பாக்கியில்லாமல் எல்லா அங்கத்தினர்களுக்குமே இளம் பிராமண விதவைகளுக்கான விடுதியை நிறுவுவதில் ஆர்வம் இருந்தது. இத்திட்டம் இன்னமும் சர்க்காரின் அங்கீகாரம்பெற

வில்லை என்றாலும், இப்போது அது ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. விடுதிக்கான தகுந்ததொரு வீட்டைத் தேடிப் பிடிப்பதுதான் உடனடியான பிரச்னையாக இருந்தது.

வீட்டைக் குறிப்பிட்ட ஒரு வட்டாரத்துக்குள் தேட வேண்டியிருந்தது. அதில் வசிக்கும் பெண்கள் பி. டி. பள்ளிக்கூடத்துக்குச் சுலபமாக நடந்து செல்லும்படியாக அது கிட்டத்தில் அமைந்திருக்க வேண்டும். நல்ல காலமாக சுப்புலக்ஷ்மியின் குடும்பத்தினருக்கு அந்த வட்டாரம் நன்றாகத் தெரிந்திருந்தது. 'ஆதி காட்டேஜ்' **(Adi Cottage)** என்ற வீடு காலியாக இருந்தது. இவர்கள் தேவைக்குத் தகுந்ததுதான்.


நான் சகோதரி சுப்புலக்ஷ்மி அவர்களை அங்கு என்னை அழைத்துச் செல்லக் கோரிய போது, ஒரு நண்பர் எங்களைக் காரில் ஏற்றிக் கொண்டு அதை மெதுவாக எழும்பூர் ஹைரோடு வழியாகச் செலுத்திச் சென்றார். ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டு வந்த சகோதரி இந்த ஐம்பது ஆண்டுகளில் நடைபெற்று விட்ட மாறுதல்களைக் கண்டு வியந்தவண்ணம் இருந்தார். அமைதியின் இருப்பிடமாக அதை அவர் நினைவு வைத்திருந்தார். இப்பொழுது அங்கு அநேக வீடுகளுக்குப் பதிலாகக் கடைகள் தோன்றியிருந்தன. அகலக் குறைவான அந்த நெடுஞ்சாலை சைக்கிள்களும், லாரிகளும், கார்களும், மாட்டு வண்டிகளுமாக நிரம்பி வழிந்தது. 'ஆதி காட்டேஜ்' என்னும் இல்லம் இன்னமும் இருக்குமா என்பதே எங்களுக்குச் சந்தேகமாக இருந்தது. சகோதரி திடீரென்று, ''அதுவாகத்தான் இருக்க வேண்டும்' என்று கூவினார்.


எங்களுக்கு வலதுபுறம், பழங்காலத்திய, ஓரளவு இடிபாடடைந்த வீட்டுக்கும் ஒரு கறிகாய்க் கடைக்குமிடையே கேட் அகலத்துக்கு ஓர் இடைவெளி இருந்தது. இந்த இடைவெளியில் புகுந்து அங்கிருந்த படிக்கட்டில் ஏறி, சற்று உயரே சென்றால் ஒரு பெரிய முற்றம் இருந்தது. அந்த வீடு, முற்றத்தைப் பார்த்தவாறு தெருவிலிருந்து முழுமையாக மறைந்து காணப்பட்டது. மண் தொட்டிகளில் வைக்கப்பட்ட பல செடிகளும், அழகாகப் பூத்துக் குலுங்கும் கொடிகளும் முற்றத்தை அலங்கரித்தன.

அந்தக் கனமான கதவை நாங்கள் சற்றுத் தயக்கத்துடன் தட்டினோம். ஒரு நிமிஷத்துக்குப் பிறகு பதினேழு அல்லது பதினெட்டு வயதுப் பெண் ஒருத்தி கதவைத் திறந்தாள். அவள் பூப்போட்ட புடவை ஒன்றை உடுத்தி, தலையில் புதிய மலர்கள் சூடி, அழகாகத் தென்பட்டாள். ஒரு வயதான மாது அப்பெண்ணுக்குப் பின்புறம் நின்றிருந்தாள். ஒரு கருப்பு நிறப் பட்டுப் புடவையை ஆசாரமான ஸ்மார்த்தப் பிராமணப் பெண்கள் உடுத்தும் பாணியில் அவள் அணிந்திருந்தாள். சகோதரியின் பெயரைக் கேட்டதுமே அவள் அவரை நோக்கி விரைந்து வந்தாள். இரு கரங்களையும் குவித்து வணங்கி வரவேற்றபோது அவை சந்தோஷ மிகுதியில் நடுங்கின.

அந்த அம்மாள் எங்களை உள்ளே வரும்படி அழைத்தாள். அந்த வீடு சம்பிரதாயமான தென்னிந்திய பாணியில் இருந்தது. உள்ளே நுழைந்ததும் ஒரு கல்யாண கூடம், நடுவில் சிறிதே தாழ்ந்த முற்றம், மூப்பினால் கருத்த மரத் தூண்கள். அந்தக் கூடத்தின் ஒருபுறம் மாடிப் படிகள் இருந்தன. மறுபுறம் வீட்டின் இதர பாகங்களுக்குச் செல்லக் கதவுகள் இருந்தன. இதமான குளிர்ச்சியுடன் திகழ்ந்தது அந்த வீடு. நாங்கள் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு அந்தப் பெண் சென்னை சர்வகலாசாலையைச் சேர்ந்த பெண்கள் கல்லூரி ஒன்றில் படிப்பதாகக் கண்டு கொண்டோம். இன்று இதில் ஒன்றும் அதிசயமில்லைதான்.

சகோதரி சுப்புலக்ஷ்மியே தன் வீடு தேடி வந்திருக்கிறார் என்று அறிந்ததும் ஏற்பட்ட சந்தோஷம் நிறைந்த திகைப்பு ஒருவாறு நீங்கியதும் அந்த அம்மாள் சகோதரியுடன் உறவுமுறை கூடக் கொண்டாட ஆரம்பித்துவிட்டாள்! இந்த உறவுமுறை ஏதோ சுற்றி வளைத்துக் கொண்டு வரும் எட்டிய பந்தம்தான். ஆனால்ரொம்பவும் பெருமைப்பட இதுவே போதுமானதாக இருந்தது, சகோதரி ஒரு காலத்தில் வசித்த அந்த 'ஆதி காட்டேஜில்' இன்று இருக்கும் அந்த மூதாட்டிக்கு. சகோதரிக்கு இது சற்று வேடிக்கையாக இருந்தது என்பதை நான் கண்டேன். ஏனென்று புரிவது போலவும் எனக்குத் தோன்றியது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த பிராமணப் பாட்டிமார் அனைவரும் சகோதரியும் மிஸ். லின்ச்சும் செய்த ஒவ்வொரு காரியத்தையும் எவ்வாறு கண்டனம் செய்தார்கள் என்பது அவருக்கு ஞாபகம் வருகிறது போலும் என்று நான் ஊகித்தேன். (தொடரும்)





போர் என்று தோன்றிய நாள்முதலே ஒற்றர்களும் தோன்றி விட்டார்கள். யுத்த முறைகளும் போர்த் தளவாடங்களும் மாறி வருவதற்கேற்ப உளவறியும் விதங்களிலும் புதுப்புது உத்திகள் தோன்ற விஞ்ஞானம் துணைபுரிந்திருக்கிறது. சிலவற்றைப் பார்ப்போம்.






உளவுக் கலை

கோமதி சுவாமிநாதன்

இரண்டாவது உலகப் போர் நடந்த நாட்களில் உளவாளிகள் சாதித்த காரியங்கள் பிரமிப்பூட்டத் தக்கவை. 1944ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பிரான்ஸ் நாட்டின் பெரும் பகுதியை ஜெர்மானியர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த நேரம். நேச தேசப் படைகள் மும்முரமாக எதிரிகளை ஒடுக்குவதில் நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். எதிரிகளின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட பிரதேசங்களில் தங்களுடைய கைதேர்ந்த உளவாளிகளைப் பாரசூட்கள் மூலம் இறக்கிவிட்டு அங்குள்ள நேச நாட்டு அனுதாபிகளை ரகசியமாக ஒன்றுசேர்த்து அவர்கள் உதவி கொண்டு எதிரிகளின் படைகளுக்கும் ஆயுதக் கிடங்குகளுக்கும் சேதம் விளைவித்தார்கள். பாரசூட்டுகள் மூலம் இறங்கும் உளவாளிகள் இதற்காகவே கண்காணிப்புடன் இருக்கும் எதிரி ரோந்துக்காரர்களிடம் அகப்பட்டுக்




மேலே: எஃப்பிஐ உளவாளி லக் அடைக்கப்பட்டிருந்த பெட்டி.

இடது பக்கம்: லக்; அவருக்குப் பக்கத்தில் தவளை மனிதன் கிராப்.

கீழே: மாஸ்கோவிலுள்ள அமெரிக்க தூதராலயத்தின் சுவரில் மாட்டப்பட்டிருந்த அமெரிக்க அரசாங்கச் சின்னத்துக்குள் ருஷ்யர்கள் மறைவாக டேப் ரிகார்டர் ஒன்றைப் பொருத்தியிருந்தார்கள். இதனை ஐ. நா. சபையில் கட்டிக் காட்டுகிறார் அமெரிக்க தூதர் ஹென்றி காபட் லாட்ஜ்.

வலது பக்கம்: ஆகாயத்திலிருந்து பிடிக்கப்பட்ட புகைப்படங்களை ஆராயும் நிபுணர்.



கொள்ளாமல் இருப்பது அவரவர்கள் அதிருஷ்டத்தைப் பொறுத்ததுதான்!

சோனியா — டி — ஆர்ட்டாய்ஸ் என்னும் கானடா தேச மாதும் ஒரு ரேடியோ ஆப்பரேட்டரும் இப்படித்தான் 1944ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஓர் இரவு இங்கிலாந்திலிருந்த ஒரு விமான தளத்திலிருந்து கிளம்பி பிரான்சு நாட்டில் ஜெர்மானியர்கள் சூழ்மியுள்ள ஒரு பகுதியில் பாரசூட் மூலம் இறங்கினார்கள். இரண்டு பேரும் இருளில் வெவ்வேறு இடங்களில் தரையை அடைந்தாலும், அதே இருள் அவர்களை எதிரியின் பார்வையிலிருந்து காப்பாற்றி விட்டது. இருவரும் தனித்தனியே இரண்டு நாட்கள் ஒளிந்து ஒளிந்து நடந்து குறிப்பிட்ட இடத்துக்கு முன்னேற்பாட்டின்படி வந்தார்கள். இருவரையும் அந்தப் பிரதேசத்துப் பிரஞ்சுப் பிரஜைகள் போல் காட்டத் தேவையான தஸ்தாவேஜுகளெல்லாம் ஏற்கனவே போலியாக இங்கிலாந்திலேயே தயாரிக்கப்பட்டிருந்தது. டி — ஆர்ட்டாய்ஸ் சாதாரணப் பிரஞ்சுக் குடும்பப் பெண் போல் பல சூழ்நிலைகளிலும் பழகி, எதிரிகள் பற்றிச் சேகரிக்கும் விஷயங்களை, கூடவிருக்கும் ரேடியோ ஆபரேட்டர் ரகசிய வானொலி மூலம் அனுப்ப வேண்டுமென்றுதான் ஏற்பாடு.

டி—ஆர்ட்டாய்ஸ் நல்ல அழகி. அவள் மாலை வேளைகளில் ஜெர்மானிய வீரர்கள் குழுமியிருக்கும் கேளிக்கை விடுதிகளுக்கு அடிக்கடி போகத் தலைப்பட்டாள். சில நாட்களாகத் தொடர்ந்து அவளைப் பார்த்த ஒரு நாஜி அதிகாரிக்கு அவளிடம் மோகம் ஏற்பட்டு விட்டது. ஒருநாள் அவன் தன்னை மறந்து அவளை நெருங்கி அவள் கரங்களைப் பிடித்தபோது அவள் கைப்பை நழுவி விழுந்து அதில் தற்காப்புக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த சிறு கைத் துப்பாக்கி வெளியே எட்டிப் பார்த்தது. வேறு சமயமாக இருந்தால் எந்த நாஜியும் இந்தப் பிரஞ்சுப் பெண்ணைக் கைது செய்து கைதிகள் உழைப்பு முகாமுக்கு அனுப்பி விடுவான். ஆனால் மோகாவேசத்திலிருந்த அந்த அதிகாரியோ வேறு விதமாக நினைத்துப் பயந்தான். அவள் ஒருவேளை தங்களையே கண்காணிக்க வந்துள்ள நாஜி கெஸ்டாபோ நிறுவனத்தைச்



சேர்ந்தவளோ என நினைத்துவிட்டான். அன்றுமுதல் அவன் அவளிடம் வெகு மரியாதையாக நடந்து கொண்டான். அது மாத்திரமல்ல. தங்களுடைய நடவடிக்கைகள் பற்றியும் தாராளமாகவே பேசினான். டி—ஆர்ட்டாய்ஸுக்கு இது போதாதா? அவள் செய்த எத்தனையோ விதமான ஐந்தாம் படை வேலைகளுள் ஆயுதங்கள், வெடிமருந்துகள் தாங்கி வந்த ரயில் ஒன்றைக் கவிழ்த்துப் போகக்குவதும் ஒன்று. இந்தப் பயங்கரப் பணியையும் சிறப்பாகச் செய்து முடித்தாள். கடைசியில் நேச நாடுகளின் கைக்குள் மீண்டும் அந்தப் பிரெஞ்சுப் பகுதி வந்தபோது, பல நாஜிப் படை வீரர்கள் கைதானார்கள். அவர்களில் சிலரைத் தூண்டித் துருவி விசாரணை செய்யும் பொறுப்பு டி-ஆர்ட்டாய்ஸுக்குக் கிடைத்தது.

எதிர்பாராத வகையில் அந்தப் பொறுப்பில் அவளைக் கண்ட கைதியான அந்தப் பழைய மோகாவேச நாஜி அதிகாரி அலட்சியத்துடன், "நீ இன்னும் என்னிடமிருந்து தெரிந்து கொள்ள என்ன பாக்கி வைத்திருக்கிறாய்? அதையெல்லாம்தான் அப்போதே நான் ஏமாந்து போய் உன்னிடம் சொல்லி விட்டேனே!" என்றானாம்.

சமாதான காலங்களில் கூட உளவாளிகளின் வாழ்க்கை ஆபத்து நிறைந்ததுதான். ஒவ்வொரு நாடும் தன் ஆயுத பலத்துக்குத் தங்கள் விஞ்ஞான அறிவை அஸ்திவாரமாகக் கொண்டுள்ள இந்த நாட்களில் தங்களுடைய தயாரிப்பு ரகசியங்களைப் போட்டி நாடுகள் தெரிந்து கொள்ளக் கூடாது என்று கவலைப்படுகின்றன. அதை எப்படியாவது தெரிந்து கொண்டேயாக வேண்டும் என்று மற்ற நாடுகள் செலவைப் பார்க்காமல் உளவாளிகளை அனுப்புகின்றன. பல சந்தர்ப்பங்களில் சிறு தவறுகளால் உளவாளிகள் அகப்பட்டுக் கொள்வதுமுண்டு.

1951ம் ஆண்டில் அமெரிக்காவில் நடந்த ரோசன் பெர்க் வழக்கு பிரசித்தமானது. ஜூலியஸ் ரோசன் பெர்கும் அவன் மனைவி ஈதெல் ரோசன் பெர்கும் அமெரிக்கப் பிரஜைகள்தான். ஆனாலும் அவர்கள் சோவியத் அரசாங்கத்துக்காக, அணு ஆயுதத் தயாரிப்பு ரகசியங்களைத் தெரிந்துகொள்ளும் உளவாளிகளாக மாறினார்கள். ஈதெலின் சகோதரன் டேவிட் அணு ஆயுத உற்பத்திசாலையில் பணியாற்றி வந்தான். அப்பாவி டேவிட்டைக் கைக்குள் போட்டுக்



"நான் உங்களைக் கல்யாணம் செய்து கொள்ளா விட்டால் உயிரையே விட்டு விடுவேன் என்று சொல்கிறீர்களாமே!"
"ஆமாம்! அதுதான் என் பழக்கம்."

கொண்டு பணத்தாசை காண்பித்து அந்த ரோசன்பேர்க் தம்பதிகள் கொஞ்சம் கொஞ்சமாக விஷயங்களைச் சேகரித்து வெளி நாட்டுக்கு அனுப்ப ஆரம்பித்தார்கள். இவர்களுக்குத் துணையாக நின்ற கோல்ட் என்பவனை அமெரிக்க ரகசியப் போலீசார் பிடித்த போது அவனைச் சேர்ந்த எல்லோருமே மாட்டிக்கொள்ள வேண்டியதாயிற்று.

வழக்கை விசாரித்த நீதிபதி காஃப்மென் ரோசன்பேர்க் தம்பதிகளுக்கு மரண தண்டனை விதித்தார். டேவிட்டுக்குப் பதினைந்து ஆண்டு சிறைத் தண்டனை. உளவு வேலை செய்யப் போக உயிரே போய்விட்டது.

1956ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரஷ்ய அரசாங்கத்தின் தலைவர்களாக விளங்கிய குருஷேவும், புல்கானினும் இங்கிலாந்துக்கு விஜயம் செய்திருந்தார்கள். அவர்கள் பிரயாணம் செய்த கப்பல் போர்ட்ஸ்மத் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சப்பட்டிருந்தது. அந்தக் கப்பலுக்குத் துணையாக இரண்டு நாசகாரிக் கப்பல்களும் வந்திருந்தன.

ரஷ்யத் தலைவர்கள் பிரயாணம் செய்த கப்பலின் அடியில் ஏதோ விசேஷ சாதனமோ அல்லது சக்தி வாய்ந்த உலோகக் கம்பியோ பொருத்தப் பட்டிருக்கிறதென்றும், அது வெகு தூரத்தில் வந்து கொண்டிருக்கும் சாதாரணக் கப்பல்களையோ, நீர்மூழ்கிக் கப்பல்களையோ காண்பித்துக் கொடுத்துவிடுமென்றும், அதனால் முன்னெச்சரிக்கை பெற்று எதிரிக் கப்பல்களால் நேரக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்க்க முடியும் என்றும் பிரிட்டிஷ் கடற்படை அதிகாரிகளிடையே ஒருவித ஹேஷ்யம். ஆனால் எளிதாக அந்தச் சாதனம் எத்தகையது என்று கேட்டுவிட முடியுமா? ரஷ்யர்கள்தான் சொல்லிவிடுவார்களா? கைக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அந்த விஞ்ஞான விந்தையைத் தெரிந்துகொள்ள அவர்களுக்கு ஒரே ஆவல்.

கமாண்டர் கிராப் என்பவர் கப்பற் படையிலிருந்து ஓய்வு பெற்றவர். கடல் அடியில் நீந்திப் போய், ஆழ்கடலின் ரகசியங்களைத் தெரிந்துகொள்ளும் நிபுணர்களில் அவர் ஒருவர். அத்தகைய அனுபவஸ்தர்களைத் 'தவளை மனிதன்' ("Frog Man") என்று குறிப்பிடுகிறார்கள். அந்தக் கமாண்டர் கிராப் ஏப்ரல் மாதம் பதினேழாம் தேதியன்று போர்ட்ஸ்மத் நகருக்கு வந்து மாறுபெயரில் ஓர் ஓட்டலில் தங்கினார். அன்று மாலையும் மறுநாள் மாலையும் துறைமுகப் பக்கமாக உலாவப் போனார். பிறகு ஓர் ஆப்த நண்பரிடம் தாம் ஒரு முக்கிய வேலையாக போர்ட்ஸ்மத் வந்திருப்பதாகவும் மறுநாள் இரவு தான் ஹோட்டலுக்குத் திரும்பாவிடில் அது பற்றிய செய்தியைக் கடற்படைத் தலைமை ஸ்தலத்துக்கு அறிவித்துவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

பத்தொன்பதாம் தேதி நள்ளிரவில் கமாண்டர் கிராப் கடலில் மூழ்குவதற்கான விசேஷ உடைகளுடன் போர்ட்ஸ்மத் துறைமுகத்தில் ரஷ்யக் கப்பலுக்கு அருகில் தண்ணீரில் குதித்தார். அவ்வளவுதான்! கிராப் என்ன ஆனார் என்ற செய்தி அப்புறம் வெளி உலகுக்கே தெரியாமற் போய்விட்டது.

இரண்டு மூன்று நாட்கள் கழித்து கிராப் பற்றிய செய்தி பத்திரிகைகளில் அடிபடத் தொடங்கியது. காணாமற்போன கிராப் பற்றிப் பொதுமக்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள். கடற் படை அதிகாரிகள் இது விஷயமாகத் தங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று சாதித்து விட்டார்கள். கிராபைத் தாங்கள்தான் அனுப்பினோம் என்று சொன்னால் ராஜீய ரீதியில் அது சிநேகக் கரம் நீட்டி வந்த ரஷ்யத் தலைவர்களையே வேவு பார்த்த மாதிரி ஆகிவிடுமென்ற பயம்! அதன் அரசியல் விளைவுகளைச் சமாளிக்க முடியாமல் போய்விடுமே!

ரஷ்யக் கப்பலிலிருந்தவர்கள் குறிப்பிட்ட தினத்தன்று தங்கள் கப்பல் அருகில் ஒரு தவளை மனிதனைப் பார்த்ததாகச் சொன்னார்கள். ஆனால் அவனைச் சிறைப்பிடித்தார்களா, கொன்று விட்டார்களா, தப்ப விட்டு விட்டார்களா என்பது பற்றிச் சொல்லவேயில்லை. சில தினங்கள் கழித்துக் கடற்கரை ஓரத்தில் 'தவளை மனித உடுப்பு'த் தரித்த மனிதனின் தலையில்லாத உடல் மட்டும் கிடந்ததைப் பிரிட்டிஷ் போலீசார் கவனித்தார்கள். ஆனால் தீவிரப் பரிசோதனைக்குப் பிறகு அந்த உடல் கமாண்டர் கிராபினுடையது அல்ல என்ற முடிவுக்கு வந்தார்கள். அப்படியானால் கமாண்டர் கிராப் என்ன ஆனார்? சரியான விளக்கம் கூறுவார் இல்லை!

ஃ ஃ

சென்ற வருஷம், கிட்டத்தட்ட இதே சமயத்தில் மார்டி செல்லக் என்னும் யூத உளவாளியைப் பற்றிப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

எகிப்து தேசத்துக்காக மாதச் சம்பளத்தில் உளவாளியாக இத்தாலி நாட்டில் பணியாற்றிய லக்கை எகிப்தியத் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அவசரமாகச் சந்திக்க விரும்பினார்கள். லக் தூதரகத்துக்குப் போய்ச் சேர்ந்தான். லக்கின்மீது எகிப்தியர்களுக்கு ஏதோ திடீர் சந்தேகம் தோன்றியிருக்க வேண்டும். லக்கிற்குக் கொடுத்த பானத்தில் அவனுக்குத் தெரியாமல் மயக்க மருந்து கொடுத்தார்கள். அவன் மயங்கி விழுந்த

வுடன் பிரத்தியேக அமைப்புடன் தயாரிக்கப்பட்டிருந்த ஒரு பெரிய பெட்டியில் லக்கை உட்காரும் பாணியில் வைத்துக் கட்டிக் காற்று வசதிக்காகப் பெட்டியில் இரண்டொரு துவாரங்களைப் போட்டு, 'தூதரகத் தபால்' என்ற முறையில் பரிசோதனைகளுக்கு உட்படுத்தாமல் கெய்ரோவுக்குப் புறப்படத் தயாராயிருந்த விமானத்தில் ஏற்றி விட்டார்கள்.

லக்கின் அதிருஷ்டம் விமானம் தாமதமாகப் புறப்படுவதில் இணைந்திருந்தது. விமானம் புறப்படச் சில நிமிடங்களுக்கு முன் லக்கின் மயக்கம் ஓரளவு எதிர்பாராமல் குறைந்துவிடவே அவன் பெட்டிக்குள்ளிருந்தவாறே முனகியிருக்கிறான். விமானத்தில் சாமான்கள் ஏற்றிக் கொண்டிருந்த சிப்பந்திகளின் செவிகளில் இந்த முனகல் சத்தம் விழுந்தது. அவர்கள் பயந்து போய் விமானதள அதிகாரிகளுக்குத் தெரிவித்தபோது, விமானம் புறப்படுவதற்காகக் காத்திருந்த எகிப்தியத் தூதராலய உத்தியோகஸ்தர்கள் பதற்றமடைந்து ஏதோ சங்கீதக் கருவிகள் தவறுதலாகப் பெட்டியில் வைக்கப்பட்டு விட்டன என்று சொல்லி அந்தப் பெட்டியை அவசரமாகத் திருப்பி எடுத்துக் கொண்டு காரில் தப்பிப் போக முயன்றார்கள். விமானதள அதிகாரிகளின் சந்தேகம் அதிகரிக்கவே அவர்கள் போலீசுக்குத் தகவல் கொடுத்தார்கள். தப்ப முயன்ற எகிப்து அதிகாரிகள் மாட்டிக் கொண்டபோதுதான் பெட்டியிலிருந்து லக் மீட்கப்பட்டான். அவனுக்கு விடுதலை அளித்துவிட்டு இத்தாலிய சர்க்கார் சம்பந்தப்பட்ட எகிப்திய தூதராலய அதிகாரிகளை அவர்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பி வைத்தது. லக் அதிருஷ்டசாலிதான்!

லக் தங்கள் உதவியைப் பெற்றுக் கொண்டு தங்களுக்கு எதிராகவே வேறு நாட்டுக்கு உளவாளியாக இருக்கிறானோ என்ற சந்தேகம் எகிப்தியர்களுக்கு ஏற்பட்டிருந்தால் அதில் வியப்பொன்றுமில்லை. சரித்திரத்தில் இப்படிப்பட்ட இரட்டை உளவாளிகள் (Double Agent) நிறைய இடம் பெற்றிருக்கிறார்கள். உதாரணமாக, என். டி.—98 என்று குறிப்பிடப்படும் ஜெர்மானிய உளவாளி அதே சமயத்தில் அமெரிக்க நாட்டின் உளவாளியாகவும் பணியாற்றினான். அமெரிக்க அதிகாரிகள் கொடுத்த நம்பும்படியான பொய்த்தகவலை இரண்டாவது உலகப் போரின்போது தன்னை அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்த நாஜிகளுக்கு அனுப்பினான். குரில் தீவுகளை 1944ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அமெரிக்கப் படைகள் தாக்கவிருக்கின்றன என்ற செய்தியை அவன் அனுப்பி வைத்தான். அதற்கு ஜெர்மானியர்கள் தயாராக விருந்தார்கள். ஆனால் அதே நேரத்தில் அமெரிக்கர்கள் மார்ஷல் தீவுகளைத் தாக்கி வெற்றி பெற்றார்கள்!

உயிருக்கு ஆபத்தான இந்த உளவுக் கலைக்கு இப்போது மகத்தான உதவியாக விஞ்ஞானம் அளித்திருப்பது ஆகாய காமிராக்கள். உளவாளிகள் ஊடுருவிப் போய் என்னென்ன தொழிற்சாலைகள், கிடங்குகள்



''பாடினால் உடம்பிலுள்ள ரத்தம் சூடாகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்களாமே!''

''அதென்னமோ! சிலபேர் பாடினா என் ரத்தம் கொதிக்கிறது!''

எங்கெங்கு இருக்கின்றன, அவைகளை எப்படிக் குண்டு வீச்சுக்கு இலக்காக்கலாம் என்று தெரிந்துகொள்வதற்குப் பதிலாக இந்த ஆகாயக் காமிராக்கள் பல மைல்கள் உயரத்தில் பறக்கும் விமானங்களிலிருந்தவாறு கீழே இருக்கும் இடங்களைத் துல்லியமாகப் படம் பிடித்துக் கொடுத்து விடுகின்றன.

இன்று வெகு நேர்த்தியாக முன்னேறியிருக்கும் ஆகாயப் படப்பிடிப்புக் கலைக்கு வித்திட்ட நபர் ஷெர்மன் மில்ஸ் ஃபேர்சைல்ட் என்ற அமெரிக்கர். 1918ம் ஆண்டில் அவர் பழைய காமிராக்களைப் பிரித்துப் போட்டுப் பரிசீலனை செய்துகொண்டிருந்தபோது சில புதிய கருத்துக்கள் தோன்றவே, விமானத்திலிருந்து படம் பிடிக்கலாம் என்று சொன்னார். ஆனால் அவர் விளக்கங்களை உடனடியாக யாரும் சிரத்தையுடன் கவனிக்கவில்லை. இரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் தரைப் படை அதிகாரி ஒருவர் அவர் காமிராவை விமானத்தில் வைத்துப் பரிசோதிக்க முன்வந்தார். அப்படி எடுத்த படங்கள் பிரமிப்பூட்டத் தக்கவையாக இருந்தன. இதற்குப் பிறகு இத்தகைய காமிராக்கள் தயாரிக்க ஃபேர்சைல்ட் ஸ்தாபனம் உருவாயிற்று. இரண்டாவது உலகப் போரின்போது அவருடைய காமிராக்கள் வெகுவாக முன்னேற்றம் கண்டிருந்தன. ஐந்து லட்சம் டாலர் பெறுமானத்துக்கு நூற்றி நாற்பத்தி நான்கு அங்குல நீளமுள்ள லென்ஸ் பொருத்திய காமிராவுடன் நியூயார்க் நகரின் மேலே ஐம்பதினாயிரம் அடி உயரத்தில் பறந்து போய்ப் பரீட்சார்த்தமாக எடுத்த போட்டோவில் அந்த வினாடியில் வாஷிங்டன் சதுக்கத்தில் எத்தனை பேர்கள் நடந்து கொண்டிருந்தார்கள் என்று எண்ண முடிந்ததாம்!

இன்று இதைவிடச் சிறந்த சக்தி வாய்ந்த காமிராக்கள் உலகைச் சுற்றி வரும் விண்வெளிக் கப்பல்களிலேயே பொருத்தப்பட்டு, உலகின் பல பாகங்களையும் விண்வெளியிலிருந்து படம் பிடித்துக் கொடுக்கின்றன. மனித உளவாளிகள் சில சந்தர்ப்பங்களில் தோல்வியடையலாம். ஆனால் இந்தக் காமிராக் கண் உளவாளியிடமிருந்து எந்த ரகசியமுமே தப்ப முடியாது என்ற நிலை இன்று உலகில் ஏற்பட்டு விட்டது!



கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

59. ஞானோபதேசம்

கடவுளுக்கு மூன்று இலக்கணங்கள். உண்மை, அறிவு, இன்பம், சத்–சித்–ஆனந்தம் என்று இறைவனது இயல்பைக் குறிப்பர். இறைவனுக்கு இலக்கணங்கள் மூன்று இருப்பது போன்றே தமிழ் மொழிக்கு இயல், இசை, நாடகம் என மூன்று துறைகள் உண்டு. இயல் – சத்து; இசை – சித்து; நாடகம் ஆனந்தம். இயலாகிய இலக்கிய இலக்கணங்களைப் படித்தவர் பலர் இருக்கலாம். இசை வித்வான்கள் சிலர்தான் இருப்பார்கள். ஏனெனில், இசை இரத்தத்தில் ஊறி வரவேண்டும். ஆகவே, இயலைவிட இசைக்குப் பெருமை அதிகம். இசையில் இயல் சேர்ந்திருக்கும். நாடகத்திலோ இயலும் இசையும் சேர்ந்திருக்கும். நாடகம் என்பது ஆனந்தம். நடிகர்களுக்கெல்லாம் ராஜா நடராஜர். அவருடைய ஆட்டத்துக்குப் பின்னணி கிடையாது. ஆட ஆரம்பித்த தேதியும் இல்லை. முடிவுத் தேதியும் இல்லை. அதுபோல,

இயல்பாக ஆடுவது மயில். தோகையை விரித்து, 'ஓம்' என்ற பிரணவ வடிவத்தைக் காட்டி ஆடுகிறது மயில்.

வாதினை யடர்ந்த வேல்விழியர் தங்கள்
　　மாயமதொ ழிந்து
　　　　　　　　தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
　　மாபத மணிந்து
　　　　　　　　பணியேனே
ஆதியொடும் அந்த மாகிய நலங்கள்
　　ஆறுமுக மென்று
　　　　　　　　தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
　　தாடுமயி லென்ப
　　　　　　　　தறியேனே
நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
　　　　　　　　திரிவேனே
　　நானிலம் அலைந்து
நாகமணி யின்ற நாதநிலை கண்டு
　　நாடியதில் நின்று
　　　　　　　　தொழுகேனே
சோதியுணர் வின்ற வாழ்வுசிவ மென்ற
　　சோகமது தந்து
　　　　　　　　எனையாள்வாய்
சூர்குலம் வென்று வாகையொடு சென்று
　　சோலைமலை நின்ற
　　　　　　　　பெருமாளே

'ஆன' என்றால் வேதங்களுக்கெல்லாம் உற்பத்தி ஸ்தானமான என்று பொருள். பறவை இனமெல்லாம் 'கூ', "மே", 'பே' என்றுதான் கத்தும். ஒரே ஒரு பட்சி மட்டும் 'ஓ'வென்று கத்தும். சேவல், ''கொக்கறுகோ'' என்று கூவும். கொக்கு என்றால் மாமரம். கொக்கு—அறுகோ என்றால் மாமரத்தையறுத்த கோ என்று பொருள். மாமரமாக வந்த சூர வடிவத்தை வென்ற வீர முருகனுக்குச் சேவல் போற்றி கூறும். சேவல், பிரணவத்தை நாத வடிவமாக ஒலிக்கிறது. மயில் விந்து வடிவத்திலும், சேவல் நாத வடிவத்திலும் இருக்கின்றன. வேல் — கலை. இவற்றுக்கெல்லாம் தலைவன் முருகன்.

அருணகிரிநாதர் பாடுகிறார்:

நாத விந்துக லாதீ நமோநம
　வேத மந்த்ரசொ ரூபா நமோநம
　ஞான பண்டித ஸாமீ நமோநம
　　　　　　　　வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
　போக அந்தரி பாலா நமோநம
　நாக பந்தம யூரா நமோநம
　　　　　　　　பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
　கீத கிண்கிணி பாதா நமோநம
　தீர சம்ப்ரம வீரா நமோநம
　　　　　　　　கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோநம
　தூய அம்பல லீலா நமோநம
　தேவ குஞ்சரி பாகா நமோநம
　　　　　　　　அருள்தாராய்

மயில் தோகை விரித்து ஆடுவது 'ஓம்' என்ற எழுத்துருவம். சேவல் கூவுவது அருவம். இந்த இரண்டுக்கும் இடையில் இருக்கின்றார் கந்தவேள். உருவன்று; அருவன்று என்று உணர்த்துகிறார் அவர். மயில் இருண்ட மேகத்தைக் கண்டு மகிழும். அதனால் அது இருள். சேவல் செஞ்ஞாயிற்றைக் கண்டு மகிழும். அதனால் ஒளி. இருள், ஒளி என்ற இரண்டுக்கும் இடையில் இருக்கின்றார் கந்தவேள். இருளன்று; ஒளியன்று என்று உணர்த்துகின்றார். அநுபூதிபெற்ற செல்வராகிய அருணகிரிநாதரின் அநுபவத்தைக் காண்போம்.

　　முருகன் தனிவேல் முனி
　　　　நங்குரு என்று
　　அருள்கொண்டு அறியார்
　　　　அறியும் தரமோ ?
　　உருஅன்று அருஅன்று
　　　　உளதன்று இலதன்று
　　இருள்அன்று ஒளிஅன்று
　　　　என நின்றதுவே
　　　　　　　　(கந்தரநுபூதி)

மயில் பச்சை நிறம்; அதன் சரீரம் பச்சை; கழுத்து நீலம். பரமேசுவரனுக்கு நீலகண்டன் என்று பெயர். சிவபெருமானின் நீலகண்டம் விஷத்தை அடக்கியது. மயிலும் விஷத்தை அடக்கும். மயிலை நினைப்பவர்க்கு விஷ பயம் இல்லை.

சுப்பிரமணியர் அவதாரம் செய்தது சூர சம்ஹாரத்துக்காக அல்ல. இந்திராணியின் மாங்கல்யத்தை ரட்சிக்க வந்தார். ஆகவே, ''கந்தன் கருணை'' படித்த பெண்கள் தீர்க்க சுமங்கலிகளாக இருப்பார்கள். திருமாங்கல்யத்தை ரட்சிக்கவந்த தெய்வம் முருகன். சூரபன்மனுக்கு வேறு வடிவம் தந்து, இந்திரனுக்கு உயிரும் தந்த தெய்வம் முருகன்.

அகந்தை நீங்கியபின், சேவலும் மயிலுமான சூரபன்மன் மீது கருணை காட்டிய கந்தவேள், மயிலை ஊர்தியாகக் கொண்டு ஆரோகணித்தருளினார்.

முந்துதமிழ் மாலை கோடிக் கோடி
　சந்தமொடு நீடு பாடிப் பாடி
　முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி
　　　　　　　　யுழலாதே
முந்தைவினை யேவ ராமற் போக
　மங்கையர்கள் காதல் தூரத் தேக
　முந்தடிமை யேனை யாளத் தானு
　　　　　　　　முனைமீதே

திந்திமி தோதி திதித் திதி
தந்ததன தான தானத் தான
செஞ்செணகு சேகு தாளத் தோடு
நடமாடுஞ்
செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்கஅநு கூல பார்வைத் தீர
செம்பொன்மயில் மீதி லேயெப்
போது வருவாயே''

அடியார்கள் முறையிடும் இடம் தோறும் சென்று அருள்புரிவதற்காகப் பல மைல்களைக் கடக்க ஒரு மயில் மீது தோன்றியருளிய கந்தவேளின் திருக்கோலத்தைத் திருமால், பிரம்மன், இந்திரன் முதலிய தேவர்கள் தம் கண்களுக்கு ஓர் அரிய அமிருகத்தைப் பெற்றாற்போலத் தரிசித்து ஆரவாரம் செய்தனர்; மகிழ்ச்சிப் பெருக்கால் துள்ளினர்; ஆடிப்பாடிப் புளகாங்கிதம் அடைந்தனர்; பூமழை பொழிந்து திருவேலிறைவன் திருவடிகளைத் தொழுது வலம் வந்து மகிழ்ந்து துதி செய்யலாயினர்.

தேவர்கள் எம்பெருமானை நோக்கி, ''சுவாமி! தாங்கள் வேற்படையினால் சூரபன்மனைச் சங்கரிக்கவில்லை; தங்களை வணங்குகின்ற அடியேங்களது வினையின் வேரை அறுத்தீர்கள். இனி எங்கட்கு வேறோர் குறையுண்டோ? அவுணர்கள் நூற்றெட்டு யுகங்களாக எங்களை வருத்தினார்கள். உய்யும் வகையின்றி நாங்கள் உலைந்தோம். அவ்வாறு உலைந்த எங்களை உய்விக்கும்பொருட்டே தேவரீர் ஆறு திருமுகங் கொண்டு திரு அவதாரம் செய்து காத்தருளினீர்கள். உலகில் இனி வேதாசாரங்கள் நிலைபெறும்; நாங்கள் ஆறு'''இயும் பழைய செல்வங்களும் பெறுவோம். இவை யாவற்றுக்கும் மேலாக, கண்ணுக்கு நேராகத் தங்கள் லீலை கண்டு காண்பானும், காட்சியும், காட்டுவானும், காட்சிப் பொருளும் ஆகிய இவையெல்லாம் தேவரீரே என்பதை உணர்ந்தோம். இனி தேவரீரின் திருவடிகளுக்கே தொண்டு பூண்டோம்'' என்று கூறித் துதித்தார்கள்.

தம்மைத் துதித்த இமையவர்கட்கெல்லாம் ஆறுமுகப் பெருமான் அருள் பாலித்தார்.

போர்க்களத்தில் இறவாது தப்பிய அவுணர்கள் சிலர் வீரமகேந்திரபுரி அரண்மனைக்கு ஓடோடிச் சென்று முருகப் பெருமானின் வேற்படையால் சூரபன்மன் இறந்தான் என்ற செய்தியைச் சூரபன்மனின் பட்டத்தரசி பதுமகோமளைக்கும் மற்றைய மனைவியர்க்கும் சொன்னார்கள். இச்செய்தி செவியில் முழுவதும் புகு முன்னரே பதுமகோமளை இடியால் தாக்குண்ட நாகம் போல் தரையில் சாய்ந்தாள். அவ்வனவில் அவள் ஆவி பிரிந்தது.

காவல் மன்னவன் இறந்தனன் எனும்
உரை கன்னத்துள்
மேவும் எல்லையில் அசனி
ஏறுண்ட வெம்பணியே போல்
தேவி யாகிய பதுமகோமளை
எனும் திருமங்கை
ஆவி நீங்கினள் தலையளி
யாகியது அதுவன்றோ ?

பத்தினி பதியின் மாட்டுக் கொள்ளும் தலையாய அன்புக்கு எடுத்துக்காட்டு இதுவன்றோ? சூரபன்மனின் மற்றைய மனைவியர்கள் செய்தியறிந்து இதயம் துடித்துக்கொண்டு அலறினார்கள். தீக்குண்டம் ஒன்றை உண்டாக்கி இறந்த பதுமகோமளையின் உடலை அதிலிட்டுத் தாமும் அதில் வீழ்ந்து இறந்தார்கள். அப்பொழுது கதிரவன் மறைந்தான். மாலைக் காலம் ஆயிற்று. அந்நகரத்தில் அதுகாறும் அவுணர் புறமிருந்த இலட்சுமி நீங்கினாள்.

வேலாயுதக் கடவுள் வீரவாகு தேவரை அன்புடன் நோக்கி, ''வீரனே, இந்திர குமாரனாகிய சயந்தனையும், தேவர்களையும் சிறையினின்றும் மீட்டுக் கொண்டு வருவாய்'' என்று அருளினார். வீரவாகு தேவர் சிறைச்சாலையை அடைந்தார். சிறையிருந்த தேவர்கள் அரம்பையர் ஆகியோரின் கால்களிற் பட்ட விலங்குகள் தாமே தெறித்து ஒடிந்தன. எம்பெருமான் அசுரரை வென்ற சுபச் செய்தியை அமரர்கள் கேட்டு ஆனந்தித்தனர். அனைவரும் போர்க்களத்தை அடைந்து குமாரக் கடவுளை வல'்'் வந்து வண'ங்கினர்.

சயந்தன் தனது பிதாவாகிய இந்திரனை வணங்கினான். இந்திரன் சயந்தனை எடுத்துத் தழுவி இன்புற்றான்.

சூரபன்மன் இறந்த செய்தி, மீனகக் கடலில் ஓடி ஒளிந்த இரணியனுக்கு எட்டியது. தன் பிதா இறந்ததையும், அவன் சேவலும், மயிலுமாய்ச் செவ்வேளுக்கு அடிமைப்பட்டதையும் கண்டு கலங்கி, வான வீதியில் நின்று அழுதான்.

ஆழியான் வேத
னமரர்க் கிறைமுதலோர்
வாழியா யென்று
வழுத்தியிட வைகியநீ
பூழியார் மேனிப்
புராரிசிறு வன்றேரிற்
கோழியாய் நின்று
விலாவொடியக் கூவுதியோ !
ஓகையா லண்டத்
துயிர்களெலாம் வந்திறைஞ்சச்

அஞ்சலி



எங்கள் அருமைத் தந்தையார் திரு வி. சுப்பையா முதலியார் இறைவனடி சேர்ந்து 17-12-1965புடன் ஓராண்டுஆகிறது. எனினும் எங்கள் உள்ளங்களில் அவர் என்றும் நிலையாக வீற்றிருக்கிறார். ஜில்லா போலீஸ் சூப்பரின்டெண்டாக நேர்மையுடன் பணியாற்றி பொதுமக்களின் நன் மதிப்பைப் பெற்றவர். மக்கள் நினைவிலும் நீங்காமல் இன்றும் நிற்கிறார். அவருக்கு எங்கள் அஞ்சலி.

எஸ். வையாபுரி, B. E. சென்னை

எஸ். ராஜசேகரன், பெங்களூர்


'மேனியழகுக்காக
நான்
விரும்புவது
லக்ஸ்'
என்கிறுர் ஜமுனு
LUX
LUX
TOILET SOAP
மேனியழகு... ஜமுனுவுக்கு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் உங்களுக்கும்... எனவே அதே கவனிப்புக்குரியது.
'மாதரின் வனப்புக்கு மாசற்ற மேனியைவிட மேலான சிறப்பு ஏது?' என்கிறுர் வடிவழகி ஜமுனு, 'எனதழகைப் பேண நான் என்றும் உபயோகிப்பது லக்ஸ்: செழிப்பான மென்மை நுரையுடன் சிந்தை கவரும் நறுமண சோப். எனக்கு அதுவே விருப்பம். உங்களுக்கும் அப்படித்தானே?' உமதெழிலும் பொலிவடைய உறுதுணை லக்ஸ்.
வெண்மையிலும், வானவில்லின் 4 வண்ணங்களிலும் வரும் சோப்.
லக்ஸ் டாய்லெட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் தூய, மெல்லிளம் அழகுசாதன சோப்
லின்டாஸ்—LTS.200-140 TM
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

சேனகயாம் மஞ்சுற்
றிருந்தான்கொண் டேற்றிடு நீ
வானகயார் கின்ற
வடிவேற் கரத்தோனைத்
தோனகயாய் நின்று
சுமக்குநியோ தோன்றுலோ!


''முன்பு உன் பக்கமாய் நின்று போரில் உயிரை விடாமல் ஒளிந்து உய்ந்த நான், இன்று உன்மீது அன்பு கொண்டவன் போல் அழுகின்றேன்; அதனால் பெரும் பழிக்கு ஆளானேன். புத்திரர்கள் தந்தைக்குச் செய்யும் கடமையினின்றும் நீங்கினேன்.

''அப்பா! நீ இறவாது மயிலும் சேவலும் ஆகியிருப்பதால் நீர்க்கடன் செய்வதற்கும் நான் பாக்கியம் செய்யவில்லை. என்னைப் பற்றி நீ என்ன நினைக்கின்றாயோ?'' என்று பலவாறாகக் கூறி அழுதான். பின்னர் ராஜகுருவான சுக்கிராச்சாரியாரை அணுகி, இறந்த மற்வர்க்கெல்லாம் நீர்க்கடன் செய்தான். பின்னர், 'துன்பத்துக்கு வித்து செல்வம்' என்பதை உணர்ந்து சிவபெருமானைத் தியானித்து முக்தி பெறும் - பொருட்டு ஒருபுறம் போய்த் தவம் மேற்கொண்டான்.

இடும்பன், சூரபன்மனின் குரு. அவனுடைய மனைவி இடும்பி. அவர்கள் இருவரும் கைலாயத்தில் தவம் செய்து கொண்டிருந்தார்கள். அகஸ்திய முனிவர் வந்து சிவபெருமானைத் தொழுதார். ''தெற்கே சென்று தவமிருப்பாய்'' என்றார் சிவபெருமான். தெற்கே கைலாயத்துக்குச் சமமான புண்ணிய மலை இல்லையே என்று எண்ணிய அகஸ்தியர் சிவபெருமானிடம் இக்குறையைக் கூறினார். உடனே சிவபெருமான் சிவசக்தி வடிவான இரு குன்றுகளைத் தென்னகத்துக்குத் தந்தருளக் கருதினார். இடும்பனை அழைத்து, ''சக்தி மலையையும், சிவமலையையும் கொண்டு வா'' என்று யோக தண்டத்தைக் கொடுத்தார்.

அஷ்ட நாகங்களாலும் பின்னிச் சக்தி மலையையும் சிவமலையையும் யோக தண்டத்தின் இருபுறமும் கட்டிக் காவடியாக்கி இடும்பனும் இடும்பியும் தூக்கிக் கொண்டு போனார்கள்.

வராககிரி என்று ஒரு மலை. அதை இப்பொழுது கோடைக்கானல் என்று சொல்லுகிறார்கள். அங்கே மலைக் காவடியை வைத்துவிட்டு இடும்பன் சாப்பிடப் போனான். சாப்பிட்டு முடிந்ததும், வந்து மலையைத் தூக்கினான். அந்த மலையைத் தூக்க முடியவில்லை. மலையின் மீது ஒரு சிறுவன் இருந்தான். அந்தச் சிறுவனிடம் கோபம் கொண்ட இடும்பன், அவனுடன் சண்டை யிட்டான். சிறுவனாக வந்திருந்த முருகப் பெருமான் சிரித்தார். இடும்பன் எரிந்து விட்டான். ''எம்பெருமானே! மாங்கல்ய பிட்சை கொடுக்க வேண்டும்'' என்று இடும்பி வேண்டிக் கொண்டாள். ''நீ மலையின் மத்தியில் இரு. மலைக்கு வருகிறவர்கள் முதலில் இடும்பனுக்குப் பூஜை செய்த பின்தான் கடம்பனுக்குப் பூஜை செய்ய வேண்டும்'' என்றார். அதிலிருந்து தான் காவடி எடுக்கின்ற வழக்கம் ஏற்பட்டது.



ஹெட்கிளார்க்: என்ன மானேஜர் சார்! உங்களுக்குத்தான் இன்று வேலையே இல்லாமல் ஓய்வாக இருக்கிறீர்களே? பக்கத்துத் தியேட்டரிலே ஒரு நல்ல படம் ஓடுகிறதாம். போகப்படாதோ!

மானேஜர்: சொன்னதற்கு நன்றி. வேண்டாம்.

ஹெட்கிளார்க்: அப்ப நான் போயிட்டு வரட்டுமா!

சூரபன்மனுடன் செய்த சமரில் அமரர்புறமிருந்து இறந்த பூதர்கள் அனைவரும் எழுந்து வருமாறு திருவுளங் கொண்டார். இறந்த பூதகணங்கள் யாவும் உயிர்பெற்று எழுந்து வந்து கூடி, குமாரக் கடவுள் சந்நிதியை அடைந்து அவரை வணங்கின. வடிவேலண்ணல் வருணபகவானை அழைத்து ''நாம் தங்கி இறங்கி இருந்த இலங்கை தவிர வீரமகேந்திரபுரியையும் அவுணரின் ஏழு தீவுகளையும் அழித்துவிடு'' என்று கூறியருளினார். வருணன் உடனே வீரமகேந்திரபுரியையும் துவீபங்களையும் கடலினுட் கொண்டான்.

அரிஅயனாதி அமரர்களும் இலக்கத் தொன்பது வீரர்களும் துதி செய்து மருங்கில் வர, முருகப் பெருமான் போர்க்களம் நீங்கி, இலங்கையையும் கடலையும் கடந்து ஜயந்திமலை என்கின்ற சிறப்புமிக்க செந்திற்பதியை யடைந்தார். மயில் வாகனத்தினின்றும் இறங்கிக் கோயிலினுள் புகுந்தார். — தேவர்கள் துதிக்க, எல்லா உயிர்கட்கும் அருள்புரியும் பெருங்கருணையுடன் திவ்விய சிங்காதனத்தின் மீது இனிது வீற்றிருந்தருளினார். அப்போது சூரியன் மேற்குக் கடலில் மூழ்கினான்.

தேவர்கள் முருகப்பெருமானுடைய உத்தரவுப்படி, திருமஞ்சனத்துக்காக, நறுமலர், சந்தனம், தூபம், தீபம் முதலியவைகளைக் கொண்டு வந்தார்கள். முருகப் பெருமானுக்குத் தாங்கள் பூஜை செய்யப் போகிறோம் என்ற ஆனந்தம் அவர்களுக்கு. ஆனால் எளிமையிற் சிறந்த ஏந்தலோ தாம் பூஜை பெறும் தெய்வமாயிராமல் பூஜை புரியும் தெய்வமாயிருக்க விரும்பினார். எனவே, முருகப் பெருமான் செந்திற் பதியில் சிவலிங்கம் வைத்து அன்புடன் வழிபட்டார். ஒவ்வொரு மலராகப் போட்டுக் கொண்டே வந்தார். அந்த அர்ச்சனையில் அகம் கரைந்த மால், அயன், பிரம்மா முதலிய தேவர்கள் கடைசி அர்ச்சனையின் போது பரவசப்பட்டு, 'முருகா' என்று கூவினர். அப்போது கையிலெடுத்த பூவுடன் திரும்பிக் காட்சி கொடுத்தார் கந்தப் பெருமான். திருச்செந்தூரில் இன்னமும் இப்படித்தான் ஒரு கரத்தில் அர்ச்சனை மலர் கொண்டவராக சுவாமியின் கோலம் இருக்கிறது. பெரியவர்களைப் பூஜையில் காண்பது மற்ற சந்தர்ப்பங்களில் காண்பதைக் காட்டிலும் பெருமை. ஆகவே, மற்ற கோவில்களில் உள்ள சுவாமியைவிடத் திருச்செந்தூரில் உள்ள முருகப் பெருமானுக்குப் பெருமை அதிகம்.

பூஜை புரிந்த பெருமான் பிறகு தேவர்களின் பூஜையைத் தாமும் பெற்றார். ''உங்களுக்கு இன்னமும் ஏதேனும் குறைகள் இருந்தால் கூறி, வேண்டிய வரங்களைக் கேட்டு உய்வு பெறுங்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். ''எம்பெருமானே! அடியேங்கட்கு இனி ஒரு குறைவும் இல்லை. தங்கள் திருவடியில் நீங்காத அன்பைத் தந்தருள வேண்டும்'' என்று தேவர்கள் வேண்டிக் கொண்டார்கள். ஆறுமுகவள்ளல் அவ்வரத்தை நல்கினார். அன்றைய இரவு கழியக் கதிரவன் கீழ் வானில் உதயமானான்.

செவ்வேள் செந்திற்பதியை நீங்கிப் பரிவாரங்களுடன் மயில் வாகனத்தில் புறப்பட்டார். அப்போது நான்முகன், திருமால், இந்திரன் படை வீரர்கள் முதலிய யாவரையும் கௌரவிக்கக் கருதினார். பிறர்க்கு மதிப்புத் தரும் மாண்புடன் அவர்களைப் பார்த்து, ''நீங்களும் உங்கள் வாகனங்களில் ஏறி நமக்குப் பக்கத்தில் புறப்பட்டு வாருங்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். அதன்படி அவரவர்கள் தத்தம் வாகனத்தில் புறப்பட்டனர்.


பிரம்மாவின் வாகனம் அன்னம். அன்னத்துக்கு (உணவுக்கு) நாம் வாகனம். அன்னத்தின் மீது செல்லுவார் பிரம்மா. அன்னம் நம்மீது ஏறுகிறது. வண்டிக்குள் நாம் ஏறிக் கொண்டால் குறித்த இடத்துக்குப் போகலாம். வண்டி நம் மீது ஏறி விட்டால்.....? அன்னம் நமக்கு வாகனமாயின் நாமும் பிரம்மனைப் போல் ஆக்க சக்தியாக விளங்க முடியும்.

தேவர்கள் தத்தம் வாகனங்களில் ஏறி ஆறுமுகப் பெருமானிடம் செல்ல, இரண்டாயிர வெள்ளம் பூதங்களும் வந்து நெருங்கினார்கள். பூத்தூளியினால் தேவலோகம் பூழியாகியது. குடை, கொடி, ஆலவட்டம் முதலியன நெருங்கின. வேத ஒலியும், தேவர்களுடைய வாழ்த்தொலியும், முருகக் கடவுளின் ஊர்தியாகிய மயிலும், கொடியாகிய கோழியும் கூவும் ஒலிகளும் எங்கும் மங்களமாகப் பரவின. திக்விஜய பிரதாபரான ஆறுமுகக் கடவுள் மதுரைத் திருநகரின் மேற்றிசையில் விளங்கும் திருப்பரங்குன்றமடைந்தார்.

திருப்பரங்குன்றத்தில் தவம் செய்து கொண்டிருந்த பராசர புதல்வர் அறுவரும், பிரம்மா முதலிய தேவர்களும் ஆறுமுகக் கடவுளை வணங்கி, ''சுவாமீ! தேவரீர் இக்குன்றத்தில் வீற்றிருந்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் விருப்பத்தின்படி திருப்பரங்குன்றத்தின் சாரலில் பூதசேனைகளுடன் ஏறிச் சென்றார் தேவநாயகன். தேவதச்சன் எம்பெருமானுக்காக அக்குன்றின் மீது அளவற்ற வீதிகளையும், கோயில்களையும், சோலைகளையும், வாவிகளையும் அமைத்தான். ஆறுமுகக் கடவுள் அமரர் அனைவரையும் மத்திய கலாமண்டபத்தில் அவரவர்கட்குரிய இடங்களில் அமரச் செய்து, மயில்வாகனத்தினின்றும் இறங்கிச் சிற்சபையில் அமைக்கப்பட்டிருந்த திவ்விய சிங்காதனத்தின் மீது அமர்ந்தார். காட்சி என்றால் அது வல்லவோ காட்சி ?

மனம் நிரம்பி வழியப் பெற்ற தேவர்கள் அவரவர் இருப்பிடம் சென்றனர். தாங்கள் முன்பு இழந்திருந்து, இன்று இறையருளால் திரும்பப் பெற்ற பொன்னுலகுக்குச் சென்றனர். வீரவாகு தேவரும், இலக்கத்தெண்மரும், பூதசேனைத் தலைவர்களும் எம்பெருமானின் திருவடிகளை வணங்கி ஏவல் செய்து கொண்டிருந்தார்கள்.

பராசரப் புதல்வர்கள் அறுவரும் முருகப் பெருமானை வணங்கித் துதித்தனர். முன்னர்ச் சிவபெருமான் அவர்களுக்குக் கூறியிருந்தவாறு அறுமுகக் கடவுள் அவ்வறுவருக்கும் ஞானோபதேசம் புரிந்தருளினார். (தொடரும்



கிருஷ்ணமூர்த்தி - சாந்தா

கல்கத்தா யுனைடெட் கமர்ஷியல் பாங்க் ஸ்ரீ S. V. வரதராஜன் அவர்கள் புத்திரி சௌ. சாந்தாவுக்கும் லக்ஷ்மிநாராயணபுரம் ஸ்ரீ L. A. கங்காதர ஐயர் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி L. G. கிருஷ்ணமூர்த்திக்கும் சமீபத்தில் கொடுவாயூரில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

திருப்பாவை ஜீயர்

மார்கழி மாதம் பிறந்தால் திருப்பாவை தமிழ் நாட்டில் தெருவெல்லாம் முழங்கக் கேட்கிறோம்.

இந்தத் திருப்பாவையை எப்படியெல்லாம் நம் முன்னோர்கள் அநுபவித்து வந்திருக்கின்றனர். அதனைச் சுற்றி எத்தகைய கதைகள் வளர்ந்திருக்கின்றன என்பதை நோக்கும்போது மெய் சிலிர்க்கத்தான் செய்கிறது. கதை வெறும் கதையாக நிற்பதில்லை. அதிலுள்ள ஆழ்ந்த கருத்தும் உண்மையும் நம் மனத்தை அப்படி உலுப்புகின்றன!

வைணவ ஆழ்வார்களுள் ஸ்ரீ ராமானுஜரை அறியாதார் யார்? அவருக்குத் ''திருப்பாவை ஜீயர்'' என்ற பெயரும் உண்டு என்பது ஒருசிலருக்கே தெரியும். அவ்வளவு தூரம் அவர் திருப்பாவையை நுகர்ந்தவர் என்பதை உணர்ந்து, அவருக்கு அந்தப் பட்டத்தைச் சூட்டியவர் அவருடைய குருநாதராகிய திருக்கோஷ்டியூர் நம்பிகள். இப்படி ஸ்ரீ ராமானுஜரின் திருப்பாவை ஈடுபாட்டைப் பற்றி நம்பிகள் உணர நேர்ந்த சந்தர்ப்பம் மிக அபூர்வமானது. அதை அறியுமுன் ஸ்ரீ ராமானுஜர் மெய் புளகித்த திருப்பாவைப் பாடலை இங்கு நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

கண்ணனின் தேவியான நப்பின்னையை எழுப்பப் பெண்கள் வருகிறார்கள். வந்தவர்கள் என்ன சொல்லி எழுப்புகிறார்கள்?

'மத யானைகளைப் பெற்றவன், பின் வாங்காத வீரம் செறிந்த தோள் வலி பெற்றவன்—நந்தகோபன். அவனுடைய மருமகளே! நப்பின்னாய்! மணம் கமழும் கூந்தலை உடையவளே! தயவு செய்து வாசற்கதவைத் திறக்க மாட்டாயோ!

நேரமாகிறதே! எங்கும் கோழிகள் கூவத் தொடங்கின! குயிலினங்கள் பாடத் தொடங்கி விட்டன!

விரல்களிடையில் பந்தை வைத்துக் கொண்டு விளையாடும் பெண்ணே! உன் கணவன் கண்ணன் புகழ் பாட, உன்னுடைய அழகிய செந்தாமரைக் கையால் உன் கை வளைகள் ஒலிக்க வந்து கதவைத் திறந்து விடேன்!'

என்று பிராட்டியையே இளம் பெண்கள் இறைஞ்சுகிறார்கள்!

உந்து மதகளிற்றன்
  ஓடாத தோள் வலியன்
நந்த கோபாலன்
  மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும்
  குழலீ! கடைதிறவாய்!
வந்தெங் கும்கோழி
  அழைத்தனகாண்! மாதவிப்
பந்தர்மேல் பல்கால்
  குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி!உன்
  மைத்துனன் பேர்பாட
செந்தாமரைக் கையால்
  சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய்
  மகிழ்ந்தேலோர் எம்பாவாய்!

இப்பொழுது நாம ஸ்ரீ ராமானுஜரிடம் செல்வோம்.

வைணவத்தின் ரகசியம் அறிந்தவர் திருக்கோஷ்டியூரிலே எழுந்தருளியிருக்கும் பெரிய நம்பிகள் என்பதை அறிந்த ஸ்ரீ ராமானுஜர், திருக்கோஷ்டியூருக்குச் செல்கிறார். ஆனால் திருக்கோஷ்டியூர் நம்பிகள் அந்தப் பரம ரகசியத்தை எளிதில் சொல்லி விடுவதாக இல்லை. பலப் பல பரீட்சைகள் வைக்கிறார். சுமார் பதினெட்டு முறை அவரைத் தமது இல்லத்துக்கு இழுத்தடிக்கிறார். கடைசியில் அவர் உயிர்த் தியாகம் செய்துகொள்வார் என்ற நிலை ஏற்பட்டவுடன்தான் திருக்கோஷ்டியூர் நம்பிகளின் இதயம் கனிகிறது.

திருக்கோஷ்டியூரில், ஸ்ரீ ராமானுஜர் தங்கியிருந்த காலையில் ஒருநாள் ஒரு ரஸமான சம்பவம் நிகழ்ந்தது.





ஸ்ரீ ராமானுஜர் சந்நியாசி; த்ரி தண்டத்தை ஏந்தி, வடமொழி சுலோகங்களையும், தமிழ்ப் பாசுரங்களையும் உள்ளம் நெகிழப் பாடிக்கொண்டே பிக்ஷைக்குப் போவார்.

இப்படிப் பாடிக்கொண்டே ஒருநாள் அவர் திருக்கோஷ்டியூர் நம்பிகள் இல்லத்துக்குப் போனபோது அன்று அவர் நா பாடிக்கொண்டிருந்தது திருப்பாவைப் பாடலாகிய ''ஓடாத தோள் வலியன்'' என்பதாகும். அப்பாடலின் சொற்களை நா சொல்லிக்கொண்டிருந்தபோது, அவர் உள்ளம், அச் சொற்களைக் குறிக்கும் பொருளையே மனத் திரையில் கண்டு களித்துக் கொண்டிருந்தது.

அவர் திருக்கோஷ்டியூரிலேயே இல்லை; மதகளிறுகள் கட்டியுள்ள நந்தகோபனின் கோகுலத்துக்கே சென்று விட்டார். அது மட்டுமல்ல. அவரே நந்தகோபனின் மருமகளான நப்பின்னையைத் துயிலெழுப்பும் கோபிகையாகி விட்டார்!

''வந்து எங்கும் கோழி
அழைத்தனகாண்! மாதவிப்
பந்தர்மேல் பல்கால்
குயிலினங்கள் கூவினகாண்

என்றெல்லாம் நப்பின்னையை இறைஞ்சுகிறார்.

இப்படி உள்ளம் இறைஞ்சுகிறது. நா மொழிகிறது — பாடுகிறது. கால்கள் உணர்வின்றி நடந்து மேலே சென்றுகொண்டே இருக்கின்றன.


அங்கே ஓர் இல்லம் தட்டுப்பட்டது. வழக்கத்தின் காரணமாகக் கால்கள் நின்றன. உள்ளமோ நந்த கோகுலத்தில் நப்பின்னையை எழுப்புவதில்தான் இருக்கிறது.

இந்த இல்லத்தை அடைந்தபோது,

பந்தார் விரலி! உன்
மைத்துனன் பேர்பாட
செந்தா மரைக்கையால்
சீரார் வளை ஒலிப்ப
வந்து திறவாய்!

என்று அவர் — பாடினார். பாட்டின் பொருளுக் கேற்பவே, கையில் பந்துடனும், கைகளில் வளைகள் கிண் கிண் என்று ஒலிக்கவும் அழகே உருவமான பெண் ஒருத்தி அவ்வீட்டுக் கதவைத் திறந்தாள்! நந்த கோகுலத்தில் இருக்கும் அவரது உள்ளம் நப்பின்னைப்பிராட்டியே தம் அழைப்பைக் கேட்டுக் கதவு திறந்து விட்டது போன்ற உணர்ச்சியில் சிலிர்த்தது. உள்ளத்தில் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்துப் பரவசமாகி மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தார்.

ஏதோ ஒரு சந்நியாசி, பிச்சைக்கு வந்த அவருக்குப் பிச்சையிடுவோம்



என்று வந்த அப்பெண்ணுக்கு எப்படி யிருக்கும்? தன்னை வெறித்துப் பார்த்ததையும், அடுத்த கணம் மூர்ச்சித்து விழுந்ததையும் தவிர வேறு ஒன்றும் அறியாத அப்பெண் என்ன நினைத்திருப்பாள்? 'இது என்ன கபட சந்நியாசிபோல் அல்லவா இருக்கிறது?' என்று தானே நினைக்கக் கூடும்? அதைத்தான் அவளும் நினைத்தாள். பயம் அவளைப் பற்றிக் கொண்டது. உடல் பதற, கைகளைப் பிசைந்து கொண்டு உள்ளே சென்று, தந்தையிடம் ''பிக்ஷைக்கு வந்திருக்கிறாரே என்று சொல்லிக் கதவைத் திறந்தேன். த்ரி தண்டம் ஏந்திய அந்த சந்நியாசி என்னைக் கண்டு மோகித்து, மூர்ச்சை யுற்று வாசலில் விழுந்து கிடக்கிறாரே!'' என்றாள் அப்பெண்!

ஆம்; அப்பெண் யார்? அவள் தந்தைதான் யார்?

அவள்தான் அத்துழாய்; ராமானுஜர் யாரிடம் ரகசியம் அறிந்து போக வந்திருக்கிறாரோ அந்தத் திருக்கோஷ்டியூர் நம்பிகளின் புதல்வி.

அத்துழாய், 'த்ரிதண்ட சந்நியாசி' என்ற மாத்திரத்திலேயே யார் வந்திருக்கவேண்டும், என்ன நடந்திருக்கிறது என்பதை ஊகித்துக்கொண்டார் திருக்கோஷ்டியூர் நம்பி. உடனே விரைந்து வாசலுக்குச் சென்றார். பாதி மூர்ச்சை தெளிந்தும் தெளியாமலும் இருந்த ஸ்ரீ ராமானுஜரைக் கண்டார். அவருடைய இயற்பெயரை வைத்துக் கூப்பிடவில்லை, மற்றப் பெயர்கள் எதையும் வைத்து அழைக்கவில்லை. புதிதாக ஒரு பெயர் சொல்லி அழைத்தார்.

''திருப்பாவை ஜீயரே! 'உந்து மதகளிற்றன்' என்ற பாசுரத்தை அநுஸந்தித்துக் கொண்டு வந்தீரோ?'' என்று கேட்டார் — அதாவது மதகளிற்றன் என்ற பாடலைப் பாடிக்கொண்டு வந்தீரோ? என்றுதான் கேட்டார்.

☞ ''ஆம்'' என்றார் ராமானுஜர். பிறகு நம்பி மகளைப் பார்த்து நடந்த விவரத்தைச் சொன்னார்:

''செந்தாமரைக் கையால்
சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய்!''

என்று பாடிக்கொண்டு வந்தபோது, அந்தப் பாட்டின் பொருளுக்கேற்ப நீ கதவு திறந்து கொண்டு வெளியே வந்தவுடன், அவர் உன்னைக் காணவில்லை. உன்னில் நப்பின்னையையே கண்டார்! அதனால்தான் அவர் கீழே விழுந்து, மெய் புளகித்து, தண்டம் சமர்ப்பித்தார்.

''அவரை எவ்வளவு தவறாக நினைத்துவிட்டாய்! அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்'' என்றார் நம்பிகள்.

ஃ ஃ ஃ


அவ்விதமே, அத்துழாய் அவர் பக்தியைக் கண்டு வியந்து, தான் செய்துவிட்ட அபசாரத்துக்கு வணங்கி, மன்னிப்புக் கோரினாள்.

இதைப் பார்க்கும்போது, நமது சிஷ்யரின் மனப் பக்குவத்தை எவ்வளவு நன்றாக நம்பிகள் உணர்ந்திருக்கிறார் என்பதைக் காண்கிறோம். ஆம், எவ்வித விசாரணையுமின்றியே யல்லவா நடந்த விவரத்தை அறிந்திருக்கிறார்!


இப்படிக் குருவை வியப்பதா, சீடரை வியப்பதா என்று தெரியாமல் திக்கு முக்காடிப் போகிறோம்.

இதனிடையில் அத்துழாயின் வெள்ளை மனத்தையும், அவ்வெள்ளை மனம் எப்படித் தவறு செய்ய நேர்ந்து, மன்னிப்புக் கோருகிறது என்பதையும் காணும்போது நம் நெஞ்சம் உருகிவிடுகிறது. பக்தியினிடையே எவ்வளவு துணிகரமான நவீன சிறுகதை யுக்தியை அந்தக் காலத்திலேயே குரு பரம்பரா பிரபாவா ஆசிரியர்கள் நுழைத்திருக்கிறார்கள் என்பதைக் காணும்போது மெய் சிலிர்க்கிறது.

— எஸ். வி. எஸ்.



இந்தியாவில் முதன் முதலாக டெலிவிஷன் மூலம் இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் கதீட்ரல் காரியாலயத்தில் சில வினாடிக்குள் உங்கள் காரில் இருந்தபடியே உங்கள் செக்கிற்கு பணம் பெறலாம். இதே மாதிரி பணமும் கட்டலாம்.




இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்

தலைமைக் காரியாலயம்: 151, மவுண்ட் ரோடு, சென்னை-2.

எம். ஸிடி. முத்தையா
சேர்மன்

கே. எம். நஞ்சப்பா
ஜெனரல் மானேஜர்

IOB-19-SA



கி.ராஜேந்திரன்

அத்தியாயம் 10

கனிவா? கபடமா?

உஷாவைப் பற்றிப் பல சமயங்களில் தங்கப்பன் பேசக் கேட்டிருக்கிறாள் மிருணாளினி. அப்போதெல்லாம் தங்கப்பனுடைய முகம் ஆர்வத்துடன் பிரகாசிப்பதைக் கண்டிருக்கிறாள், உஷா. செல்வம் - செல்வாக்குக் காரணமாகக் கர்வம் பிடித்து அலைவதாகத்தான் தென்பட்டாள் மிருணாளினியின் கண்களுக்கு. இந்த ராங்கிக்காரியிடம் இவர் அப்படி என்னதான் கண்டாரோ? நன்றாக மயக்கி இருக்கிறாள் இவரை என்று எண்ணியுமிருக்கிறாள். இப்படிப்பட்ட ஒருத்திக்காக அத்தனை தூரம் தன்னிடம் தங்கப்பன் பரிந்து பேசக் கேட்டு ஆச்சரியமடைந்திருக்கிறாள். இதையே இன்று செல்லத்தினிடம் கூறினாள் அவள்.

''உஷாவிடம் உன் அத்தானுக்குக் காதல் இல்லை; இருக்க முடியாது என்று நீ சொன்னால் இல்லாமலே போய்விடுமா செல்லம்? 'உஷாவுடைய சுபாவத்தைக் கண்டு ஏமாந்து போகாதீர்கள். அவள் மீது தவறில்லை; அவள் வளர்ந்த சூழ்நிலையில்தான் கோளாறு; எப்படியாவது அவளிடம் நல்லதொரு மனமாற்றத்தை உண்டாக்கப் போகிறேன் நான். இந்த வசீகர அழகுடன் பண்பும் பயனும் சேர்ந்துவிடும். அப்புறம் உஷாவுக்கு ஈடு இணை உலகத்திலேயே யாரும் கிடையாது' என்று அடிக்கடி உன் அத்தான் சொல்லியிருக்கிறார் என்னிடம்.''

''இவ்வளவுதானே, அக்கா! இதையா அப்படிப் பெரிதுபடுத்துகிறீங்க? ஒரு பெண்— அவருக்குச் சின்ன வயதிலிருந்தே பழக்கமான ஒருத்தி — சந்தர்ப்பச் சூழ்நிலைகளினாலே மனசு கெட்டுப் போய் எல்லார்கிட்டேயும் மரியாதைக் குறைவா நடந்துக்கிடறதும் அதட்டி உருட்டி மிரட்டறதுமா இருந்தா அவர் பார்த்துக்கிட்டுச் சும்மா நிற்க முடியுமா? அனுதாபத்தோடே அவளை நெருங்கி இப்படியெல்லாம் தாறுமாறு நடந்துக்கிடறது தப்புன்னு எடுத்துச் சொல்லி நல்வழிப் படுத்த முயன்றால் குற்றமா? அதுக்கு மேலே அவர் நடத்தைக்குப் புது அர்த்தங்கள் ஏன் கற்பிக்கிறீங்க?''

''அப்படி நினைத்து நினைத்துத்தான் உன்னை நீயே ஏமாற்றிக் கொண்டு வந்திருக்கிறாய், செல்லம். இனி மேலும் அப்படியே ஏமாந்து கொண்டிரு. நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் நான் ஏமாறத் தயாராக இல்லை. உஷாவிடம் அவருக்கு அனுதாபம்தான்-காதல் இல்லை என்றால் எதற்காக இத்தனை வருஷங்களாக உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளாமல் ஒத்திப் போட வேண்டும்? என்னை அவர் சந்திப்பதற்குப் பல வருஷங்கள் முன்னதாகவே நடந்திருக்க வேண்டுமே, உங்கள் திருமணம்?''

திடுமென்று செல்லம் எழுந்து நின்று கோபமாக மிருணாளினியைப் பார்த்தாள். ''நீங்கள் எனக்கும் அத்தானுக்கும் குறுக்கே வந்தது போதாதென்று அவரைப் பற்றித் தாறுமாறாகப் பேசி என் மனசையும் அவருக்கெதிரா விஷமாக்கப் பார்க்கிறீங்க. நான் உங்களோட இந்தச் சூழ்ச்சிக்கெல்லாம் பலியாக மாட்டேன்!'' என்று தன் கரங்களை முஷ்டியாக்கிக் கொண்டு நெஞ்சுடன் வைத்து அழுத்தியபடியே வேதனையுடன் இரைந்து கத்தினாள்.

''செல்லம்! நீ பயங்கரமான குற்றத்தை என் மீது சுமத்துகிறாய். ஆனால் அதற்காக நான் உன்னிடம் கோபப்படப் போவதில்லை. உணர்ச்சி வசப்படும்போது அறிவு சற்றுக் கலங்குவது எல்லாருக்குமே இயற்கைதான். ஏன் நேற்று எனக்கே இந்த நிலை ஏற்பட்டது....

''இதோ, பார்! இந்த வீட்டில் நான் பல தடவைகளில் சாப்பிட்டிருக்கிறேன். நீயே உன் கையால் எனக்கு ஆசையோடு விதம் விதமான பலகாரங்கள் செய்து தந்திருக்கிறாய். உனக்கு நான் துரோகம் செய்வேனா, செல்லம்? அப்படியே இருந்தாலும் அதற்காக இத்தனை நாட்கள் வரை காத்திருந்துவிட்டு இந்தச் சந்தர்ப்பத்திலா முயலப் போகிறேன்? வாசல் கதவைத் திறந்து

கொண்டு போய் வெளியே எட்டிப் பார்! தெரு முனையில் ஒரு ஸி. ஐ. டி. பொழுது போகாமல் சிகரெட்டுக்கு மேல் சிகரெட்டாக ஊதித் தள்ளியபடி இந்த வீட்டையே கண்காணித்துக் கொண்டு நிற்கிறான். இத்தனை பெரிய ஆபத்துக்கிடையில் இப்படியெல்லாம் வேஷம் போட்டுக் கொண்டு நான் இந்த வீட்டுக்குள் மீண்டும் துணிந்து அடியெடுத்து வைத்தது எதற்காக? உன் அத்தானை உன்னிடமிருந்து பறிப்பதற்காக இல்லை, செல்லம்! அவரை நீ அடைய வழி சொல்லித் தருவதற்காக!..........''

மிருணாளினி தொடர்ந்து பேசியபோது அவளுக்கு வார்த்தைகள் தடுமாறின. நாத் தழுதழுத்தது. ''நீயும் அவரும் உறவினால் நெருங்கியவர்கள். பந்தம், பாசம் எல்லாம் உண்டு. உஷாவிடம் அவர் சின்ன வயதிலிருந்தே பழகியவர். இடையில் நேற்று வந்தவளான எனக்கு அவரை அடைய வேண்டுமென்று நினைக்க என்ன அருகதை இருக்கிறது?''

முதன் முறையாக மிருணாளினியின் விழிகளில் கண்ணீர் தளும்பி நிற்பதைக் கண்ட செல்லத்தின் நெஞ்சம் அவளையும் மீறி நெகிழ்ந்தது. ''அக்கா! என்ன இது? நீங்களா இப்படிக் கண் கலங்குறீங்க? நம்பவே முடியலையே!'' என்றவள் அவளை அணுகினாள். அவள் கரத்தை அன்போடு பற்றித் தன் கன்னத்தில் ஒற்றிக்கொண்டாள் மிருணாளினி.

''ஆமாம், செல்லம்! நேற்று உன் அத்தானே என் உள்ளத்தைப் புரிந்து கொள்கிற நிலைக்குத்தான் நெருங்கி வந்து விட்டார். நானும்தான் உணர்ச்சிக் குவியலாகி என் வசமிழந்து அவர் காலடிகளில் என் அன்பைக் கொட்டிவிட இருந்தேன். ஆனால் நல்லவேளையாகக் கடைசி விநாடியில் என் அறிவு தெளிந்தது. என்னை நானே திடப்படுத்திக் கொண்டு அந்த இக்கட்டான கட்டத்தைச் சமாளித்து விட்டேன். லட்சியத்திலேயே உறுதியாக நிற்பது போல் நடித்து வெற்றி கண்டேன். இல்லாது போனால் அவருக்கு என்னிடமுள்ள மதிப்பு ரொம்ப ரொம்பக் குறைந்து விட்டிருக்கும். நான் அத்தனை சிரமப்பட்டு என் மனத்தை அடக்கி ஆண்டது எதற்காக? எத்தனையோ நாட்களாக நான் அவரிடம் நெருங்கிப் பழகி வந்தும் கூட அரசியலைத் தவிர அத்துமீறி அவரிடம் ஒரு வார்த்தை நான் பேசாதது யாருக்காக? உனக்காகவேதான்! அப்படி உன் நலனில் அக்கறை கொண்டுள்ள என்னைப் பற்றித் தான் போலீஸில் புகார் கொடுத்து விட்டு வந்திருக்கிறாய்!''

செல்லத்தினால் இவ்வளவையும் ஒரே சமயத்தில் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மிருணாளினி தங்கப்பனிடம் கொண்டுள்ள பேரன்புக்காக அவள் அனுதாபப்பட்டாள்; அவளுடைய அறிவாற்றலையும் திடசித்தத்தையும் கண்டு மலைத்தாள். அவளுடைய தியாக உணர்வைக் குறித்து விம்மிதமுற்றாள். ''அக்கா, நீங்க தங்கமானவங்க என்கிறது எனக்குத் தெரியாமல் போச்சு, அக்கா! இந்தப் பாவியை நீங்கதான் மன்னிக்கணும்; ஆண்டவன் மன்னிக்க மாட்டார்! உங்களுக்கு இருக்கிறது போல் அத்தனை நல்ல மனசு கடவுளுக்குக்கூட வராது'' என்று கூறி அவள் தோளிலே முகம் பதித்து விம்மி அழத் தொடங்கி விட்டாள்.

அவள் முதுகை அன்புடன் தடவிக் கொடுத்தவாறே, ''செல்லம்! கடவுளிடமும் பிரார்த்தனையிலும் என் போன்றவர்களுக்கு நம்பிக்கையில்லை. செயல் திறனைத் தான் நாங்கள் மதிப்போம். இப்போது நீயும் உன் அத்தானை அடையப் போராட வேண்



டும். அடங்கி ஒடுங்கி இருந்ததெல்லாம், போதும்! என்ன நான் சொல்வது?'' என்றாள் மிருணாளினி.

''நான் என்ன செய்யவேண்டும் அக்கா?'' என்றாள் செல்லம் ஒன்றும் புரியாதவளாக.

அவள் தலையை மெல்ல நிமிர்த்திய மிருணாளினி உள்ளிப்பாய் அவளை நோக்கியபடி கூறினாள்: ''என்னைப் ஒரு காரியம் செய்; போலீஸில் என்னைப்பற்றிப் புகார் செய்தது நீதான் என்பதை அவரிடம் நீயேசொல்லிவிடு. அதை நான் சொல்லப் போனால் அழகாயிராது!''



பற்றி நீ இனிமேல் கவலைப்படக் கூடாது. உனக்கு விரோதியில்லை நான். உன் அத்தானுக்கு என்னுடைய உண்மையான மன நிலை குறித்து எழுந்த சந்தேகங்களை அழித்து விட்டேன். என் காதலை என் மனத்துக்குள்ளேயே ஒரு கஞ்சனைப் போல் பொத்திப் பொத்தி வைத்துப் பாதுகாப்பதாக உனக்குச் சத்தியம் செய்து தருகிறேன். ஆனால் நீயும் இப்படியே எல்லாவற்றையும் உள்ளத்தில் பூட்டி வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. தங்கப்பனிடம் மனம் விட்டுப் பேசவேண்டும். தாராளமாகப் பழக வேண்டும். உனக்குத் தோன்றிய விஷயங்களைப் பற்றியெல்லாம் விவாதிக்க வேண்டும். அவருடைய தொழிலகத்தைப் பற்றி விசாரி; அதில் அவருக்கு ஏற்படும் சிக்கல்கள், சிரமங்கள் குறித்துக் கேள். உனக்கு அவையெல்லாம் புரிகிறதோ இல்லையோ, அனுதாபத்துடன் அத்தானை அணுகி இதை யெல்லாம் கேட்க வேண்டும். ஆறுதல் அளிக்க வேண்டும். உனக்கு அவரிடம் உள்ள காதலை இன்னும் வெளிப்படையாகக் காண்பித்துக்கொள், செல்லம்!''

''என்னுடைய காதலை அறியாதவரா அக்கா அவர்? புதிதாக இப்போது நான் என்ன சொல்லவிருக்கிறது?''

''உன் காதலை உணர்ந்தவர்தான் தங்கப்பன். ஆனால் அவருக்குத் தேவைப்படுவது அன்பு இயந்திரமில்லை செல்லம்; அன்பு இதயம்! உன் காதலின் அளப்பரிய தன்மையை அவருக்கு நீ சதா நினைவூட்டிக்கொண்டே யிருக்க வேண்டும்.

'வாழ்வதற்கு வழி சொல்வததாகக் கூறியவள் தன்னை ஒரேயடியாக வீழ்த்திவிடப் பார்க்கிறாளா? என்ன கபட நாடகம் இது?' என்பதுபோல் அவளைப் பார்த்தாள் செல்வம். அதை கவனித்தவளாக மிருணாளினி "சந்தேகப் பேயை மீண்டும் உன்னை ஆட்கொள்ள விடாதே செல்வம்!" என்று எச்சரித்தாள். "எனக்கு நீ இழைத்த தீங்குக்குப் பிராயச்சித்தமாக நினைத்து இந்தக் காரியத்தைச் செய்துவிடு! அப்புறம்தான் என்னைப் பற்றிப் பொறாமை கொண்டு போலீஸில் புகார் செய்யும் அளவுக்கு உன் அத்தானிடம் நீ ஆழ்ந்த காதல் கொண்டிருப்பது அவருக்கு விளங்கும்! உன் நன்மைக்காகத்தான் நான் சொல்கிறேன். கண்டிப்பாக இதைச் செய்ய வேண்டும் நீ! செய்வாயா செல்வம்?"

இந்தத் தருணத்தில் வாசல் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டது. "உன் அத்தானாகத்தான் இருக்கும், செல்வம்! கண்களைத் துடைத்துக் கொண்டு மலர்ந்த முகத்துடன் கதவைத் திற" என்றாள் மிருணாளினி. "நான் சொன்னது எதையும் மறந்துபோய்விடாதே போ!" என்று இலேசாக அவளைப் பிடித்துத் தள்ளினாள் வாசல் கதவை நோக்கி.

பரபரப்புடன் அவள் கட்டளைக்குக் கீழ்ப் படியச் சென்ற செல்வத்தை மிருணாளினியே மீண்டும் தடுத்து நிறுத்தினாள். "ஒருவேளை இது போலீஸாக இருந்தால் என்னைக் காட்டிக்கொடுத்துவிட மாட்டாயே? நான் இந்தப் பக்கம் தலை காட்டவேயில்லை என்று கூறி விடுவாயல்லவா?" என்றாள் கெஞ்சலும் கொஞ்சலுமான குரலில்.

"ஆகட்டும் அக்கா!" என்று ஒரு விம்மலுடன் தலையசைத்துச் செல்வம் சொல்வதைக் கேட்ட பின்னர்தான் நிம்மதி பெற்றவள் போல ஒரு மூலையில் கிடந்த கோஷாத் துணியைச் சுற்றி எடுத்துக் கொண்டு உள்ளே மறைவிடத்துக்குச் சென்றாள் மிருணாளினி.

குழப்பமடைந்த உள்ளத்துடன் வாசல் கதவைத் திறந்தாள் செல்வம்.

அத்தியாயம் 11

சிங்கத்தின் குகையில்....

தொழிலகத்தில் தங்கப்பனுக்கு இருப்புக் கொள்ளவே யில்லை. எப்படியாவது மிருணாளினியைச் சந்தித்து அவளைச் சூழ்ந்துள்ள அபாயத்தைக் கூறி எச்சரிக்க வேண்டும் என்று துடித்தான். ஆனால் அவளை எங்கே போய்த் தேடுவது? இதை எண்ணியபோது அவனுக்கே வியப்பாக இருந்தது. இத்தனை நாட்களாக அவளுடன் பழகியும் அவள் எங்கு தங்கியிருக்கிறாள் என்பதுகூடத் தனக்குக் கேட்கத் தோன்றவில்லை; அவளும் சொல்லவில்லை. அவள் வருவதும், புத்தகங்களைக் கொண்டு வந்து தருவதும், உரையாடுவதும், வந்த சுவடு தெரியாமல் சென்று மறைவதும் எல்லாமே ஒருவித மர்மம் சூழ்ந்ததாகத்தான் இருக்கின்றன. இன்ஸ்பெக்டர் குறிப்பிட்டதுபோல் ரொம்பவும் சாமர்த்திய சாலிதான் அவள்!

தங்கப்பன் அவளைப் பற்றிய நினைவுடன் புன்னகை பூத்தவாறே தொழிலகத்திலிருந்து வீடு நோக்கிக் கிளம்பினான். திடீரென்று அவனை ஒரு பயம் பற்றிக் கொண்டது. மிருணாளினி அவளைப் போலீஸார் தேடுகிறார்கள் என்ற விவரமே அறியாதவளாக வழக்கம் போல் தன்னைக் காணத் தன் வீட்டுக்கு வந்தால்? அவள் அங்கு வருவாள் என்பதாக எதிர்பார்த்து அதற்காகவே பக்கத்தில் எங்கேனும் மறைந்திருந்து போலீஸார் அவள் மீது பாய்ந்தால்? வலையில் சிக்கிய மானின் மருண்ட விழிகளைக் காணவில்லை தங்கப்பன். 'இப்படி நம்பிக்கைத் துரோகம் புரியலாமா?' என்று ஏக்கத்துடன் தன்னை நோக்கும் மிருணாளினியைத்தான் கண்டான் கற்பனையிலே. இந்த எண்ணம் தோன்றியதுதான் தாமதம். அவன் பதற்றத்துடன் தன் மோட்டார் சைக்கிளை வேகமாகச் செலுத்திக் கொண்டு சென்றான் சத்தியபுரியை நோக்கி. வீட்டை நெருங்க நெருங்க அவன் மனம் திக் திக்கென்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது பெரிதாக.

கதவைச் செல்வம் திறந்ததும் திறவாததுமாக, கவலையும் கலவரமும் பிரதிபலிக்கும் முகத்தினனாய், "மிருணாளினி வந்தாளா இங்கே?" என்று கேட்டான் தங்கப்பன்.

அவன் குரலைச் செவியுற்றதுடன் அவன் மட்டும் தனியாகத்தான் வந்திருக்கிறான் என்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டவளாகத் தைரியமாக வெளிப்பட்டாள் மிருணாளினி. "ஆமாம், இங்கேதான் இருக்கிறேன், ஒரு மணி நேரமாக" என்றாள்.

"மிருணாளினி! நீங்க இங்கே வந்தே இருக்கக்கூடாது. உங்களைப் போலீஸார் தேடுறாங்க!" என்றான் தங்கப்பன்.

"அடடா! பயப்பட வேண்டாம்! என்னால் உங்களுக்கு ஒரு தீங்கும் ஏற்படாது!" என்றாள் அவள் கிண்டலாக.

"விளையாடாதீங்க. எனக்காகவா நான் பயப்படுகிறேன்? பெரிய ஆபத்தில் சிக்கிக் கொள்ளீங்க நீங்க.. இந்த வீட்டுப் பக்கம் சதா போலீஸாரின் பார்வை இருந்து கொண்டேயிருக்கும்!"

"அவர்கள் சற்று அசந்து பார்வையை வேறுபுறம் திருப்பினால்கூட நீங்கள் செய்கிற ஆர்ப்பாட்டத்தில் அவர்கள் கவனத்தை மறுபடியும் கவர்ந்திழுத்து என்னைக் காட்டிக் கொடுத்து விடுவீர்கள் போலிருக்கிறதே!" என்றாள் மிருணாளினி லேசாகச் சிரித்தவாறு.

அவளுடைய அமைதியையும் தன்னுடைய பதற்றத்தையும் ஒப்பு நோக்கி வெட்கியவனாகத் தன் கேசத்தைக் கோதிவிட்டுக் கொண்டான் தங்கப்பன். "உங்களுக்கு இந்த விவரம் ஏற்கனவே தெரியுமா?"

"நன்றாகத் தெரியும். சற்று முன்னால்தான் செல்வத்திடம் கூறிக் கொண்டிருந்தேன். இந்தத் தெரு முனையில் நிற்கும் ஓர் உதவாக்

ஊரை ஸி. ஐ. டி.யைப் பற்றி. கோஷா ஸ்திரீ போல் வந்து நான் இங்கே நுழைவதை அவன் கண்டிருக்க முடியாது. அதனால் போலீஸாரின் கண்காணிப்பின் கீழ் இனி இன்று இரவு முழுவதும் நான் இங்கே நிம்மதியாகத் தங்கியிருக்கலாம். அதாவது நீங்கள் அனுமதி அளித்தால்...''

''நல்லா இருக்குதா நீங்க பேசறது? என்னிடம் உத்தரவு வாங்கணுமா நீங்க இங்கே இருக்க? உங்க வீடு இது. அவங்க வேறே எங்கெங்கெல்லாமோ உங்களைத் தேடி அலையட்டும். தங்கப்பன் வீட்டுப் பக்கமா வந்தால் அவனைப் பிடிச்சுப்பிடலாம்னு காத்துக் கிடக்கட்டும். நீங்க நம்ம வீட்டுக் குள்ளேயே ஜம்முன்னு நிம்மதியாப் படுத்துத் தூங்குங்க. அவங்க அதை ஊகிக்கவே போறதில்லை!'' தங்கப்பன் இப்படி உற்சாகத்துடன் கூறினான். ''இருந்தாலும் சிங்கத்தின் குகைக்குள்ளேயே நுழைவதுபோல் அசாத்தியத் துணிச்சல்தான் உங்களுக்கு'' என்று வியந்து பாராட்டினான்.

''இதைவிடப் பெரிய பெரிய துணிகரமான காரியங்களைச் செய்யவும், தியாகங்களைப் புரியவும் என்னை நானே தயார்ப் படுத்திக் கொண்டிருக்கிறேன்'' என்றான் மிருணாளினி. ''போலீஸாருக்கு ஸி.ஐ.டி.ங்க உண்டு என்றால் இந்த மிருணாளினிக்கும் சில ஒற்றர்கள் உண்டு. இன்று காலை போலீஸார் இங்கே வந்து உங்களை விசாரித்து, வீட்டைச் சோதனை போட்டது எல்லாம் எனக்குத் தெரியும். போலீஸில் என்னைப் பற்றிப் புகார் கொடுத்தது யார் என்பதைக் கூட அறிந்து தானிருக்கிறேன். ஆனால் அதை இப்போது நான் வெளியிடுவதாக உத்தேசமில்லை!'' கடைக்கண்ணால் செல்லத்தை நோக்கியபடி நான் என்ற சொல்லில் ஓர் அழுத்தம் கொடுத்துக் கூறினான் மிருணாளினி.

'யார் உங்கள்மீது என்ன குற்றம் சுமத்தினார்கள்?' என்று விவரமாகக் கேட்கும் மனநிலையில் இல்லை தங்கப்பன். ''மேற்கொண்டு நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று கவலையுடன் எதிர்காலத்தைப் பற்றி வினவினான்.

''நாளைக் காலையில் நீங்களெல்லாம் விழித்தெழுந்திருக்கு முன்னரே நான் கிளம்பிச் சென்று விடுவேன். தேவைக்கு அதிகமாக இங்கே உங்களுக்குப் பாரமாகத் தங்கியிருக்க மாட்டேன்.''

ஏதோ குறுக்கே பேச முற்பட்ட தங்கப்பனை நிதானிக்குமாறு சைகை காட்டிவிட்டுத் தொடர்ந்தான் மிருணாளினி.

''இந்த வீட்டைக் கண்காணித்து வரும் ஸி. ஐ. டி. நாளைப் பொழுது விடியும் சமயத்தில் விழிப்புடன் இருப்பதற்காக ஒரு டீ அருந்துவான். அதுவே அவனை நல்ல தூக்கத்தில் ஆழ்த்திவிடும். காரியம் முடிந்தது என்பதை எனக்கு அறிவிக்க என்னுடைய ஆள் நாய் ஊளையிடுவது போல் கத்திச் சமிக்ஞை செய்வான். நானும் உடனே கிளம்பிச் சென்று விடுவேன். போவதற்கு முன்னால் உங்களுடைய 'ஃபுல் ஸூட்' ஒன்றைக் கடன் வாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும். அப்புறம் அதைக் காணுமே என்று தேடிக் கொண்டிருக்கப் போகிறீர்கள் என்பதால் இப்போதே சொல்லிவைத்தேன்!''

''தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் அதுமட்டும் போதுமா உங்களை யாரும் அடையாளம் கண்டு கொள்ளாமல் இருக்க?''

''உங்களுடைய வேஷ்டி ஒன்று சீக்கிய பாணி தலைப்பாகையாக மாறி என் சிரத்தை அலங்கரிக்கும்! அப்புறம் இந்தத் தாடி மீசையையும் ஒட்ட வைத்துக் கொள்வேன்'' என்று கூறி இடையில் செருகியிருந்த ஒரு சிறு துணிப் பையை எடுத்துத் திறந்து அதனுள்ளிருந்த செயற்கைத் தாடி மீசையை எடுத்துத் தன் முகத்தோடு பொருத்தி வைத்துக் காட்டினான் மிருணாளினி. ''இப்போது யாரென்று புரிகிறதா என்னை? இப்படியாக நாளைக்கு இரண்டு வேஷம் மாற்றிக் கொண்டு போக வேண்டியதுதான்.''

''எங்கே போவீர்கள்? மறுபடியும் உங்களைச் சந்திப்பது எப்படி? எப்போது?''

''கொஞ்ச நாளைக்கு நாம் சந்திக்காமல் இருப்பதே நல்லது. போலீஸார் உங்களைத் தொந்தரவுபடுத்த மாட்டார்கள். என்னைப் பற்றி மேலும் விவரம் அறிய உங்களைச் சும்மா விட்டு வைப்பார்கள். பிறகு அசாதாரணமாக ஏதும் நிகழாதது கண்டு நீங்கள் அவர்கள் மிரட்டலுக்குப் பயந்துவிட்டதாக முடிவு கட்டுவார்கள். 'நமக்கேன் வம்பு' என்ற ரீதியில் நீங்கள் சிந்தித்திருப்பீர்கள்; இனி என்னோடு எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ள மாட்டீர்கள் என்று அவர்கள் தீர்மானிப்பார்கள். நானும் கம்பி எண்ண நேரிடுமோ என்று அஞ்சித்தான் ஊரை விட்டே ஓடிவிட்டேன் என்று கருதுவார்கள். எங்கே போனேன் என்று அவர்களுக்குத் தெரியாது. அந்த அளவுக்கு நானும் எச்சரிக்கையாக நடந்து கொள்வேன்.''

''சில வாரங்களில் இதெல்லாம் ஆறின கஞ்சி பழங் கஞ்சி என்ற கதையாகி விடும்'' என்று தங்கப்பன் அவனோடு ஒத்துப் பாடினான். ''அதனால் நான் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றுமே நடக்காதது போல் என் வேலைகளை வழக்கமான முறையில் கவனிக்கவிட்டுப் போக வேண்டியதுதான். அப்படித்தானே?''

தலையசைத்து அவன் கூறியதை ஆமோதித்தான் மிருணாளினி.

''நான் அதிகாலையில் நாலு நாலரை மணிக்கெல்லாம் எழுந்திருக்கும்படி இருக்கலாம். இன்று முழுதும் போலீஸார் கண்களில் படாமல் சுற்றி அலைந்தது வேறு களைப்பாக இருக்கிறது. அதனால் நான் சீக்கிரமாகப் போய்ப் படுத்து ஓய்வெடுத்துக்கொள்கிறேன். உங்கள் மாடி அறையை இன்றிரவு மட்டும் நான் ஆக்கிரமித்துக் கொள்ளலாமல்லவா?'' என்று கேட்டவன் பதிலுக்குக் காத்திராமல் படியேறத் தொடங்கினான்.

இரண்டு படிகள் ஏறிய பின் நிதானித்துத் திரும்பிச் செல்லத்தை நோக்கினான். 'நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும்' என்பது போலிருந்தது அந்தப் பார்வை. அப்புறம் அவன் உருவம் கண்களுக்கு மறைந்துவிடச் செல்லமும் தங்கப்பனும் மட்டுமே அங்கு தனித்திருந்தார்கள்.

தயங்கித் தயங்கி அத்தானை ஏறிட்டு நோக்கினாள் செல்லம். **(தொடரும்)**

நாளொரு மேனியாக...

எழிலோங்கச் செய்வது

ரெக்ஸோனா



கொஞ்சி உறவாடி நாளொரு மேனியாக உமது
எழிலுக்குப் பொலிவை ஊட்டி வளர்ப்பது ரெக்ஸோனு.
இதில் வியப்பென்ன? சரும எழிலுக்கான தைலங்களின்
கலவையான 'கேடில்' இருக்கிறது ரெக்ஸோனுவிலே.
தவிரவும், கமகமவென்று மணம் கமழ்வதால்,
மணமோங்கி மலரும் உங்கள் பொலிவு.

கேடில் அடங்கிய ரெக்ஸோனு உங்கள் சருமத்திற்கு உகந்தது.

RX. 24-140 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

டிவிஎஸ் ரீடிரெடிங்கின் உயர்தரத்திற்குச் சிறந்த சான்று

டிவிஎஸ் ரீடிரெட் செய்த ஒரு டயர் 56,394 மைல் உழைத்தது — இன்னும் உழைக்கக்கூடிய நல்ல நிலைமையில் இருக்கின்றது *

இணையற்ற சாதனை *	
புது டயர் டிரெட்	36,987 மைல்
டிவிஎஸ் முதலாவது ரீடிரெடிங்	41,073 மைல்
டிவிஎஸ் இரண்டாவது ரீடிரெடிங்	15,321 மைல்
இன்னும்	10,000 மைல் ஓடக்கூடும்



இப்பொழுது இது இரண்டாவது முறை ரீடிரெட் செய்யப் பட்டது. மூன்றாவது முறையும் இது ரீடிரெடிற்கு உகந்தது. இவ்வித உழைப்பு, டிவிஎஸ் ரீடிரெட் செய்த டயர்களில் சாதாரணம். இதற்கு அடிப்படைக் காரணம் விஞ்ஞான ரீதியில், துளியும் பிசகாமல், கண்ணும் கருத்துமாக டிவிஎஸ் பணி செய்வதே.

நாங்கள் கையாளும் முறை:

(1) டயர்களை சுத்தம் செய்து, சிறு கண்ணாடித் துண்டுகள், ஆணிகள், கற்கள், முதலியவற்றை அப்புறப்படுத்தி, உள்ளும் புறமும் சுத்தப்படுத்தி, புதுப்பிப்பதற்கு வேண்டிய பக்குவம் செய்கிறோம்.

(2) கேஸிங்குகளுக்கு தேவையான இடங்களில் புதிய வளைவுகளை (plies) கொடுத்து பலப்படுத்துகிறோம்.

(3) எக்ஸ்ட்ரா-திக் காமெல்-பாக் ரப்பரை உபயோகப்படுத்துகிறோம். இந்த ரப்பர் கெடாமல் இருக்கும்பொருட்டு, குளிர்சாதன அறையில் அடைத்து வைத்திருக்கிறோம்.

டிவிஎஸ் ரீடிரெடிங் செய்வதால் ஒரு டயருக்கு அதிக மைல்கள் கிடைக்கின்றன. அதனால் ஒரு ரூபாய்க்கு இன்னும் அதிக டயர் மைல்கள் கிடைக்கின்றன.

TVS டிவிஎஸ் —

இந்தியாவிலேயே மிகப்பெரிய ரீடிரெடிங் ஸ்தாபனம்


சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட் (டிவிஎஸ் ஸ்தாபனம்)

தொழிற்சாலைகள்: பங்களூர் · கோயமுத்தூர் · சென்னை
புதுக்கோட்டை · செகந்திராபாத் · திருநெல்வேலி

குறிப்பு: தற்பொழுதும் உழைக்கும் டயரின் படம் இது. இந்த ரிகார்டுகளை எங்கள் சென்னை ஆபீஸில் என்றும் பார்வையிடலாம்.

RET-TVS. 82-2844

காதல் இல்லையேல் காதல்



சோ

காட்சி 25

சுரேஷ் அறை

(பத்திரிகைக் காரியாலயத்துக்குக் கிளம்பச் சுரேஷ் தயாராகிக்கொண்டிருக்கிறான். நிலைக் கண்ணாடி முன் நின்று கழுத்திலிருக்கும் 'டை' முடிச்சு சரியாக இருக்கிறதா என்று சந்தேகம் தீர ஒருமுறை பார்த்துக் கொள்கிறான். தற்கால நாகரிகத்துக்கு இன்றைய மனிதன் எவ்வளவு தூரம் அடிமையாகி நிற்கிறான் என்பதைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுவது இந்த 'டை' முடிச்சுத்தான். ஒரு நாகரிக மனிதனின், கடைசி முத்திரைதான் இந்த டைச் சுருக்கு. அநாவசியமான பழக்க, வழக்கங்களுக்குத் தன்னைத்தானே அடிமைப்படுத்திக்கொள்ளும் மனிதன், தனது அந்த அவலநிலையைத் தனக்குத்தானே நினைவூட்டிக் கொள்வது போல, தன் கழுத்தில் தானே சுருக்கைப் போட்டுக் கொள்ளும் பழக்கம்தானே 'டை' கட்டிக் கொள்வது? சுரேஷின் கழுத்தில் சுருக்கேறியாகிவிட்டது.- அவன் தயார். அப்போது வாசலில் 'காலிங் பெல்' ஒலி கேட்கிறது. சுரேஷ் கதவைத் திறக்கிறான். நிர்மலா புன்முறுவல் பூத்து நிற்கிறாள்...)

சுரே: ஹலோ! நிர்மலா... உள்ளே வரலாமே... ப்ளீஸ் கம் இன்!

நிர்மலா: தாங்க் யூ! (உள்ளே வருகிறாள்)

சுரே: குட் மார்னிங்!

நிர்: குட்மார்னிங்! இதான் உன் ரூமா?

சுரே: இதென்ன கேள்வி? வேறொருத்தன் ரூம்லேயா வந்து நான் இருப்பேன்?

நிர்: ஹிஹி... (உரக்கச் சிரிக்கிறாள்)... அப்பா!... நீ ரொம்ப டமாஷா பேஸ்றே!

சுரே: நான் தமாஷாப் பேசினால்தான் தமாஷா இருக்குது. நீ சாதாரணமாப் பேசினாலே தமாஷாத்தான் இருக்கு!

நிர்: சுரேஷ்! நம்ப ரெண்டு பேர் மீட் பண்ணி 'ஒன் மன்த்' துக்கு மேலே இருக்கும்— இல்லே! இர்க்காது?

சுரே: இர்க்கும் இர்க்கும்! உனக்குத் தமிழ் மேலே இரக்கமே கிடையாதா?

நிர்: இட் சல் ஆல் ரைட்! சுரேஷ் நான் கேக்கறதுக்கு நேரா பதில் சொல்லணும். சொல்வியா?

சுரே: கண்டிப்பா சொல்றேன்.

நிர்: நீ என்பத்தி இன்னா நினைக்கிறே?

சுரே: நீ என்பத்தி இன்னா நினைக்கிறே?

நிர்: அது உனக்குப் புரியலே? அப்போ நான் சொன்னாலும் புரியாது... ம்...ம்... இதோ பார்த்தியா...

சுரே: என்ன அது? (பார்க்கிறான்) ப்யூட்டிபுல்! மோதிரம்! யாருது? உனக்கு வாங்கியிருக்கியா?

நிர்: எனக்கு வாங்கினா இன்னாத்துக்கு உங்கிட்டே காட்றேன்?

சுரே: ஏன்? நல்லாயிருக்கா? எவ்வளவு மதிப்புப் போடலாம் — அப்படின்னு தெரிஞ்சுக்கறதுக்காகக் காட்டலாமே?

நிர்: நீ என்ன தட்டானா? இந்த மோதிரம் என் பிரஸண்ட்...

சுரே: அன்பளிப்பா?

நிர்: எஸ்!

சுரே: யாருக்கு?

நிர்: உன் பாட்டிக்கு! சே! இன்னுமா புரியலே! நான் உனக்குக் கொடுக்கிற பிரஸண்ட் இந்த மோதிரம்! கையிலே எடுத்து மாட்டிக்கிட்டு அஹ!

சுரே: இப்படித்தான் ஆசிர்வாதம் பண்ணி பிரஸண்ட் கொடுக்கிறதா? பரவாயில்லே.... நிர்மலா! தாங்க் யூ வெரிமச்!... எனக்குப் பிரஸண்ட் கொடுக்கணும்னு உனக்கு ஏன் தோணிச்சு. நிர்மலா?

நிர்: அப்பவாவது எனக்குப் பிரஸண்ட் கொடுக்கணும்னு உனக்குத் தோணுதா, பார்க்கலாம்னுதான்!

சுரே: எனக்கு முதல்லேயே தோணிச்சு— தைரியம் வரலே.

நிர்: நான் இப்ப தைர்யமா கொட்கலே?

சுரே: இந்தக் காலத்துப் பொம்பளைங்களுக்கு ஆம்பிளைங்களை விடத் தைரியம் அதிகமா யிருக்குது. அதுக்கு நாங்க என்ன செய்யறது!

நிர்: இப்படிப் பேச உனக்கு வெட்கமா இல்லே?

சுரே: வெட்கமாத்தான் இருக்குது. என்ன பண்றது? நீங்க வெட்கப்படலேன்னு நாங்களாவது வெட்கப்பட வேண்டியது தானே?

நிர்: சே! இந்தக் காலத்து ஆம்பிளைங்களே ஸாத்த மோசம்! அந்தக் காலத்லே எவ்ளோ

தைரியமா இருந்தாங்க! துஷ்யந்த் இன்னு பண்ணுன்? நேரா ஷகுந்தலாவை மீட் பண்ணி 'ஐ லவ் யூ!'ன்னு சொல்லி இம்மீடியட்டா ஒரு 'ரிங்' பிரஸண்ட் பண்ணுன்! அவளே பார்த்தான். உடனே ''லவ்' பண்ணுன். உடனே கல்யாணம்!


சுரே: உடனே மறந்துட்டான்!

நிர்: அவன் எங்கே மறந்தான்? அது ரிஷி சாபம்!

சுரே: அந்தச் சாபத்தையும் ரிஷியையும் நீ இப்படிக் கொலை பண்ணுவேன்னு தெரிஞ்சிருந்தா அந்த ரிஷி சாபமே கொடுத்திருக்க மாட்டார்!... நிர்மலா!... நான்... நான்... துஷ்யந்தன் மாதிரி நடந்துக்கணும்னு நீ விரும்பறியா?

நிர்: நான் சொல்லமாட்டேன்... எனக்கு வெக்மா இருக்கு!

சுரே: சரி. நான் துஷ்யந்தன் மாதிரி நடந்துக்கிட்டு, உன்னைக் கல்யாணம் பண்



ணிக்கறேன்னு சொன்னு உங்கப்பா கண்வர் மாதிரி நடந்துக்கிட்டு சம்மதம்கொடுப்பாரா?

நிர்: டெஸ்ட் பண்ணித்தான் பார்க்கணும்!

சுரே: டெஸ்ட் பண்ணிப் பார்த்துடலாமா? உங்கப்பா கிட்டே வந்து நான் சம்மதம் கேக்கட்டுமா?

நிர்: நீ முதல்லே ஷகுந்தலாகிட்டயே கேக்லியே? ஷகுந்தலாவிடம் பர்மிஷன் வாங்கினப்புறம்தானே கண்வர்கிட்டே கேக்கணும்?

சுரே: ஷகுந்தலா! நீ பர்மிஷன் தரியா?

நிர்: எதுக்கு?

சுரே: எனக்கு வெட்கமா இருக்கு! நான் கேக்காமலே நீ சரின்னு சொல்லிடேன்!

நிர்: நான் சரின்னு சொல்லாமலே நீ மேலே ப்ரொஸீட் பண்ணேன்.

சுரே: சரி... நான் கேக்கறேன்: நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியான்னு கேக்கறேன்.

நிர்: சரி, நான் சொல்றேன்: எனக்கு இஷ்டம்னு சொல்றேன்!

சுரே: ஆஹா!... நிர்மலா! நான் கேக்கறேன்னு கோவிச்சுக்காதே... நம்ப ரெண்டு பேரும் மீட்பண்ணி ஒரு மாசம்தான் இருக்கும். அதுக்குள்ளே என்மேல் உனக்கு எப்படி இவ்வளவு அன்பும் நம்பிக்கையும் வந்தன?

நிர்: நீ மத்தவங்களை போலே இல்லே–அதான்.

சுரே: அது ஏன் அப்படிச் சொல்றே?

நிர்: மத்த ஆம்பிளேங்க இந்த ஒரு மாஸத்துலே என் வூட்டையே ஸுத்தி, ஸுத்தி வந்திருப்பாங்கோ. என்னே ஸினிமாவுக்குக் கூட்டிருப்பாங்கோ... ரொம்ப ஹோப்லஸா நடந்திருப்பாங்கோ. சுரேஷ்.....நீ அப்படியில்லே. யூ ஆர் எ ஜெண்டில்மேன்!

சுரே: இத்தனே நாளா எனக்கே தெரியாது!

நிர்: ஹ ஹ ஹா! (உரக்கச் சிரிப்பு)

சுரே: நம்ம கல்யாணம் நடக்கறதுன்னு நீ ஒரே ஒரு வாக்குக் கொடுக்கணும்.

நிர்: இன்னு?

சுரே: இந்த மாதிரி சிரிக்கறதே இல்லேன்னு சத்யம் பண்ணிக் கொடுக்கணும்.

நிர்: ஹ ஹா (மீண்டும் சிரிக்கிறாள்.)

சுரே: நிர்மலா... நான் வந்து உங்கப்பா கிட்டக் கேட்கட்டுமா?

நிர்: ஐய்யய்யோ! இவ்வளோ சீக்ரமா?... நோ... நோ...! எனக்குப் பயமா இருக்கு.

சுரே: பின்னே எப்பதான் கேக்கறது?

நிர்: (நாகராஜன் வருவதைப் பார்க்கிறாள்): ஐய்யய்யோ! உன் பிரண்ட்...அந்தப் பைத்யம் வர்து... நான் போறேன், சுரேஷ்! அப்றம் மீட் பண்றேன்... டா...டா...டா!

(ஓடி விடுகிறாள்.)

சுரே: வாடா, வா! பூஜை வேளையிலே கரடி வந்த மாதிரி வரயே!



நாக: ஷட் அப்! உன் லெண்டல்லாம் இனிமே வெச்சுக்காதே...

சுரே: என்னடா ஒரே கோவமா இருக்கே!

நாக: நீ ஒரு பிரண்டாடா?....சுரேஷ்... மாலதி அந்தக் கவரைப் பிரிச்சுப் பார்த்து இன்னியோட சரியா பத்து நாள் ஆறது... அதுலே என்னடான்னு நான் எழுதி வெச்ச பேப்பருக்குப் பதிலா வெத்துப் பேப்பர் இருக்குது. நீ எல்லாத்துக்கும் வழி செய்ய றேன்னு எங்கிட்ட சொன்னியா, இல்லையா?

சுரே: சொன்னேன்.

நாக: நான் சாகலே... செத்துப் போனதா நடிச்சேன்னு மாலதிக்கு நிரூபிக்க வேறே ஒரு வழி இருக்குன்னு நீ சொல்லலே?

சுரே: சொன்னேன்.

நாக: இப்ப பத்து நாள் ஆறதே? இது வரை என்னடா செய்தே?

சுரே: நான் கொஞ்சம் என் விஷயத்தைக் கவனிச்சுக்கிட்டிருந்திட்டேன். டேய் நாகு, ஒரு சந்தோஷ சமாசாரம். நிர்மலா என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சுட்டா!

நாக (கோபமாக): ரொம்பச் சந்தோஷம். நீ அவளைக் கல்யாணம் பண்ணிக்க நம்ம திட்டத்தைப் பயன்படுத்திக்கிட்டு என்னைக் காலை வாரிவிட்டுட்டே!

சுரே: ப்ளீஸ்... நாகு! அந்தமாதிரி சொல்லாதேடா. நீ சாகலேங்கிறதை மால திக்கு ரொம்பச் சுலபமா நிரூபிச்சுடலாம்.

நாக: அதைத்தான் பத்து நாளா சொல் லிக் கிட்டிருக்கியே! இனிமே நான் ஏற் கனவே சாகலேன்னு நிரூபிக்க ஒரே ஒரு வழிதான் இருக்கும்.


சுரே: என்னடா?

நாக: இப்ப என்னை மண்டையிலே ஒரு போடு போட்டுச் சாகடி. மாலதி யைக் கூப்பிட்டுக் காட்டு. 'பார்த்தியா இப்பத்தானே செத்தான். முதல்லேயே செத்திருந்தா இப்ப திரும்பச் சாக முடியு மா'ன்னு கேளு!

சுரே: கோவிச்சுக்காதே நாகு. இத்தனை நாள் என் வழியை ஏன் தெரியுமா சொல் லலே? இமர்னு செய்து காட்டி உன்னைப் பிர மிக்க வைக்கணும்னுதான் இருந்தேன்.

நாக: செய்து காட்டியிருக்கலாமே!

சுரே: அதுக்கு ஒரு நண்பனுடைய உதவி தேவை. அவன் இன்னிக்குத்தான் கல்கத்தா



''என் தங்கை உன்னை மிகவும் நேசிக்கிறாள். எனக்கும் உன்னைப் பிடித்திருக்கிறது; என் தங்கையை நீ திருமணம் செய்து கொள்கிறாயா?''

''அடடா! நேற்றே சொல்லாமல் போய்விட்டாயே? ஒருத்தருக்கும் தெரியாம நானும் உன் தங்கையும் நேற்றுதான் ரிஜிஸ்தர் மேரேஜ் செய்துகொண்டோம்!''

விலேயிருந்து வரான். இன்னிக்குச் செய்து காட்டிடறேன்.

நாக: என்ன செய்யப் போறே? இப்பவாவது சொல்லப் போறியா இல்லையா?

சுரே: சொல்லிடறேன். நான் நம்ம திட்டத்தை விவரமா எழுதி மெட்ராஸ்லேயிருந்து அவனுக்கு ஒரு லெட்டர் போட்டேன்.— இன்லாண்டு லெட்டர். — அவனும் எங்க பத்திரிகை ஆசாமி. நியூஸ் போடறதுக்கு அவன் உதவி தேவையாயிருக்கும்னுதான் அவனுக்கு எல்லாத்தையும் விவரித்துச் சொல்லிக் கடிதாக எழுதினேன். அந்தப் பழைய தேதி தபால் முத்திரை அந்த இன்லண்டு லெட்டர்லேயே இருக்கும். அதைக் காமிச்சு மாலதிக்கு நீ சாகலேன்னு சுலபமா நிரூபிச்சுடலாம்!

நாக: சுரேஷ்! நிஜமாவா! நான் கோபத்திலே என்னென்னவோ பேசிட்டேண்டா. ப்ளீஸ் எக்ஸ்க்யூஸ்மீ!

சுரே: பரவாயில்லேடா! நமக்கு ரொம்ப வேண்டியவங்கதான், சிலசமயம் நம்மைக் கொஞ்சம்கூடப் புரிஞ்சுக்காம, நெஞ்சிலே ஈயத்தைக் காய்ச்சி ஊத்தற மாதிரி பேசிப்பிடறாங்க.

நாக: ஐ ஆம் ஸாரி, சுரேஷ்!

சுரே: மனுஷப் பிறவியினுடைய இயல்பே இதுதானே! நீ என்ன செய்ய முடியும்? யாருக்காக நாம எதையும் பொருட்படுத்தாம உழைக்கிறோமோ அவங்கதான் நமக்குத் தாங்க முடியாத துன்பத்தைத் தராங்க. மனிதன் பிறக்கறச்சேயே அப்படித்தானே பிறக்கிறான்? பத்து மாசம் பொறுமையா சுமந்த தாய்க்குச் சொல்ல முடியாத துன்பத்தைக் கொடுத்துக்கிட்டேதானே பிறக்கிறான்! அப்பேர்ப்பட்ட பிறவிக் குணத்தை மாத்த முடியுமா?

நாக: என்னடா பெரிய வேதாந்தம் பேசறே? நான்தான் கண்டபடி பேசினது தப்புன்னு ஒத்துக்கறேனே!

சுரே: இதெல்லாம் சர்வ சகஜம்! டோண்ட் வொர்ரி! இன்னிக்கு ஆபீஸ்லே என் பெட்டியைத் திறந்து அந்த லெட்டரை வாங்கிக்கிட்டு வந்துடறேன்... மாலதிக்குக் காட்டி நம்ம திட்டத்தைப் புரிய வெச்சு, நீ சாகலேன்னு நிரூபிச்சுடு.

நாக: ரொம்ப தாங்க்ஸ், சுரேஷ்!

சுரே: ஆனால் ஒண்ணு. தப்பித் தவறிச் சபேசன் கையிலே அந்த லெட்டர் மாட்டிக்கப்போறது ஜாக்கிரதை! நம்ப திட்டம் அவருக்குத் தெரிஞ்சுட்டா அதோட, நாம ரெண்டு பேருமே கோவிந்தா! உனக்கும் பணம் தரமாட்டார் கல்யாணமும் நடக்காது.

நாக: நான் உஷாரா இருக்கேன். பயப்படாதே. ஆனா மாலதியின் சித்தப்பா தந்த தவணையிலே இன்னும் பதினஞ்சு நாள் தானே பாக்கியிருக்கு... அதுக்குள்ளே பத்தாயிரம் சம்பாதிக்கணுமே. எப்படிடா முடியும்? சபேசன் இதுவரை எனக்கு ஐந்நூறு ரூபாய்தானே கொடுத்திருக்கார்!

சுரே: கவலைப்படாதே. நாளைக்கு மாலதிக்கு நீ, நீயேதான்னு நிரூபிச்சுட்டுச் சபேசன்கிட்ட ஏதாவது அமர்க்களம் பண்ணிப் பணத்தை அப்படியே வள்ளிசாக் கறக்கணும்.

நாக: முடியுமா?

சுரே: முடிஞ்சாகணும். முயற்சி பண்ணிப் பார்த்துடலாம். இன்னிக்கு அவர் பணம் தரலேன்னா கிராமத்துலே நாகராஜன் வீடு ஏலத்துக்குப் போயிடும். நீ தற்கொலை பண்ணிக்கிட்டுச் செத்துப் போயிடுவேன்னு சொல்லி அவரை அலற அடிக்கிறேன்... பார்த்துக்கிட்டே இரு!

நாக: நீ என்ன சொன்னாலும் கேக்கறேண்டா! ஆனால் ஒரே ஒரு வேண்டுகோள்!

சுரே: என்ன?

நாக: சபேசன் கிட்ட நாடகம் நடத்தறதுக்கு முன்னாலே மாலதிகிட்ட நான் சாகலேன்னு நிரூபிச்சுடணும். அப்பத்தான் என்னாலே நாடகத்துலே சரியா நடிக்க முடியும். மனசிலே நிம்மதி இருக்கும்.

சுரே: எல்லாம் பார்த்துக்கலாம்.

நாக: என்ன தர்மசங்கடமா மாட்டிக்கிட்டேண்டா! ஒருத்தொருத்தன் காதல்லே தோத்துப்போய், காதல் இல்லேன்னு தெரிஞ்சப்புறம்தான் இனிமே தனக்குச் சாவிலே தான் நிம்மதின்னு தற்கொலை செய்துக்கறான்! என் கேஸ் தலை கீழாய்ப் போச்சு! சாகலேன்னு தெரிஞ்சாத்தான் நம்ம காதலே நிற்கும் போல இருக்கு!

சுரே: அதுனாலேதான் சொல்றேன் — உனக்குக் கண்டிப்பா வெற்றிதான்! காதலர்களுடைய வாழ்க்கையிலே சாதல் கண்டிப்பா வந்தாகணும். கல்யாணத்துக்கு முன்னேயோ, அதுக்குப் பிறகோ சாதல் வந்துதான் தீரும்! உன் கேஸ்லே இப்பவே வந்துடுத்து. சாதலுக்கு ஒரு சான்ஸ் கிடைச்சாச்சு. இனிமே காதலுக்குத்தான் சான்ஸ்! (தொடரும்)


அவளுடைய
நல்வாழ்வு
உங்கள் பொறுப்பு-
காத்துப் பேணுவது
உங்கள் கடமை
ஒவ்வொரு தந்தையின்
கனவையும் நனவாக்க
தக்கவழியில்
உறுதி தருகின்றது
ஆயுள் இன்சூரன்சு.
மகன் உயர் கல்வி பெற்று
வாழ்வில் உயர,
மகள் மணந்து மகிழ்வுடனிருக்க-
தன தருமை மக்கள் தாம்
விரும்பும் நற்பணியமர்ந்து
நல்வாழ்வு பெற,முதுமையில்
தானும் தன் துணைவியும்
முழு மகிழ்வுடனிருக்க
ஆயுள் இன்சூரன்சு போல
ஆதரவு தருவது எதுவுமே இல்லை



Criterion-MC- 616

அத்தியாயம் ஐம்பத்தொன்று

யார் அங்கே?

புதுப் புடவையை அணிந்து கொண்டு எழிலரசியாக வந்து, ''நீங்கள் ஏன் இன்னமும் இந்த ஈரச்சட்டை யையே போட்டுக் கொண்டிருக் கிறீர்கள்? இதைக் கழற்றி விட்டு வேறு அணிந்து கொள்ளக் கூடாதா?'' என்று ஒருவிதப் பதற்றத்துடன் கேட்டுக் கொண்டே அவனருகில் வந்து அமர்ந் தாள் வேதா.

''பையில் இன்னொரு சட்டை இருக் கிறது. அதை நான் அணிந்துகொண் டால் உனக்குச் சிரிப்பை அடக்க முடியாமல் போய்விடும். கார ணம், குடுகுடுப்பைக்காரன்போல் வேஷம் போட்டுக் கொண்டவ னாகிவிடுவேன்.''

அவன் வாய்விட்டுக் கலகல வெனச் சிரித்தான். அவளோ கண் கலங்கித் தலைகுனிந்து மௌனமாயிருந்தாள்.

முட்டிக் கால்களில் மோவா யைத் தாங்கிக்கொண்டு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த சபே சன் திடுமெனச் சிரித்தான். இதைக் கேட்டுத் திடுக்குற்ற வேதா, ''என்ன, ஏன் சிரிக்கி றீர்கள்?'' என்றாள் திகிலுடன்.

''ஒன்றுமில்லை!..... அந்த ஹோட்டல் மினிட் புத்தகத் தில், மருதமுத்து இவ்வூருக்கு வந்த காரணமாக 'சர்வீஸ்' என்று குறிப்பிட் டிருந்தார். அதை நினைத் துக்கொண்டேன்; சிரிப்பு வந்து விட்டது.''

மருதமுத்துவின் பெயரைக் கேட்டதுமே வேதாவின் மனம் பயத்தால் மீண்டும் நடுங்க ஆரம்பித்தது. ''அந்தப் பாவிகள் இந்நேரம் என்ன செய்வார்கள்? நம்மைப் பற்றிப் போலீசுக்குத் தகவல் கொடுத்திருப் பார்களோ? அவர்களிடம் நீங்கள் அகப் பட்டுக் கொண்டால் இல்லாத பொல்லாத பழிகளையெல்லாம் சுமத்தி வஞ்சம் தீர்த்துக் கொள்வார்களே!'' என்று குழறிப் பதறிக் கேட்டாள் வேதா.



சபேசன் இதைக் கேட்டு அலட்சியமாக நகைத்தான். ''நானும் முதலில் இப்படித்தான் நினைத்துப் பயந்தேன். திருட்டுக் குற்றம் முதல் நம்பிக்கை மோசடி, கடத்தல் குற்றம் வரை என் மீது சுமத்தி விடுவார்கள் என்றும் எண்ணினேன். பிறகு நன்கு யோசித்துப் பார்த்தபோது அவர்கள் போலீஸ் பக்கமே திரும்ப மாட்டார்கள் என்று விளங்கியது. ஹோட்டல் மானேஜரிடம்கூட இது பற்றிப் புகார் ஏதும் செய்ய மாட்டார்கள். அப்படிச் செய்தால் அவர்களே மாட்டிக் கொள்ள நேரிடும் என்பது அவர்களுக்குத் தெரியும். திருடனைத் தேள் கொட்டின நிலை தான் இப்போது அவர்களுடையது. அநியாய அக்கிரமங்களில் ஈடுபடுகிறவர்கள் பெரும்பாலும் கடைந்தெடுத்த கோழைகளாகவே இருப்பார்கள். ஆனால் வெளியே வீராதி வீரர்கள் போல் வேஷம் போடுவார்கள். ஆகவே அவர்கள் நம்மை இரகசியத்தில் தேடிப் பார்ப்பதோடு நின்று விடுவார்களே தவிர அதற்கு மேல் எதுவும் செய்யத் துணிய மாட்டார்கள்.''

இழந்த தைரியத்தைத் திரும்பப் பெற்றவள்போல் நிமிர்ந்து உட்கார்ந்த வேதா, தன் உபாத்திமை வேலைக்காக மருதமுத்துவிடம் நச்சி போய் லஞ்சமாகப் பணம் கொடுத்து விட்டு வந்த நாள் முதல் இன்று காலை வரை நடந்த விஷயங்களையும், மருதமுத்துவின் ஆட்கள் தன்னை ஏமாற்றி இவ்வூருக்குக் கடத்தி வந்த விவரங்களையும் தெளிவாகச் சொல்லி, ''இவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து தெய்வம்தான் என்னைக் காப்பாற்றியது, உங்கள் உருவத்தில் வந்து!'' என்றாள் விம்மலும் பொருமலுமாக. ''அங்கே என் அம்மாவும் அண்ணாவும் என்ன பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்களோ! நச்சி அண்ணா, அம்மாவைக் கொன்றே போட்டு விடுவார்!''

அவள் சொன்னதை யெல்லாம் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த சபேசன், நெடுநேர மௌனத்துக்குப் பின், ''ஆமாம்; இப்போது நீ கூறிய கதைகளை யெல்லாம் உண்மை என்றே நம்ப என்னால் ஆனவரை முயற்சி செய்கிறேன்....!'' என்றான் அடித்தொண்டையில்.


வேல் பாய்ந்த புறாப்போல் துடித்துப் பதறி விட்டாள் வேதா. அவளால் வாய் திறந்து பதிலேதும் பேசவே முடியவில்லை. அவமானம் அவளைப் பேயாய்ப் பிடுங்கித் தின்றது. இவ்வளவு நேரம் அவனருகில் நெருங்கி அமர்ந்திருந்த அவள், ஏதோ தீத்தழல் சுட்டாற்போல் சடாரெனப் பின்னால் நகர்ந்து போய் ஒரு தூணின் மறைவில் ஒட்டி ஒடுங்கிக்கொண்டாள்.

செந்தழல்பட்டுக் கருகித் துவண்ட செவ்வல்லிக் கொடி போல் அந்த மண்டபத் தூணில் சோர்ந்து சாய்ந்து கிடந்த வேதாவையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் சபேசன்.


அன்றொரு நாள், கவுண்டன்பாளையம், சங்கனூர்ப் பள்ளத்துக் கரைமேட்டில் உட்கார்ந்து தாகூரின் 'கனி கொய்தலை'ப் படித்துக் கொண்டிருந்த போது அதில் வந்த 'உபகுப்தர்—விலைமகள்' கதையுடன் தன்னையும் வேதாவையும் ஒப்பிட்டுப் பார்த்து மனம் மறுகிக் குமைந்தானே, அதை இப்போது அவன் நினைத்துக் கொண்டான். அந்தக் கதையின் இறுதிக் காட்சி இதோ நிஜமாகவே தன் கண்ணெதிரில் நிகழ்வதுபோல் இருந்தது அவனுக்கு!.....

மருதமுத்துவினால் தான் ஏமாற்றப்பட்ட விதத்தை வேதா விவரித்துச் சொன்னதற்கு முன்பே சபேசனின் சிந்தனை திசை தவறிப் போய் விட்டது. ஒன்றைப் பற்றி அல்லது ஒருவரைப் பற்றி முதலில் ஏற்படும் அபிப்பிராயத்துக்கு மிகுந்த வலிவு உண்டல்லவா? எனவே, அவள் நடந்த உண்மைச் சம்பவங்களைச் சொல்லியும் அவற்றை அவன் நம்பத் தயங்கி, முதலில் ஏற்படுத்திக் கொண்ட ஊகத்தின் போக்கிலேயே தன் சிந்தனையைச் செலுத்தலானான்: 'என்ன இது வேடிக்கை ! மருதமுத்துவும் அவரது கூட்டாளிகளும் என்னதான் சாமர்த்தியசாலிகளாக இருந்தாலும் ஒரு பெண்ணை அத்தனை எளிதாக ஏமாற்றி இவ்வளவு தூரத்துக்கு அழைத்து வந்துவிட முடியுமா? இவளுடைய வெளிப்படையான சம்மதமோ, உள்ளார்ந்த உடன்பாடோ இன்றி அது நடக்கக் கூடிய காரியமா? தன்னுடையவும் தன் குடும்பத்தினுடையவும் வறுமை நிலையிலிருந்து மீளத்தான் எப்படியும் ஓர் உபாத்திமை வேலையில் அமர்ந்துவிட வேண்டும் என்ற பேராவலால் உந்தப்பட்டு அதற்காக இவள் எதையும் இழக்கவோ, எதற்கும் உடன்படவோ தயாராகி யிருக்கலாம் அல்லவா? அத்தகைய நோக்கத்துடன் வந்தவளுக்கு என்னை இங்கே எதிர்பாராதவிதமாகச் சந்திக்க நேர்ந்ததும் ஏதோ பயம் ஏற்பட்டு விட்டிருக்கிறது. அல்லது பயப்படுவது போல் பாசாங்கு செய்ய ஆரம்பித்து விட்டிருக்கிறாள்.....' என்று இப்படி முதலில் தோன்றிய எண்ணமே இப்போதும் எழுந்து அவளுடைய பேச்சை நம்ப விடாமல் அவனைத் தடுத்தது. அதனால்தான் வெறுப்பும் அருவையும் நிறைந்த குரலில், 'இப்போது நீ சொன்ன கதைகளை யெல்லாம் உண்மை என்றே நம்ப முயற்சி செய்கிறேன்' என்று குத்தலாகப் பதில் கூறிவிட்டான்.

ஒரு பெண்ணை இதைவிடக் கடுமையாக ஒருவன் அவமானப்படுத்திவிட முடியுமா ? இந்தப் பேரவமானத்தை வேதாவினால் தாளவே முடியவில்லை. அவள் அனலிடைப் பட்ட புழுவாகத் துடித்தாள். மரண வேதனையின் எல்லைக்கே போய்விட்டவள் போல் செயலிழந்து சோர்ந்தாள். 'அந்த ஹோட்டலின் மாடியிலிருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்து கொள்வது என்றிருந்த என் முடிவை மாற்றிக் கொண்டு இவரை நம்பி இவரோடு புறப்பட்டு வந்தது எவ்வளவு பெரிய பேதைமையாகிவிட்டது' என்றுகூட அவளது எண்ணம் ஓடத் தலைப்பட்டது. 'இப்போது மட்டுமென்ன, அந்த முடிவை மேற்கொள்ளத் தடை உண்டா ? இல்லை; இதோ, இங்கேயே அதற்கு எத்தனையோ வழிகளெல்லாம் இருக்கின்றன!'



நான்கு சகடைகளும் ஒரு பெட்டியும் கொண்டதல்ல



இக்காலத்திய நவீன மோட்டார் வாகனம் மிகவும் சிக்கலானதும் நுட்பமான பல உறுப்புகளாலான ஓர் யந்திர சாதனம். சாதாரண ஓர் மோட்டார் 4000 அல்லது 5000 உறுப்புக்களைக் கொண்டது. இவற்றில் பல நுட்பம் மிகுந்தவை. மிகவும் நுண்ணிய பொறியியல் திறமையுடன் நிர்ணய அளவுகளுக்குச் சிறிதும் மாறுபடாது செய்யப்பட்டவை. கேவலம் நான்கு சகடைகளும் ஒரு பெட்டியை மட்டும் கொண்டதல்ல.

ஹிந்துஸ்தான் மோட்டார் கம்பெனி இந்தியாவில் மோட்டார் உற்பத்தியில் வழிகாட்டியாக இருப்பவர்கள். கடந்த பத்தாண்டுகளில் மட்டும், லாண்ட்மாஸ்டர் ஹிந்துஸ்தான் அம்பாஸடர் மார்க் II ஆகிய மூன்று ரக மோட்டார்களைத் தயாரித்தளித்திருப்பதுடன் இரண்டு ரக என்ஜின்களையும் உருவாக்கி யிருக்கிறோம். இவை சக்தி மிகுந்த உழைப்புக்கும், எரிபொருள் உபயோகத்தில் சிக்கனத்துக்கும் புகழ் பெற்றவை. சென்ற ஆண்டில் மட்டும் நாட்டில் மொத்த உற்பத்தியான 24,000 மோட்டார்களில் 16,000 மோட்டார்கள் எங்கள் தொழிற்சாலையில் செய்யப்பட்டவை. இந்த சாதனை சாமானியமா என்பதை எண்ணிப்பாருங்கள்.

நமது நாட்டைச் சக்கரங்களின் மீது பொருத்தி செலுத்தவே நாங்கள் விரும்புகிறோம். எங்களால் ஆனதையும் செய்கிறோம். இது ஒரு பெரும் பணி. முதிர்ச்சி மிகுந்த பொறியியல் திறமையும் தொழில் நுட்பமும் இதற்கு பெருமளவில் தேவைப் படுகின்றன. இவற்றையெல்லாம் அபிவிருத்தி செய்ய முழு மூச்சுடன் பாடுபடுகிறோம்.

ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிடெட், கல்கத்தா

இந்தியா முழுவதும் விற்பனையாளர்கள் உள்ளனர்

அவள் சுற்றுமுற்றும் பயங்கரமாக விழித்துப் பார்த்தாள்.

இவ்வளவு நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்த சபேசனின் வக்கரித்த மனமும் இப்போதுதான் ஏதோ ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்டாற் போல் சற்றே நெக்குவிட்டு நெகிழ்ந்தது.


'என்ன இப்படி முன்பின் யோசியாமல் அவசரப்பட்டுப் பேசி அவள் மனத்தை நோக வைத்து விட்டேனே!' — உதட்டைக் கடித்து முகத்தைச் சுளித்துக் கொண்டான் அவன். 'ஆமாம்; அவர்களோடு இவள் ஏதோ ஓர் ஒப்புதலோடு வந்தவளாயிருந்தால், அந்த ஹோட்டலிலிருந்து வெளியேறி என்னுடன் வரும்படி நான் சொன்னபோது அதற்கு ஏதேனும் சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழித்து விட்டிருக்கலாம் அல்லவா? அவ்வாறு ஒன்றுமே கூறாமல் — அப்படி ஓர் அதிசயம் நிகழாதா என்று ஏங்கிக் காத்துக் கொண்டிருந்தவள் போல் — அக்கணமே என்னுடன் புறப்பட்டு வந்து விட்டாளே! இதிலிருந்தே இவள் அந்தச் சமூகத் துரோகிகளால் பச்சையாக ஏமாற்றப்பட்டிருக்கிறாள் என்பது நிச்சயமாகவில்லையா? இந்தச் சிறு உண்மையைக்கூடச் சிந்தித்துப் பார்க்காமல் அறிவிலித்தனமாகவும் மிக அற்பத்தனமாகவும் இவளைச் சந்தேகப்பட்டுக் கொடூரமான சொற்களால் தாக்கிவிட்டேனே !'

அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தவறு செய்த சிறு பிள்ளை போல் உடம்பைக் கூனிக் குறுகிக் கொண்டு தான் உட்கார்ந்திருந்த படியின் மீதே மெல்ல மெல்ல நகர்ந்து சென்ற அவன், அவளருகில் நெருங்கிக் குனிந்து நோக்கினான். கண்ணீர் வழிய, கண்ணிமைகள் சோர்ந்து மூடிக் கிடக்க, மூச்சுக் காற்றும் அடங்கி ஒடுங்கிய மாதிரி தூணோடு முகம் சேர்த்துச் சாய்ந்திருந்தாள் வேதா.

அவளது இந்தப் பரிதாப நிலையைக் கண்டு சபேசனின் நெஞ்சம் பதறித் துடித்தது. அன்பும் பரிவும் கனிந்த குரலில், ''வேதா!....'' என அழைத்தான். அது அவள் செவிப்புலனைத் தீண்டவில்லையோ என்னவோ; எவ்விதச் சலனமுமின்றி மௌனமாக இருந்தாள். இதனால் மேலும் கலவரமடைந்த அவன் இன்னும் கொஞ்சம் அருகில் நெருங்கி அவளது முதுகில் மெதுவாகக் கை வைத்து, ''வேதா!....'' என்றான் அடைத்த குரலில்.

திடுக்குற்றவள் போல் நிமிர்ந்த வேதா அவனைப் பயப்பிராந்தியுடன் மிரள மிரள விழித்துப் பார்த்துச் சடாரெனப் பின்னும் நகர்ந்து கொண்டே, ''நான் சொன்னதெல்லாம் கதை அல்ல! உண்மை! உண்மை !'' என்று கீச்சுத் தொனியில் அலறினாள்.

சபேசனின் மனம் மிகவும் சங்கடப்பட்டு விட்டது. ''இப்போது யார் இல்லை என்றார்கள்? அதெல்லாம் நீசொல்வதற்கு முன்பே எனக்குத் தெரியும்!'' என்றான் அசட்டுச் சிரிப்புடன். ''எந்த மனிதனிடமும் ஏதேனும் ஒரு பலவீனம் இருக்கத்தான் செய்யும். அதைக் கொஞ்சமாவது அநுமதிக்க அல்லது அநுசரித்துக் கொண்டு போகப் பழகிக்



''நம்ப பால்காரக் கண்ணன் இந்த வட்டார கவுன்சிலராய் வந்த பிறகு நம் வட்டாரத்துக் குழாய்கள் நன்கு ரிப்பேரானதுடன் குழாய்களில் தண்ணீர் நிற்காமல் நிறைய வருகிறது என பதை இந்த வட்டார மக்களின் சார்பில் பெருமையோடு கூறிக் கொண்டு இந்த மலர் மாலையை, கவுன்சிலருக்கு அணிவிக்கிறேன்!''

கொள்ள வேண்டும். இல்லையென்றால் நமக்கென்று இவ்வுலகில் யாருமே இருக்க மாட்டார்கள்.''

தன்னுடைய தவற்றுக்கு அவன்தான் அவளிடம் என்ன நாசூக்காக மன்னிப்புக் கேட்டு விட்டான்! அதை உடனே புரிந்து கொண்டவள்போல் அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள் வேதா. தான் சொன்ன விவரங்களை நம்பாமல் தன்னை அவமானப் படுத்துவது போல் பதிலும் கூறிவிட்டானே என்பதற்காக இவ்வளவு நேரம் உயிர் வாதனைப்பட்டுக் கொண்டிருந்த அவளுக்கு அவன் பேசிய அந்தக் குத்தல் பேச்சில் இப்போது ஒரு புதிய அர்த்தமும் புரிந்தது: 'என் மீது இவர் ஏன் அப்படி அவநம்பிக்கைப்பட வேண்டும்? அதற்காக என்னை வெறுத்துப் பேசவும், தாம் வருந்தி மனம் குமையவும் செய்ய வேண்டும்? என்னிடம் ஏதோ ஓர் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்து அதில் ஏற்பட்ட சிறு கீறலைச் சகிக்க முடியாமல்தான் அவ்வாறு ஆத்திரப்பட்டுப் பேசியிருப்பாரோ? ஆமாம்; அளப்பரிய அன்பும் பாசமும் கொள்ளும் இடத்தில் கூடவே உரிமை யுணர்வு எழுவது இயற்கை அல்லவா ? தனக்குச் சொந்தம் என்ற ஒன்றின் மீது தானே தனது அதிகாரத்தையும், விருப்பு வெறுப்புக்களையும், கோப தாபங்களையும் செலுத்த முடியும்? அந்நியம் என்றிருந்தால் அவற்றுக்கெல்லாம் இடம் ஏது?' — இந்தவிதமாகத் தன் எண்ணத்தை ஓட்டியதிலே இணையற்றஇன்பம் கண்ட அவள் ஒரு புத்துணர்ச்சியும் புதுப் பொலிவும் பெற்றவளாய் அவனை ஆவலோடு ஏறிட்டுப் பார்த்தாள்.

''சரி; உனக்குத் தூக்கம் வந்தால் இப்படி இந்தப் படி மீதே படுத்துக் கொள். இன்று நான் தூங்க மாட்டேன்; தூக்கமும் வராது. விடியற்காலை நாலு நாலரை மணிக்கெல்லாம் எழுந்து புறப்பட்டு விடுவோம்.''— சட்டென்று நிமிர்ந்த அவன் தொடர்ந்து, ''இதைச் சொல்ல மறந்து விட்டேனே !

சென்னைக்குப் போக இரண்டு டிக்கெட்டுகளுக்கு இருபது ரூபாய் ஆகும். ஆனால் அதற்காகக் கவலைப்பட வேண்டியதில்லை'' என்றான் அலட்சியக் குரலில். ''என்னிடம் இருபத்தொரு ரூபாய் இருக்கிறது. அந்த ஹோட்டலில் ஏழாம் நம்பர் அறையிலே தங்கியிருந்த சினிமாப் பிரமுகர்கள் அவ்வப்போது எனக்கு அளித்த பக்ஷீஸ் பணத்தைச் சேர்த்து வைத்திருந்தேன். இதில், மருதமுத்து ஒரு நெருப்புப் பெட்டி வாங்கி வரச் சொன்னதற்கு இனாம் கொடுத்த பதினைந்தணாவும்கூட அடக்கம்!'' — இவ்வாறு சொல்லிக் கலகலவெனச் சிரித்த அவன், ''இந்தா, இது அந்த ஹோட்டல் பட்சணம். மிகவும் ருசியாக இருக்கும். சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொள். காலையிலிருந்து இந்நேரம் வரையில் ஒன்றுமே சாப்பிடவில்லை என்பது உன் முகத்தில் எழுதி ஒட்டி வைத்திருக்கிறது'' என்றான்.

வேதாவுக்கு அவனுடைய பேச்சு, பாவனை எல்லாமே ஒரு புதுமையாகவும் பிரமிப்பாகவும் இருந்தன. சென்னையில் பார்த்ததற்கு இப்போது அவன்தான் எவ்வளவு மாறிப் போயிருக்கிறான்! அந்தப் பழைய பயந்த சுபாவம், சங்கோசம் எல்லாம் இருந்த இடமே தெரியவில்லை. பேச்சில் ஓர் அழுத்தம், பார்வையில் ஒரு கம்பீரம், அங்க அசைவுகளில் ஒரு மிடுக்கு, குரலில் ஓர் ஆண்மைச் செறிவு!

அவளுக்கு அவனைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருந்தது. அந்த ஆவலே அவளுள் நாணத்தைப் பொங்க விட்டுக் கண்ணிமைகளைக் கீழே இழுக்க, மெல்லத் தலை குனிந்தவாறு பொட்டலத்தை வாங்கிப் பிரித்தாள். ''நீங்கள்.....? நீங்களும் கொஞ்சம் சாப்பிடுங்களேன்!''

'வேண்டாம்' என்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்தான் சபேசன். ''சாயந்திரமே அந்த ஹோட்டலில் வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டேன். கடந்த ஒரு வாரகாலத்தை என் உணவு விஷயத்தில் மட்டும் ஒரு பொற்காலம் என்றே கூறவேண்டும். இந்த நாட்டுக்கு வந்ததிலிருந்து இவ்வொரு வார காலம் தான் கவலையின்றி வயிறாரவும் வாய்க்குச் சுவையாகவும் சாப்பிட்டிருக்கிறேன். இது என் வாழ்நாளில் மறக்க முடியாத இனிய அநுபவமாயிருக்கும். இதை நினைத்துக் கொண்டே இன்னும் இரண்டு மூன்று தினங்களுக்குக்கூட எதுவும் சாப்பிடாமல் இருந்து விடுவேன்.''

அவனுடைய இந்த வேடிக்கையான பேச்சை வேதாவினால் ரசிக்க முடியவில்லை. அப்பேச்சின் உள்ளேயிருந்த அவலம் அவள் இதயத்தை முள்ளெனக் குத்தித் துளைத்தது. மௌனமாக வேறு பக்கமாகத் திரும்பி உட்கார்ந்து கொண்டு பட்சணங்களைப் புசிக்கலானாள்.

அவளையே சற்றுநேரம் பார்த்துக் கொண்டிருந்த சபேசனின் மனத்தில் அன்றொருநாள் அந்த அகதிப் பெண் சந்தியாவுக்குத் தான் பனம் நுங்கு வாங்கிக் கொடுத்ததும், அதை அவள் இன்னத் தெரியாமல் தின்று முகமெல்லாம் பூசிக் கொண்டு புரையேறி அவஸ்தைப்பட்டுச் சிரிப்பு மூட்டியதும் ஓர் அற்புதச் சித்திரக் காட்சியாகத் தோன்றியது. அதைத் தொடர்ந்து அவ்வழகி சம்பந்தப்பட்ட மற்றும் பல நெஞ்சினிக்கும் சம்பவ நினைவு அலைகளில் மிதந்தவனாய் முட்டிக் கால்களில் மோவாயை அழுத்திக் கொண்டு அப்படியே தலை சாய்ந்தான்.

காலம் அவனைப் பொறுத்த வரையில் கனவு ஆகிவிட்டது. அந்த இனிய நினைவினூடே ஓர் இன்ப உணர்வு. சந்தியா அவனது முதுகில் மார்பு புதையச் சாய்ந்து தோள் வழியே முகத்தை நீட்டிக் கன்னத்தோடு கன்னம் பதித்துக் கன்னல் ரஸ ஒலியெழுப்பிச் சிரிக்கிறாள். தன் நெஞ்சுக்கு நேரே செங்கதலித் தண்டுகளென நீண்டிருந்த அவள் இரு கரங்களையும் பற்றியவாறு அப்படியே 'உப்பு மூட்டை' தூக்குவது போல் தூக்கிக் கொண்டு எழுந்திருக்க முயல்கிறான்!

''ஏய், யார் அங்கே?''

திடுக்குற்று எழுந்த சபேசன், அப்போது தான் தன் முதுகில் இவ்வளவு நேரமாகப் பூந்துகில் போல் சாய்ந்து கிடந்த வேதா சரிந்து விழுந்து எழுந்து நின்றதைப் பார்த்து மேலும் பதறியவனாய்ச் சுற்றுமுற்றும் நோக்கினான். தாங்கள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துக் கொண்டு மருதமுத்துவின் ஆட்கள்தாம் வந்து விட்டார்களோ என்று பயந்து நடுங்கிப் போன அவன், அந்தப் பூங்காவின் இரவுக் காவல்காரன் தொலைவில் வருவதைக் கண்டு நிம்மதியாகப் பெருமூச்சு விட்டவாறு, ''இப்படி நடக்கும் என்று முன்பே நினைத்தேன்; சரியாகி விட்டது'' என்றான் அலட்சியமாக.

''மணி பத்தரெண்டாயிடுச்சு, போங்கய்யா வெளியே!'' என்று காவல்காரன் மீண்டும் கூவினான்.

''சரி, வா! கன்டோன்மென்ட் ஸ்டேஷனுக்கே போய் விடுவோம்'' என்றான் சபேசன், தன் கான்வாஸ் பையுடன் நடந்து கொண்டே. பீதியால் நடுங்கிக் கொண்டு நின்ற வேதா மௌனமாக அவனைப் பின் தொடர்ந்தாள்.

வானோக்கி உயர்ந்து நின்ற கனரா பாங்கினாலும், அதற்குப் பக்கவாட்டிலும் எதிர் வரிசையிலும் இருந்த பிரும்மாண்டமான கட்டடங்களாலும் ஒரு சுரங்கப் பாதை போல் பொய்த் தோற்றம் கொண்டு விட்டிருந்த அழகிய சாலையில் தன்னந்தனியே நடந்து கொண்டிருந்த அவர்கள், அந்தச் சாலையின் இறுதியில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த ஓர் ஆங்கில தினப் பத்திரிகைக் காரியாலயத்தைக் கடந்து பார்ஸிக் கோயில் ஒன்றின் எதிரே வந்து நின்ற போது, பக்கத்திலிருந்த ஒரு பங்களாவிலிருந்து சுவர்க் கடிகாரம் மணி ஒன்று என்பதை அறிவித்தது. அங்கிருந்து ஸ்டேஷனுக்குச் செல்ல, கமலாநேரு பள்ளியிருக்கும் ரோட்டில் திரும்பி நடக்கத்தான் முதலில் நினைத்தான் சபேசன். ஆனால் அவனையும் அறியாமல் அவன் கால்கள் மேற்கு நோக்கிச் சென்ற ஒரு சாலையில் இறங்கி நடைபோட்டன. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போல் அவனைப் பின்தொடர்ந்தாள் வேதா. **(தொடரும்)**

காதலுக்கு இலவச

(இந்தக் கதை மூலம் இளங்காதலர்களுக்கு ஓர் அற்புதமான நீதியைப் போதிப்பதே நோக்கம். அந்த நீதியை முதலிலேயே சொல்லி விடுகிறேன். கடைசியில் கதையிலிருந்து புலப்படுமோ என்னவோ! அதாவது ''காதலிப்பது அவ்வளவு பெரிய தப்பு ஒன்றும் இல்லை. ஆனால் காதலித்துவிட்ட காரணத்துக்காகக் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது!'')


வேணுவும் சுகந்தியும் காதலர்கள். இப்படி அவர் நம் கதை ஆரம்பத்திலேயே காதலர்களாக இருப்பதில் அவர்களுக்கு எப்படியோ, நமக்குப் பரம திருப்தி. அவர்கள் எந்த எந்த இடங்களில் எப்படி எப்படி ரசமாகவோ, ரசாபாசமாகவோ பேசிக் கொண்டு திரிந்து காதலை வளர்த்தார்கள் என்று துப்பறிந்து சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அகௌரவமான உத்தியோகம் எனக்கும் விட்டது: அதைக் கேட்டுத் தொலைக்க வேண்டிய பாரம் உங்களுக்கும் விட்டது.

அரசாங்க இலாக்கா ஒன்றில் வேலை பார்ப்பவன் வேணு. அரசாங்க ஊழியர்களுக்குக் காலை பத்தரை முதல் ஐந்து மணி வரை வேலை என்று நிர்ணயம். மற்ற நேரங்களில் அரசாங்க உத்தரவின்றி வேறு வேலை செய்யக் கூடாது என்பது விதிமுறை. காதலிப்பதற்கு அரசாங்க அனுமதி கிடைக்க வேண்டும் என்று சட்டம் ஒன்றும் இல்லையாதலால் அந்த விஷயத்தைப் பரிசீலித்தான் வேணு. ராஜ விசுவாசத்துக்கு ராஜ விசுவாசம், பொழுது போக்குக்குப் பொழுதுபோக்கு!

சுகந்தி நிலைமை ஒரு படி அதிகம். அவளுக்கு இன்னோர் அலுவலகத்தில் டைப்பிஸ்ட் உத்தியோகம். வேணுவுக்காவது ஐந்து மணிக்கு மேல் வேலை இல்லை. சுகந்திக்கு அதற்கு முன்னாலேயே வேலை கிடையாது. எந்த ஆபீஸிலாவது பெண்ணை வேலை செய்ய விடுவார்களா என்ன? கடினமான வேலையைத் தர அதிகாரிகளுக்கு மனம் வராது. தப்பித் தவறி அவள் பங்கில் விழும் வேலையையும் அவளைச் செய்ய விடச் சக பிரம்மச்சாரி ஊழியர்களுக்கு மனம் வராது. 'நான் நீ' என்று செய்து கொடுக்க ஏகப் போட்டியாக இருக்கும். சுகந்தியும் இதற்கு விதிவிலக்கல்ல. எனவே 'அபாய மற்ற' (அதாவது வெறுமனே பல்லைக் காட்டுவதோடு நிறுத்திக் கொள்கிற) ஆசாமியிடம் தன் வேலையைத் தள்ளிவிட்டு நிம்மதியாகக் கதைப் பத்திரிகைகளைப் படித்துப் பொழுதுபோக்குவாள். ஆபீஸ் பொழுது இப்படிச் சரியாகும். அதற்குப் பின் பொழுதை எப்படிப் போக்குவது?

ஆக, வேணுவும் சுகந்தியும் இப்படி 'வேலை இல்லாத திண்டாட்டத்தில்' ஏககாலத்தில் சிக்கிக் கொண்டிருந்தபோதுதான் காதல் அவர்களிடம் சிக்கிக் கொண்டது.

பௌத்த மதத்தவர்களுக்கு, புத்தருக்கு ஞானோதயம் கிடைத்த போதி மரத்தடி





எப்படி நினைவுச் சின்னமோ, அப்படி வேணுவுக்கும் சுகந்திக்கும் ஒருவேளை கல்யாணமாகி வாரிசு ஏற்பட்டால், அந்த வாரிசுக்குப் புனிதச் சின்னம் நுங்கம்பாக்கம் சாலையிலிருக்கும் வருமான வரி ஆபீஸ் பஸ் ஸ்டாண்டுதான். அங்கே வைத்துத்தான் வேணுவுக்கும் சுகந்திக்கும் திருமணம் செய்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற ஞானோதயம் ஏற்பட்டது.

மேற்படி பஸ் ஸ்டாப்பைப் பற்றி ஒரு விசேஷம். பல நதிகள் சங்கமிக்கும் கடல் மாதிரி சுற்றியிருக்கும் நாலைந்து அலுவலகங்களிலிருந்து வெளியேறிய ஊழியர்கள் படை அங்கேதான் தேங்கி நிற்கும். சாயங்காலம் ஐந்தரை மணி முதல் ஆறரை மணிவரை நீங்கள் அந்த பஸ் ஸ்டாப் பக்கம் போய்க் காதைத் திறந்துகொண்டு நின்று பாருங்கள். உங்களுக்குப் பைத்தியம் பிடிக்காவிட்டால் நீங்கள்தான் மனத்திடத்துக்காக 'மகாவீர்' விருது வாங்க வேண்டிய நபர்.

இந்தக் கூட்டத்துக்கும் ரகளைக்கும் மத்தியில்தான் வேணுவும் சுகந்தியும் தங்கள் காதலை வளர்த்தார்கள். அப்படி வளர்த்துக் கொண்டிருக்கும்போதுதான் ஒரு நாள் திடீரென்று 'தங்கள் காதல் தெய்வீகக் காதலைத் தவிர வேறில்லை' என்பதை இருவரும் கண்டு பிடித்தார்கள். அவ்வளவுதான்: பரஸ்பரம் தாங்கள் இருவருமே கல்யாணம் செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை நிச்சயித்துவிட்டார்கள். உடனடியாகப் பெற்றோர்களுக்கு அந்தத் தகவலைத் தெரிவிப்பது என்று முடிவு செய்தனர்.


ஆதியில் வேணு சுகந்தி இருவருமே கிராமவாசிகள். இன்னும் அவர்களைத் தவிர அவர்கள் குடும்பத்தினர் அனைவரும் கிராமத்தில் சௌக்கியமாக இருக்கிறார்கள். இவர்கள் மட்டும் நாலு எழுத்து (அதாவது எஸ். எஸ். எல். சி.) படித்துவிட்ட தோஷத்தினால் பட்டணத்தில் வந்து உத்தியோகம் பார்த்து அவதிப்படுகிறார்கள்.

வேணு ஒரு லாட்ஜில் தங்கி வாசம் செய்கிறான். சுகந்தியும் ஒரு வீட்டில் 'பேயிங் கெஸ்டா'கத் தங்கியிருக்கிறாள்.

அவர்களுடைய காதல் விஷயம் தெரிவிக்கப்பட்டு இருவருடைய

வைத்தியம் செய்யப்படும்

தாமரை மணாளன்



காதலித்து விட்டால் மட்டும் காதலர்களின் பிரச்னை தீர்ந்து விடுவதில்லை. அதன் பிறகும் சில காதலர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைத் தாமரை மணாளன் தமக்கே உரிய நகைச்சுவை மூலம் இக்கதையில் அழகுபடத் தருகிறார்.

பெற்றோரும் ஒரு குறிப்பிட்ட நாளில் வருவதாக ஏற்பாடு செய்யப்பட்டது: அந்தக் குறிப்பிட்ட நாளுக்கு முந்திய நாள் வேணுவுக்குத் தூக்கமே வரவில்லை. இரவு முழுவதும் தன் வருங்கால மாமனாரை எதிர்த்துக் காதல் முழக்கம் செய்ய வசன ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தான். அதன் காரணமாக அவன் தொண்டை அடைத்துக்கொண்டது. மறுநாள் ரயில் நிலையத்தில் பெற்றோர்களை வரவேற்கப் போயிருந்தபோது அங்கு வந்திருந்த சுகந்தியுடன் பேசக்கூட அவனுக்குத் தொண்டை எழவில்லை. அவளும் அவனைப் போல் முந்திய நாளிரவு தன் வருங்கால மாமனாரிடம் காதல் முழக்கம் செய்ய ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்ற விஷயம் பின்னால் தான் தெரிய வந்தது.

ஆனால் கதையில் அவர்கள் எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டு விட்டது. காரணம், நம் கதாநாயகநாயகிகளைப் போல அவர்களுடைய தந்தைகள் நாவலோ சினிமாவோ பார்த்திராததுதான். தங்களை வரவேற்கக்கூட சத்தம் எழாமல் நிற்கும் புத்திர புத்திரி கொமணிகளைப் பார்த்து "அடப் பாவிக் குழந்தைகளா, உங்கள் ஆசைப்படியே செய்தால் போச்சு. இதற்காகவா அன்னம் தண்ணீர் சாப்பிடாமல் கிடந்து பேசக்கூடச் சக்தியில்லாமல் வந்து நிற்கிறீர்கள்" என்று மங்கள ஆசி பொழிந்தார்கள். ஒரு மாசத்துக்குள் கல்யாணம் என்று நிச்சயித்துவிட்டு அன்றே திரும்பியும் விட்டார்கள். கதை இப்படி மங்களகரமான கட்டத்துக்கு வந்தது.

இருந்தும், அன்றிரவு மீண்டும் வேணுவுக்குத் தூக்கம் வரவில்லை. அவன் மனத்தில் இடமென்று ஒரு மகத்தான பிரச்னை தோன்றிவிட்டது. வேணு ஒரு முடிவுக்கு வந்து விட்டான். "நிச்சயமாக இது காதலாக இருக்க முடியாது. சும்மா ஒரு போலி. இதைப் பற்றிச் 'சாம்பமூர்த்தி சாரி'டம் கேட்டுவிட்டுத்தான் மேற்கொண்டு எந்தக் காரியமும் செய்ய வேண்டும்."

'சாம்பமூர்த்தி சார்' வேணுவுக்குச் சக ஊழியர் – சீனியர். வேணுவுக்கு வேலை பிடித்துக் கொடுத்தவர் அவர்தான். ஆனால் அவர் வேணுவுக்கு வேலையில் மட்டும் குருவல்ல. இன்னொரு விதத்திலும் சாம்பமூர்த்தி பேரில் வேணுவுக்குத் தன் இனம் என்ற இணக்கவர்ச்சி உண்டு. ஆமாம், அவருக்குத் திருமணம் அல்ல; திருமணங்கள்தான். இதுவரை மூன்று என்று பேசிக்கொள்கிறார்கள்.

சாம்பமூர்த்தி முன் பணிவுடன் நின்று, "சார், உங்களிடம் ஒரு யோசனை" என்றான் வேணு.

"என்ன?"

"வந்து நான் ஒரு பெண்ணைக் காதலிக்கும் விஷயமாய்..."

"என்ன, காதலிப்பதா? நீயா? பெண் கிடைத்துவிட்டாளா? யார்?" என்று ஆர்வத் துடிப்புடன் கேட்டார் சாம்பமூர்த்தி.

"பெண் வந்து, சார்... நான் காதலிச்சாச்சு. கல்யாணம் பண்ணுவதாகவும் முடிவு செய்தாச்சு. ஏன், பண்ணிக்கொண்டமாதிரிதான். எனக்கென்னவோ அவ்வளவு மனசுக்குத் திருப்தியாகவில்லை. காதல் திருமணமாச்சே! முன் அனுபவமும் இல்லை. உங்களைப் போல் அனுபவஸ்தர்களிடம் கேட்கலாமென்று...."

"அப்போ ஒன்று செய். அந்தக் காதல் உறுதியானதுதானா என்று சோதனை செய்ய வேண்டும். அதனால் "சாயங்காலம் என் வீட்டுக்கு வா. அங்கே விளக்கமாகப் பேசிக் கொள்வோம்."

"சரி."

மறுநாள். அன்று மாலையில் ஒரு முக்கிய விஷயம் பேசவேண்டும் என்று காலையிலேயே சுகந்தியிடம் போன் மூலம் சொல்லி விட்டான் வேணு. அவர்கள் ஆபீஸ்களில் உள்ள போன் மூலம்தான். அன்று குறிப்பிட்ட நேரத்துக்கு மிக மிகப் பிந்தியே, தலையைக் கலைத்து விட்டுக் கொண்டு சோகமாகப் போனான். ஆனால் அவன் மிக மிகப் பிந்திப் போனதற்கும் ஒரு மணி நேரத்துக்குப் பின்னர் அவனைவிட அதிக தலைவிரிகோலமாக வந்து சேர்ந்தாள் சுகந்தி.

அவனைக் கண்டதும் பழக்க தோஷத்தால் பல்லைக் காட்டுவதற்குத் திறந்த வாயைப் பலவந்தமாக அடக்கிக் கொண்டான் வேணு. அவள் அருகில் வந்ததும், கண்ணைக் கசக்கிக் கொண்டே, "சுகந்தி! நம் புனித

காதலைக் கெடுத்த பாவி நான்'' என்று கண்ணீர் விட ஆரம்பித்தாள்.

''நாம் கல்யாணம் பண்ணிக்கப் போகிற தனால் அப்படிச் சொல்றீங்களா?'' என்று அவளும் அழுவது போல் கேட்டாள்.

''இல்லே, இதைப் பார்'' என்று தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்த ஒரு பெண்ணின் புகைப்படத்தை அவளிடம் காட்டினான் வேணு.

''யாரோ சினிமாக்காரி படம் மாதிரியில்லே இருக்கு. நாலணாவுக்கு மூணுன்னு பிளாட்பாரத்திலே வாங்கினீங்களா?''

''இல்லே, சுகந்தி. உன்னிடம் சொல்லவே வெட்கமா இருக்கு. இந்தப் பெண் என் முதல் காதலி.''

''என்னது? முதல் காதலியா?''

''ஆமாம்.''

''நீங்க அவள் காதலரா? எத்தனாவது?''

''தெரியாது.''

''என்ன உளறுகிறீங்க?''

''நிஜமாத்தான் சுகந்தி. அந்தப் பெண்ணைக் காதலித்தேன். ஆனால் இப்போது உன் அன்புக்கு முன் அவள் எம்மாத்திரம்? அவளை உதறிவிட்டேன். எதற்கும் கல்யாணம் ஆகப் போகும் நமக்குள் இரகசியம் இருக்கக் கூடாது என்று சொல்கிறேன். என்னை மன்னித்துக்கொள்.''

அவ்வளவுதான்; தன் தலையில் இன்னும் கலைக்கப்படாமல் இருந்த சில பகுதிகளையும் கலைத்து மயிரைப் பிய்த்துக் கொண்டு வேகமாகச் சென்றுவிட்டாள் சுகந்தி.

சுகந்தி நேராகத் தான் தங்கியிருந்த வீட்டுக்கார அம்மாள் முன் போய் நின்றாள். அந்த அம்மாளுக்கு நாற்பது வயதிருக்கும்; ஆனால் பருவப்பெண்ணைப் போல் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்; அதனால் முப்பது வயதுக்காரி மாதிரி தோற்றமளித்தாள்!

சுகந்தியைக் கண்டதும் அவள், ''என்ன, சுகந்தி! நான் தந்த போட்டோவை உன் காதலனிடம் காட்டினாயா?'' என்றாள்.

''இல்லே.''

''எனக்குத் தெரியுமே! நீ மட்டும் அந்தப் போட்டோவைக் காட்டி 'இவன் என் பழைய காதலன்'னு சொல்லியிருந்தால் அவன் விஷயம் வெளிப்பட்டிருக்கும். 'அவன் உன்மேல் பொறாமைப் பட்டான்னாலும் கோபப்பட்டான்னாலும் உன் மேல் அன்பிருக்கும்னு அர்த்தம். ஏனோ தானோன்னு அலட்சியமா யிருந்தான்னா உண்மை 'அன்பு இல்லேன்னு கண்டுபிடிக்கலாம்' என்று எவ்வளவு தூரம் சொல்லியனுப்பினேன்.''

''அம்மா, நீங்க சொல்றபடியெல்லாம் நான் கண்டுபிடிக்கிறதுக்கு அவர் எனக்கு சான்ஸ் கொடுத்தால்தானே! நான் இந்த ஆண் போட்டோவைக் காட்டறதுக்கு முன்னாலே அவர் ஒரு பெண் போட்டோவைக் காட்டிக்கிட்டு 'இவதான் என் முதல் காதலி' என்றார்.., எனக்குப் படபடன்னு வந்து விட்டது. வேகமா வந்துட்டேன். இப்ப என்ன செய்யறது?''

''என்னது, பெண் போட்டோவா? எனக்கும் குழப்பமாயில்லே இருக்கு.''

''ஒருவேளை நீங்க எனக்கு அவரைச் சோதிக்கச் சொல்லிக் கொடுக்கிற மாதிரி அவருக்கும் யாராவது சொல்லிக் கொடுத்து அந்தப் போட்டோவைக் கொடுத்திருப்பார்களோ?''

''நோ, நோ. ஆண்களுக்கு அப்படியெல்லாம் செய்யறதுக்கு மூளை கிடையாது. அவன் உண்மையிலேயேஒரு பெண்ணைக் காதல் பண்ணினாலும் பண்ணியிருப்பான்.''

''ஐயையோ! அவருக்கு அதுக்கெல்லாம் சாமர்த்தியம் கிடையாது. என்னைத் தவிர வேறு யாரும் அவரைக் காதலிச்சிருக்க மாட்டாங்க.''

''உனக்குத் தெரியாது. ஆண்கள் எல்லாம் அயோக்கியர்கள். எதுக்கும் இன்றைக்கு ராத்திரி முழுதும் யோசிச்சு நாளைக்கு என்ன செய்யறதுன்னு உனக்கு யோசனை சொல்றேன்.''

சுகந்தி தன் அறைக்குப் போய்விட்டாள்.

அந்த அம்மாள் தன் கைப்பையைத் திறந்து கண்ணாடியை எடுத்துப் பார்த்துத் தன் மேக்கப்பைச் சரிசெய்துகொண்டு யோசனையில் ஆழ்ந்தாள்.

அதே நேரத்தில் சாம்பமூர்த்தி தன் முன் கைகட்டி வாய் புதைத்து நின்ற காதல் சீடன் வேணுவுக்கு இப்படி உபதேசித்து அருளிக் கொண்டிருந்தார்.

''நீ போட்டோவை இன்றைக்குக் காட்டியிருக்கிறாயல்லவா? அவளுக்கு உன்மேல் உண்மையான அன்பிருந்தால் நாளைக்கே உன்னிடம் வந்து நான் சாகப் போகிறேன் என்று அலறுவாள். பைத்தியம் வரையில் பிடித்தாகவேண்டும். இல்லாவிட்டால் அப்படி அப்படித்தான். தள்ளிவிடவேண்டியதுதான்!''

அடுத்த நாள். அன்றும் காலையிலேயே காதலர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திப்பதாக ஏற்பாடு செய்து கொண்டார்கள். ஏற்பாட்டின்படி முன்னதாகவே சென்றிருந்தான் வேணு. கண்கள் குளமாக, தலை விரிந்து கிடக்க, அலங்கோலமாக உடையுடன் தன் காதலி தென்படுகிறாளா என்று கழுத்து வலியெடுக்கும்வரை திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான். அதன் காரணமாக, வெகு அழகாக உடுத்திக் கொண்டு, பவுடர் மணக்க, கொண்டையில் பிளாஸ்டிக் மலர் ஜொலிக்கத் தன் அருகே வந்து நின்று கொண்டிருந்த சுகந்தியை அவன் வெகுநேரம் வரை கவனிக்க முடியவில்லை. கவனித்ததும் திகைத்துப்போனான். அவன் தன்னைக் கவனித்ததும் ஆனந்தமயமாகச் சிரித்தாள் சுகந்தி.

''என்ன சுகந்தி சிரிக்கிறாய்?''

''என் காதலருக்காக நான் ஒரு தியாகம் செய்யப் போகிறேன். எனவே புராண காலத் தலைவியர் மாதிரியே என்னுடைய முகமும் பூரிக்கிறது.''

''என்ன தியாகமா?''

''ஆமாம். உங்கள் மனம் ஏற்கனவே ஒரு பெண்ணை நாடியிருக்கிறது. உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதே உண்மையான காதலியாகிய என் கடமை. எனவே அந்தப்

பெண்ணை உங்களுக்கு மணம் முடித்து வைக்க முடிவு செய்து விட்டேன். அவளுக்குத் தெரிந்த ஒருவரை நான் இன்று சந்தித்தேன்.''

''அவளுக்குத் தெரிந்தவரா?''

''ஆமாம். நானே உங்களுக்காகச் சிரமப்பட்டு விசாரித்துத் தெரிந்து கொண்டேன். அவர்தான் இந்தப் போட்டோவில் இருப்பவர்'' என்று கூறியவாறு தன் குரு அம்மாள் முந்திய நாள் கொடுத்தனுப்பிய படத்தை எடுத்துக் காட்டினாள். அதைப் பிரமை பிடித்தவன் போல் பார்த்துக்கொண்டிருந்தான் வேணு.

''உங்களிருவருக்கும் எப்படியும் முயன்று திருமணம் செய்து வைத்துவிடுவதாக இவர் என்னிடம் வாக்குக் கொடுத்து விட்டார். ஆனால் ஒரு நிபந்தனை போட்டார். அதாவது நான் அவரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமாம்.''

''என்னது ... என்னது ... என்னது...'' என்று அலறினான் வேணு.

''நானும் சம்மதித்து விட்டேன். உங்களுக்காக, உங்கள் நன்மைக்காக, நான் என் வாழ்வைத் தியாகம் பண்ணத் தீர்மானித்து விட்டேன்'' என்று சினிமாக் கதாநாயகி மாதிரி முகத்தைச் சுளுக்கி ஒரு வெட்டு வெட்டித் திருப்பிக் கொண்டு 'க்ளக்' என்ற ஒரு விநோத ஒலியுடன் அழுதுவிட்டுப் போய் விட்டாள் சுகந்தி.

அன்றிரவு, சுகந்தியின் குருவான பார்வதம் அம்மாள் சுகந்தியை மடக்கு மடக்கு என்று மடக்கிக் கேள்வி மாரி பொழிந்தாள்.

''நீ இந்தப் போட்டோ ஆளை மணக்கப் போவதாகச் சொன்னதும் அவன் என்ன சொன்னான்?''

''ஒன்றும் சொல்லவில்லை.''

''உன்னைப் 'பளார்' என்று கன்னத்தில் அறையவில்லையா?''

''இல்லை.''

''பாவி, சண்டாளி என்று திட்டவில்லையா?''

''இல்லை.''

''துரோகி என்று உன் கழுத்தை நெரிக்க வரவில்லையா?''

''இல்லை.''

''என் சோதனைக்கு வெற்றி. உன் காதலுக்குத் தோல்வி. உன் காதலன் ஒரு 'கட்த்ரோட்'. அவனை மறந்துவிடு.''

''அப்படியானால் நிச்சயமாகியிருக்கிற என் கல்யாணம்?''

''அதை கான்சல் செய்துவிட வேண்டியதுதான். உனக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து நான் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்.''

''அந்தப் போட்டோவில் இருப்பவரையா சொல்கிறீர்கள்?

''போட்டோவில் இருக்கிற ஆளா? அவருக்கு இப்பொழுதுதான் சஷ்டியப்த பூர்த்தி விழா நடந்தது. இது அந்தக் காலத்து போட்டோ. அவர் முப்பது வருஷங்களுக்கு முன் பிரபலமாகியிருந்த சினிமா நடிகர். நான் அவர் ரசிகை. இந்தப் படத்தைப் பத்திரமாக வைத்திருந்தேன். இப்போது உன் காதலின் லட்சணத்தைப் பரிசோதிக்க உதவியது. சரி, நாளைக்கு நான் சொல்கிறபடி அவனிடம் போனில் சொல்லி எல்லாவற்றையும் முடித்துவிடு.''

சுகந்தி ஒரு மூலையில் உட்கார்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டே தன் குரு சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அதே போலத் தலையில் கைவைத்துக் கொண்டு தன் குருஜியின் ஆக்ஞையைக் கேட்டுக் கொண்டிருந்தான் வேணுவும்.

''வேணு! நீ தப்பித்தாய். உன் காதலியின் குணம் இப்போதாவது வெளிப்பட்டதே! அந்தப் போட்டோப் பயலை மணப்பதற்காக உன்னிடம் தியாகம் அது இது என்று சொல்லி நாடகம் ஆடியிருக்கிறாள். உனக்கு வேறு பெண் பார்ப்போம்.''

''உம்... சுகந்தியே இப்படி ஆனபிறகு வேறு எந்தப் பெண்ணைப் பார்ப்பது? ஒருவேளை அந்தப் போட்டோவிலிருந்த பெண்ணைச் சொல்கிறீர்களா?''

''அந்தப் பெண்ணா? அந்த அம்மாள் சமீபத்தில்தானே தன் அன்புக் கணவனையும் ஆறு அருமை மக்களையும், இருபத்து நான்கு பேரக் குழந்தைகளையும் தவிக்க விட்டுத் தன் அறுபத்து ஏழாவது வயதில் காலமானதாக பேப்பரில் வந்தது. அவுங்க அந்தக் காலத்துச் சினிமா நடிகை. நான் அவள் ரசிகன்.''

''நாசமாய்ப் போச்சு!'' என்று வாய்விட்டுக் கதறினான் வேணு.

''ஒன்றும் போகல்லே. முதலில் நான் சொல்கிறபடி உன் காதலியின் கணக்கைத் தீர்த்துவிடு. அப்புறம் நான் இருக்கிறேன்.''

மறுநாள். காளை வேணுவும் கன்னி சுகந்தியும் தத்தம் அலுவலகப் போனில் பேசிக் கொண்டதன் ஒரு பகுதி வருமாறு:

''நம் காதலைத்தான் தீர்த்துக் கொண்டாச்சே. இனி மேலே என்ன வேண்டியதிருக்கிறது?'' — இது கன்னி.

''இருக்கிறது.'' — இது காளை.

''என்ன?''

''என்னைப் போல் உன் அப்பாவுக்கும் சபலபுத்தி இருக்கும். 'என் பெண்ணைத் திருமணம் செய்வதாகச் சொல்லி நம்பிக்கைத்துரோகம் செய்து விட்டானே, அதற்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும்' என்று கேட்பார்.''

''நிச்சயமாகக் கேட்க மாட்டார்.''

''ஏன்?''

''கேட்டாலும் கொடுக்க உங்களிடம் ஒன்றும் இல்லையென்று அவருக்குத்தெரியும்.''

''இப்படிப் பேசி என்னை ஏமாற்ற முடியாது. நம் கணக்குத் தீர்ந்தாகணும். நாளைக்கு சப் - ரிஜிஸ்திரார் ஆபீசில் நாம் இருவரும் ஒரு பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் பண்ணவேண்டும். 'எங்கள் காதல் விவகாரம் தீர்ந்து விட்டது. இதை நாங்கள் இருவரும் மனப் பூர்வமாகப் புத்திசுவாதீனத்துடன் எழுதுகிறோம்' என்று. நாளைக்கு நீ ஒரு சாட்சியுடன் சப்-ரிஜிஸ்திரார் ஆபீசுக்கு வா, நானும் ஒரு சாட்சியுடன் வருகிறேன்.''

''சரி.''

''இன்னொரு விஷயம்.''

''என்ன?''

''பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் பண்ணட பணம்....?''

"...இல்லையா! தரித்திரம். நான் வேண்டுமென்றால் கைமாற்றுத் தருகிறேன். ஆனால் முதல் தேதி தந்துவிட வேண்டும். அதற்கு ஒரு பிராமிசரி நோட்டும் எழுதித் தர வேண்டும்."

"நான்சென்ஸ். உன் பணம் எனக்கு வேண்டாம். பத்திரச் செலவில் ஆளுக்குப் பாதி போட வேண்டும் என்பதற்காகச் சொல்ல வந்தேன்."

"ஓகோ அப்படியா, ரோஷம் வழிகிறது."

சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ் வாசல் வராந்தாவில் வேணுவும் அவனுக்குச் சாட்சியாக உடன் எழுந்தருளியிருந்த சாம்பமூர்த்தியும் பத்திரமும் கையுமாக உலவிக் கொண்டிருந்தார்கள். இதேசமயம் அங்கு வந்த சுகந்தியும் பார்வதம் அம்மாளும் மோதிக் கொள்ளாத தோஷமாக எதிர்ப்பட்டனர்.

நால்வரும் ஒருகணம் ஒருவரை யொருவர் வெறித்துப் பார்த்தனர். இடீரென்று சாம்பமூர்த்தி பார்வதம் அம்மாளிடம், "நான் உன்னைப் பார்க்க மாட்டேன் என்று ஆறு மாதங்களுக்குமுன் சொன்னேனே. நீ ஏன் இங்கு வந்தாய் ?" என்று கத்தினார்.

இப்படியே ஒருவர் சொன்னதை மற்றவர் சொல்லிக் கொண்டு பேச்சுவாக்கில் சற்று நகர்ந்து ஒதுங்கிப் போனார்கள். அச்சமயம் தனியாக நின்ற வேணுவும் சுகந்தியும் ஒருவரை ஒருவர் சிறிது நேரம் வியப்புடன் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். உடனே இரண்டு பேரும் அழுதுவிட்டார்கள்.

அச்சமயம், சற்றுத் தொலைவில் சாம்பமூர்த்தி தம் வழுக்கைத் தலையைத் தடவியவாறு, பார்வதம் அம்மாளிடம் பேசிக் கொண்டிருந்தார். அந்த அம்மாளும் தன் முந்தானையால் தோளை மூடிப் போர்த்திக் கொண்டு புதிதாக நாணம் பயின்று கொண்டிருந்தாள்.

அதைக் கண்டதும், "எங்க சாம்பமூர்த்திசாருக்கு நாலாவது காதல் பிறந்திருக்கு போலிருக்கே" என்றான் வேணு.

"எங்க பார்வதம் அம்மாவுக்கும் அப்படித்தான் போலிருக்கு" என்றாள் சுகந்தி. இருவரும் தங்கள் சீனியர்கள் அருகே சென்றனர்.

சாம்பமூர்த்தி பலமாகச் சிரித்துக் கொண்டு, "விஷயத்தைக் கேள். இது வரை நாங்கள் மூன்று தடவை சண்டை போட்டுக் கொண்டு பிரிந்திருக்கிறோம். ஒவ்வொரு பிரிவின் போதும் ஒருத்தி போயிட்டான்னு ஆபீசிலே கணக்கு எடுப்பானுக. பிறகு சமாதானம் ஆகிக் குடித்தனம் ஆரம்பிச்சதும் நான் புதுக் காதல் பண்ணிவிட்டேன் என்பார்கள். நான் எதையும் கண்டுக்கமாட்டேன். வேடிக்கையா ரசிப்பேன். இப்போ ஆறு மாதமாக மூன்றாவது சண்டை போட்டுப் பிரிந்திருந்தோம். உங்களாலே நாங்க நாலாவது தடவையா சேர்ந்திருக்கோம். அசரத்தனமா சண்டை போட்டுப் பிரிந்திருந்த எங்களைச் சேர்த்து வைத்த உங்கள் காதல் தெய்வீகக் காதல்தான். இனி வேறே 'டெஸ்டே' வேண்டியதில்லை" என்றார்.

"சார் அப்ப என் காதல் ரத்து விஷயம்?"

"குரு எவ்வழி, அவ்வழி சிடன். இப்போதைக்கு அந்தப் பிரச்னையை ஒத்திப் போடு. இன்னும் இரண்டு வருஷங்கள் கழிச்ச நாங்க சண்டை போடறப்போ நீயும் யோசிக்கலாம்" என்றார் சாம்பமூர்த்தி.

"சரி. ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்கு வந்தமட்டும் சும்மா திரும்ப வேண்டாம். 'இனிமேல் நாங்க பிரிகிறதில்லே' என்றாவது எழுதி ஒப்பந்தம் செய்துக்குங்க" என்றாள் பார்வதம்.

புதுக் காதல் கன்னியின் முகம் செவ்வல்லி மலரைப்போல் 'குப்'பென்று சிவந்தது. வேணுவை நாணத்துடன் ஓரக் கண்ணால் பார்த்தாள்.


"உம்....உன் பங்குக்குக் காசைக் கொடு. அப்போதான் ரிஜிஸ்திரேஷன் பீஸ் கட்ட முடியும்" என்று கணக்குத் தீர்த்து வாங்கிக் கொண்டான் வருங்கால சம்சாரி வேணு.

ஃ ஃ ஃ

(கதை முடிந்தது. 'காதலிக்கும் ஒரே காரணத்துக்காகக் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது' என்ற என் மகத்தான தத்துவம் என்ன ஆயிற்று என்று கேட்கிறீர்களா? நான் என்ன செய்வது? அந்தத் தத்துவத்தை நிலைநாட்டப் படி அசட்டுத்தனமான காதலர்களைத்தான் தேர்ந்தெடுத்தேன். அதோடு அவர்களைக் கல்யாணம் பண்ண விடாமல் கடைசி வரைக்கும் என்னென்னவோ செய்து பார்த்தேன். ஆனால் அவர்கள் என்னையும் மீறிக் கல்யாணம் செய்துகொண்டு விட்டார்கள். அவர்கள் தலைவிதி; அனுபவிக்கட்டும்! நமக்கென்ன?)



வீடெல்லாம் ஈரமா?



ஏஸிஸியின் கசிவைத் தடுக்கும் சேர்க்கைப் பொருள்

அக்கோப்ரூ:ப் உபயோகிக்கலாமே

சிமெண்ட் 50 கிலோகிராமுக்கு ஒரு கிலோகிராம் அக்கோப்ரூ:ப் கலந்து உபயோகித்தால் நீர்க்கசிவிலிருந்து பரிபூர்ண பாதுகாப்பு கிடைக்கும். சுவர்கள், மேல் தளங்கள், அடித்தளங்கள், ஜலதாரைகள், நீர் சேமிப்புத் தொட்டிகள் இவற்றில் நீர்க்கசிவைத் தடுக்க மிகவும் சிலாக்கியமானது.

அக்கோப்ரூ:ப் உபயோகித்து நீர்க்கசிவைத் தடுங்கள்

உங்களருகில் உள்ள ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆ:ப் இந்தியா லிமிடெடின் கிளையிலிருந்தோ அல்லது அவர்களுடைய வினியோகஸ்தர்களிடமிருந்தோ எப்போதும் உடனடியாகக் கிடைக்கும்

ஏஸிஸி
சிறந்த ஸிமென்டுக்

தி அஸோஸியேடட் ஸிமெண்ட் கம்பெனீஸ் ஆ:ப் இந்தியா லிமிடெட்

தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி
ஆ:ப் இந்தியா லிமிடெட்

JWT-CHI. 2976A

நகவளைவுக்குள் ஒரு நாடகம்

நாடக பாத்திரங்கள் :

ராமு		தலை தீபாவளிக்குச் செல்லும் மாப்பிள்ளை
வேணுகோபால்	---	ராமுவின் தகப்பனார்
மணி	---	ராமுவின் தம்பி
நளினி	---	ரயில் மோகினி
மஞ்சுளா, மாலா	---	நளினியின் தோழிகள்
மோகன்	---	நளினியின் அண்ணன்
மாணிக்கம்	---	ராமுவின் மாமனார்

(கோயமுத்தூர் ரயில் நிலையம். சென்னை செல்லும் நீலகிரி எக்ஸ்பிரஸ் பிளாட்பாரத்தில் வந்து நிற்கிறது. நால்வர் மட்டுமே பிரயாணம் செய்யக்கூடிய கம்பார்ட்மெண்டில் பிளாட்பாரத்தையொட்டிய ஜன்னல் அருகில் சுமார் இருபத்தாறு வயது நிரம்பிய ராமு உட்கார்ந்திருக்கிறான். தலைதீபாவளிக்கு மதராஸ் செல்கிறான் அவன். அவனைத் தவிர அந்தப் பெட்டியில் வேறு யாரும் இல்லை.

ஜன்னலையொட்டிய பிளாட்பாரத்தின் மீது ராமுவின் தந்தை வேணுகோபாலன் நிற்கிறார். அவருடைய கடைசிப் பையன் மணி அவர் கையைப் பிடித்துக் கொண்டு நிற்கிறான்.)

ராமு: எங்கோ கண்காணாத தூரத்துக்கு வழியனுப்ப வந்தவர் போல் பேசுகிறீர்களே அப்பா, பொழுது விடிந்தால் மதராஸ் வரப் போகிறது.

வேணு: நான் அதற்குச் சொல்லவில்லை, ராமு. இன்று உன்னோடு பயணம் செய்ய இருந்த மூன்று பேர்களும் கடைசி நேரத்தில் ரிசர்வேஷனைக் கான்ஸல் செய்துவிட்டார்கள். தனியாகத்தான் பயணம் செய்யப்போகிறாய். அதனால்தான் ஜாக்கிரதை என்றேன்.

மணி: காட்டிலாகாவிலே வேலை பார்க்கிறார் அண்ணா. அவருக்குப் பயமிருக்குமாப்பா?

ராமு: கரெக்டாய்ச் சொன்னாய் மணி!

வேணு: என்னத்தைக் கரெக்டாய் சொன்னான்? காட்டிலே மிருகங்களை நம்பலாம். ஆனால் ரயிலிலே மனிதர்களை நம்ப முடியுமா?

ராமு: அப்பா, மனிதர்கள் என்ன செய்தார்கள்? அதுவும் நான் தனியாகத்தானே போகிறேன்.

வேணு: ஈரோடு, சேலம், இது போன்ற ஸ்டேஷன்களில் இந்தப் பெட்டியில் வேறு யாருமே ஏறமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

ராமு: ஏறினால் என்னப்பா?

வேணு: இன்றையப் பேப்பரைப் படிக்கவில்லையா?

ராமு: படித்தேனே.

வேணு: யாரோ ஒரு பெண் முதல் வகுப்பில் ஏறிப் பிரயாணிகளை மயக்கி அவர்களை ஏமாற்றி அவர்களுடைய பணம், பொருள் எல்லாவற்றையும் அபகரித்துக் கொண்டு போய்விட்டாளாம். நன்றாக அழகாக இருப்பாளாம். பதினெட்டு வயதுக்கு மேல் இருக்காதாம் அவளுக்கு.

மணி: ஆமாம் அண்ணா. "ரயில் மோகினியின் அட்டகாசம். வாலிப மைனர்கள் தங்கள் பணத்தைக் கோட்டை விட்டு 'ஐயோ' என்று அலறிய பரிதாபம்—"

ராமு: பாடத்தைப் படிக்காதே. இது போன்ற செய்திகளை நன்றாக உருப்போடு!

வேணு: அவனை ஏன்டா கடிந்துகொள்கிறாய்? படித்ததைச் சொன்னான். பார், ராமு! கையில் வைர மோதிரம் போட்டிருக்கிறாய். பர்ஸிலே வேறு நிறையப் பணம் வைத்திருக்கிறாய். உஷாராக இருக்க வேண்டும்.

ராமு: என் மோதிரத்தைக் கழற்ற வேண்டுமானால் என் விரலை வெட்டித்தான் எடுக்க வேண்டும்.

மணி: நீ தூங்க ஆரம்பித்தால் உன் விரலை வெட்டினால்கூடத் தெரியாதே!

ராமு: அப்பா! இந்த மணிக்கு ஆனாலும் நீங்கள் ரொம்ப இடம் கொடுக்கிறீர்கள். பெரியவன், சின்னவன் என்ற வித்தியாசமே இல்லாமல் எப்படிப் பேசுகிறான், பாருங்கள்!

வேணு: அவன் சொல்வதும் நிஜம் தானேடா?

(மணியடிக்கிறது. கார்டு விசில் ஊதுகிறார். ரயில் புறப்படப் பச்சை விளக்கைக் காட்டுகிறார்.)



ராமு: அம்மாவைக் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லுங்கள், அப்பா.

வேணு (வண்டியோடு நடந்தபடியே): ஆகட்டும்.

வேணு: நான் சொன்னது நினைவிருக்கட்டும். தூங்கி விடாதே!

ராமு: இல்லை. தூங்க மாட்டேன்.

மணி: ரயில் போனவுடனே மறந்துவிடாதே!

ராமு: அவன் வரட்டும்டா என்னிடம். மடையார் கத்தி இருக்கிறது.

வேணு: நாளைக்குத் தீபாவளி. ஒழுங்காகப் போய்ச் சேரணும். கத்தி, கபடா என்று போலீசில் மாட்டிக் கொள்ளாதே.

(ரயில் வேகம் அதிகரிக்கிறது. வேணுகோபாலும் மணியும் பின்தங்குகின்றனர்.)

காட்சி 2

(ஈரோடு ரயில்வே ஸ்டேஷனில் நளினி தனது சிநேகிதி மாலாவுடன் மதுரை செல்லும் நீலகிரி எக்ஸ்பிரஸை எதிர்நோக்கி நிற்கிறாள். அவளுக்குச் சுமார் இருபது வயதிருக்கும். நல்ல அழகு. குறுகுறுத்த கண்கள். அவள் உடையணிந்திருந்த விதம் யாரோ சினிமா நடிகை மேக்அப்போடு படம் பிடிப்பதற்குத் தயாராய் நிற்பது போல் இருக்கிறது.

நளினி ஈரோட்டில் பணியாற்றி வருகிறாள். தனது அக்காவுக்கு வேலூரில் தலை தீபாவளி நடக்கவிருந்ததையொட்டி வேலூர் செல்ல வண்டியை எதிர்நோக்கி நிற்கிறாள்.

மாலா அவளுடன் கூடப் பணியாற்றுபவள். மாலாவோடு மஞ்சுளாவும் அவளை வழியனுப்ப வந்திருந்தவள் தான். ஆனால் அவள் டிக்கெட் வாங்கப் போயிருக்கிறாள். சிறிது நேரத்தில் அவள் டிக்கெட்டுடன் வருகிறாள்.)

மஞ்சுளா: நளினி, நீ மிகவும் அதிருஷ்டக்காரி. முதல் வகுப்பு டிக்கெட்டே கிடைத்து விட்டது. ஆனால் நாலுபேர் கம்பார்ட்மெண்டில்தான் இடம் இருக்கிறதாம். துணிந்து வாங்கி வந்துவிட்டேன்.

மாலா: மூன்றும் வகுப்பு டிக்கட்டே வாங்கியிருக்கலாம் மஞ்சு.

நளினி: முதல் வகுப்புத்தான் நல்லது, மாலா. வசதியாகத் தூங்கலாம் அல்லவா? இருபது நாட்களுக்கு முன் கேட்டபோது இடமே இல்லை என்று சொன்னார்கள். ஏதோ அதிருஷ்டவசமாக எனக்கு இடம் கிடைத்திருக்கிறது.

மாலா: நீ பேப்பர் பார்க்கவில்லையா நளினி?

நளினி; பார்க்காமல் என்ன, பார்த்தேனே!

மாலா: நேற்று பேப்பரில் ஒரு செய்தியைப் பார்த்தாயா?

நளினி: எந்தச் செய்தியைச் சொல்கிறாய்?

மாலா: யாரோ ஒரு திருடனும், டிப்டாப்பாக உடை உடுத்தி, நாகுக்காகப் பேசி ஆளை மயக்கி அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு போய் விடுவானாம். முதல் வகுப்புப் பிரயாணிகள் மீதுதான் அவன் படையெடுப்பானாம். இந்த நீலகிரி எக்ஸ்பிரஸில்தான் முந்தாநாள் ஒரு பயங்கரக் களவு நடந்ததாம், முதல் வகுப்புப் பெட்டியில்.

நளினி: அவ்வளவு சுலபமாக என்னை ஏமாற்ற முடியும் என்று நினைக்கிறாயா? யாராவது அப்பாவி ஆண்மகன் ஏமாந்திருப்பான்.

மாலா: நன்றாகப் படித்தவளும் நளினி.

நளினி: அதனால் என்ன?

மாலா: அவனை யாரும் திருடன் என்று சொல்லவே முடியாதாம்.

நளினி: உனக்கு ஏன் பயம், மாலா? எப்படியும் கம்பார்ட்மெண்டில் நாலு பேர் பிரயாணம் செய்வார்கள் அல்லவா? அதில் ஒருத்தன் திருடனாக இருந்தாலும் மற்ற இரண்டுபேரும் எனக்கு உதவிக்கு வருவார்கள் இல்லையா? பயமே வேண்டாம்.

மஞ்சு (தன்னிடம் இருக்கும் ஓர் அட்டைப் பெட்டியை நளினியிடம் கொடுக்கிறாள்): நளினி, இதை மறந்து விட்டாயே! உன்

தோட்டக்கார விசுவநாதன்



கடைசித் தம்பிக்காக வாங்கின விளையாட்டுத் துப்பாக்கியாச்சே!

நளினி: தாங்க்ஸ் மஞ்சு. நிஜமாகவே மறந்து விட்டேன். மாலா! ஒருவேளை அந்தத் திருடன் ஏதாவது வம்பு செய்தால் இதோ இந்த விளையாட்டுத் துப்பாக்கியைக்காட்டியே அவனை அலற வைப்பேன். பயப்படாதே.

மஞ்சு: அதோ, வண்டி வருகிறது.

(ராமு, வண்டி நின்றதும் இறங்கிச் சாம்பார் சாதம் பொட்டலங்களை வாங்கப் போகிறான். நளினி கோஷ்டி வரும்போது கம்பார்ட்மெண்ட் காலியாக இருக்கிறது.)

நளினி: என்ன மஞ்சு, பெட்டி காலியாக இருக்கிறதே.

மஞ்சு: அதோ யாரோ அங்கே பெட்டியை வைத்திருக்கிறார்களே, சாப்பாட்டுக்குச் சென்றிருப்பார்கள். நீ உட்கார் நளினி. இதோ கீழே இந்த 'பெர்த்' காலிதான்.

(ரயில் வண்டிக்குள் சென்று மாலா காட்டிய கீழ் பர்த்தில் நளினியின் ஹோல்டாலைப் பரப்பி அதில் மூவரும் உட்காருகின்றனர். சிறிது நேரத்தில் சாம்பார், தயிர் சாதப் பொட்டலங்களுடன் ராமு வருகிறான். வண்டியில் ஏறுகிறான். மூன்று பெண்களையும் பார்க்கிறான். அவர்கள் எதிரில் சாதப் பொட்டலங்களைப் பிரித்துச் சாப்பிட வெட்கிய ராமு வண்டி நகர்ந்ததும் அவர்கள் தூங்கிய பிறகு நிம்மதியாகச் சாப்பிடலாம் என்று முடிவு செய்து அப் பொட்டலங்களை ஒருபுறம் வைக்கிறான்.

மூன்று பெண்களும் ஒருவருடன் ஒருவர் ஒன்றும் பேசாமல் ராமுவையே அர்த்தத்தோடு பார்க்கின்றனர். இதைக் கவனித்த ராமுவுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. தனது ஜேபியிலிருந்த சீப்பை எடுத்து நின்றபடியே தலை சீவிக்கொள்ளுகிறான். பிறகு சற்று சமாளித்துத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு நளினியைப் பார்த்துக் கேட்கிறான்.)

ராமு: நீங்கள் எல்லாம் எந்த ஊருக்குப் போகப் போகிறீர்கள்?

நளினி: (தோழிகளைப் பார்த்து விட்டுப் பின் தயங்கியபடியே) நான் வேறூருக்குப் போகிறேன். இவர்கள் என்னை வழியனுப்ப வந்திருக்கிறார்கள்.

ராமு: அப்படியா? ரொம்ப சந்தோஷம்.

(எதற்காகச் சந்தோஷம் என்று சொன்னோம் என்பது ராமுவுக்கே புரியவில்லை.)

நளினி: நான் வேறூருக்குப் போவதைக் குறித்துச் சந்தோஷப்படுகிறீர்களா? அல்லது இவர்கள் என்னை வழியனுப்பிவிட்டுப் போய் விடுவதைப் பற்றி சந்தோஷப்படுகிறீர்களா?

(மற்ற பெண்கள் எதிரில் தன்னை இப்படி அவமானப்படுத்திப் பேசிவிட்டதைக் குறித்து ராமுவின் முகம் கருக்கிறது.)

மஞ்சு: உங்களோடு வந்த மற்றப் பிரயாணிகளும் சாப்பிடப் போயிருக்கிறார்களா?

ராமு: இல்லையே! இந்தப் பெட்டியில் நான் மட்டும்தான் பயணம் செய்கிறேன்.

நளினி (அவனைக் கிண்டல் செய்யும் பாவனையில்): அப்படியா? ரொம்ப சந்தோஷம்.

மஞ்சு: நளினி, ரொம்பத் தாகமாக இருக்கிறது. போய்க் கூல் டிரிங் சாப்பிடலாம் வா.

(நளினியின் பதிலை எதிர்பார்க்காமல் அவளையும் மாலாவையும் தரதரவென்று இழுத்துச் செல்கிறாள். மஞ்சு, கையிலிருந்த பொம்மைத் துப்பாக்கிப் பெட்டியுடன் நளினி அவளுடன் செல்கிறாள். வண்டியை விட்டிறங்கிப் பிளாட்பாரத்தில் சற்றுத் தொலைவில் மூவரும் நின்று பேசுவதை ராமு கவனிக்கிறான். ஆனால் அவர்கள் பேசுவது பிளாட்பாரத்தில் நிலவிய சத்தத்தில் அவன் காதில் விழவில்லை.)

மஞ்சு: நளினி! அந்த ஆளைப் பார்த்தால் சந்தேகமாக இருக்கு. நீ பேசாமல் ஒரு மூன்றும் வகுப்புப் பெட்டியில் போய் உட்காரு.

மாலா: ஆமாம், நளினி.

நளினி: பயப்படாதே, மாலா. மூன்றும் வகுப்பில் இடிபட்டு உட்கார என்னால் முடியாது. அவனால் என்ன செய்துவிட முடியும்?

மஞ்சு: எதற்கும் அபாய அறிவிப்புச் சங்கிலிக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொள், நளினி. ஏதாவது கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டாலும் சட்டென்று சங்கிலியை இழு.

மாலா: நளினி, அந்தப் பெட்டியிலிருந்து அந்தப் பொம்மைத் துப்பாக்கியை எடுத்து இடுப்பில் செருகிக் கொள். வாலாட்டினால் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி வை!

(காரணம் இல்லாமல் இம் மூன்று பெண்களுக்கும் ஏன் இமயென்று தாகம் எடுக்க வேண்டும் என்று நினைத்த ராமுவுக்கு ஒருவேளை இந்த நளினி என்பவள் ரயில் மோகினியாக இருக்கலாமோ என்ற சந்தேகம் எழுகிறது. மணி அடிக்கிறது; நளினி வண்டியில் ஏறுகிறாள்.)

மாலா: ஜாக்கிரதை, நளினி.

மஞ்சு: ஆமாம், நளினி. காலம் கெட்டுக் கிடக்கிறது.

நளினி: பயப்படாதே மஞ்சு. வரட்டுமா?

(வண்டியின் வேகம் அதிகரிக்கிறது. அபாய அறிவிப்புச் சங்கிலி எங்கே இருக்கிறது என்று பார்த்து அதன் பக்கத்தில் அமர்கிறாள் நளினி. சாதப் பொட்டலங்களைப் பிரித்துச் சாப்பிடலாமா வேண்டாமா என்ற போராட்டத்தில் கடுபடுகிறான் ராமு. அவள் உறங்கிய பிறகு சாப்பிடலாம் என்ற முடிவுக்கு வந்தவன் ஜன்னல் மூலையில் சாய்ந்தபடி அவளையே கவனிக்கிறான்.

நளினி ஒரு புத்தகத்தை எடுத்துப் படிப்பவள் போல் பாவனை செய்தவாறு அவனை ஓரக் கண்ணால் கவனித்தபடி இருக்கிறாள். அவள் பார்வை தனது வைரமோதிரத்தையும் ஜேபியில் தான் வைத்திருக்கும் பர்ஸையும் நோட்டம் பார்ப்பதாக ஓர் எண்ணம் அவனுக்கு ஏற்படுகிறது.

ரயில் மோகினி என்று தன் நண்பர் கூறியது இவளேதான் என்ற முடிவுக்கு வருகிறான். அவள் அணிந்திருந்த உடையும், போட்டிருந்த நாகரீகமான நகைகளும், அவள் உதட்டுச் சாயமும் அந்த எண்ணத்தைப் பலப்படுத்துகின்றன.

காற்றில் நளினியின் முந்தானை அலைமோத அவள் அதைச் சரிசெய்யும்போது ராமுவின் பார்வை அவள் இடுப்பில் செருகியிருந்த துப்பாக்கியின் மீது விழுகிறது.)

ராமு (தனக்குள்): சாப்பாடாவது கூப்பாடாவது? சற்று ஏமாந்தால் இவள் நம்மைக் கட்டிப் போகக்கிவிட்டு மோதிரத்தையும் பணத்தையும் திருடிக்கொண்டு போய்விடுவாள். அப்பா சொன்னதைப் போல் மிகவும் உஷாராக இருக்க வேண்டும்.


நளினி (தனக்குள்): எதற்கு இந்தப் பயல் திருட்டுத்தனமாக நம்மையே பார்க்கிறான். கொண்டுவந்த சாப்பாட்டையும் சாப்பிடாமல் இருக்கையும் கொள்ளாமல் ஏன் இப்படித் தவியாய்த் தவிக்கிறான்? இதில் ஏதோ சூது இருக்கிறது. தூங்குவது போல் பாசாங்கு செய்துபார்ப்போம். (கொட்டாவி விடுகிறாள்)

ராமு (தனக்குள்): சனியனே! தூங்கித் தொலையேன். பசி வயிற்றைக் கிள்ளுகிறது.

(நளினி கால் நீட்டிப் படுக்கிறாள். ஒரு போர்வையால் தனது உடல் முழுக்கப் போர்த்திக் கொள்கிறாள். ஆனால் முகத்தை மூடிய பாகத்தில்

மன நிம்மதி வீட்டிலே





காரணம், உங்கள் நகை ...

... ஸ்டேட் பாங்க் லாக்கரிலே !

உங்கள் செல்வ உடைமைகளை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் லாக்கரிலே (இருப்புப் பேழையிலே) வைத்துக்கொள்ளுங்கள். பெரும்பாலான எங்கள் பெரிய அலுவலகங்கள் எதிலுமே லாக்கர் வசதிகள் கிடைக்கின்றன.

விசேஷ அம்சங்கள்

1 உங்கள் லாக்கரின் சாவிக்கு மாற்றுச் சாவியே (டூப்ளிகேட்) கிடையாது!

2 லாக்கர்களுக்கு நீங்கள் உங்கள் பூட்டையே உபயோகிக்கலாம். பத்திரங்களுக்கும், விலைமதிப்புள்ள சொத்துக்களுக்கும் உரிய பாதுகாப்பான பந்தோபஸ்து வசதிகள், சொற்பக் கட்டணங்களிலே கிடைக்கின்றன.

சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

ஒரு கண்ணுறல் பார்க்கும் அளவுக்குச் சாதுர்ய மாக இடம் விட்டு மூடிக் கொள்கிறாள்.)

ராமு: அப்பாடா, இன்னும் சிறிது நேரத்தில் சாப்பிடலாம்.

(அவள் நன்றாகத் தூங்கட்டும் என்று சிறிது நேரம் சும்மா இருக்கிறான் ராமு. சுமார் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் அவள் அசை வின்றிப் படுத்திருக்கவே இனிமேல் சாப்பிட லாம் என்று தனக்குச் சற்றுத் தொலைவில் இருக்கும் சாதம் பொட்டலங்களைத் தான் இருந்த இடத்திலிருந்தே குனிந்து கைநீட்டி எடுக்கப் பார்க்கிறான்.

அவள் போர்வையில் கண் பார்வைக்காக விட் டிருந்த இடைவெளி வழியே அவன் குனிந்து கையை நீட்டுவதுதான் தெரிகிறது. எதற்காக அவன் அப்படிக் கையை நீட்டுகிறான் என்று அறிந்தபடி உரக்கக் கனைத்துக் கொண்டு போர்வையை உதறித் தள்ளுகிறாள்.

அதைக் கேட்ட ராமு எடுக்கப் போன பொட்டலங் களை அப்படியே விட்டுவிட்டுத் துள்ளி எழுந்து உட்காருகிறான். சோம்பல் முறிப்பவன் போல் இரண்டு கைகளையும் தலைக்குமேல் உயர்த்து கிறான். ஆனால் அதற்குள் அவளே அவனோடு பேச்சுக் கொடுக்கிறாள்.

நளினி: தூக்கம் வரவில்லையா?

ராமு: இல்லை! உங்களுக்கு?

நளினி: எனக்கும் வரவில்லை.

ராமு: ரொம்ப சந்தோஷம். (சமாளித்த படி.) அதாவது உங்களுக்குத் தூக்கம் வராத தைப் பற்றிச் சந்தோஷம் என்றேன்.

நளினி: நான் தூங்கி விட்டால் உங்கள் சந்தோஷம் அதிகரிக்குமோ?

ராமு: நான் அப்படிச் சொல்லவில்லையே.

நளினி: உங்கள் மோதிரத்தை நான் பார்த்து விட்டேன். வீணாக ஏன் கோணலிக் குறுகி அந்த மோதிரத்தை அவதிப்படுத்து கிறீர்கள்?

ராமு: மோதிரத்தின் அவதியைப் பார்த் துப் பார்த்து ஏன் வீணாக உங்கள் கண்களை அவதிப்படுத்துகிறீர்கள்?

நளினி: சாமர்த்தியமாகப் பேசுவதாக எண்ணமோ?

(பேச்சை வளர்த்த விரும்பாத ராமு மேல் பர்த்தில் ஏறிப் படுத்துக் கொள்கிறான்.)

காட்சி 3

(நள்ளிரவு. எக்ஸ்பிரஸ் ஜோலார்பேட்டைக்கும் காட்பாடிக்கும் மத்தியில் போய்க்கொண் டிருக்கிறது. நளினியும் ராமுவும் போலித் தூக்கம் தூங்கியபடி ஒருவரையொருவர் கண் காணித்து வருகின்றனர்.

ராமு பாத்ரூம் செல்வதற்காக எதிரில் இருந்த பெர்த்தில் ஒரு கையையும் தனது பெர்த்தில் ஒரு கையையும் வைத்துச் சத்தம் செய்யாமல் மெதுவாகக் கீழே இறங்க முயல்கிறான்.

அவனது உண்மையான அவசியத்தைப் புரிந்து கொள்ள முடியாத நளினி, அவன் தவறான எண்ணத்தோடுதான் சத்தமின்றி இறங்கப் பார்க்கிறான் என நினைக்கிறாள். சட்டென்று எழுந்து தன் பெட்டியில் இருக்கும் பொம்மைத் துப்பாக்கியை எடுத்து அவனுக்கு எதிரே நீட்டு கிறாள். கீழே பாதி தூரம் இறங்கிய ராமு இதைக் கண்டு பார் விளையாடுபவனைப் போல் மறுபடியும் கையை உந்தி எழும்பி, நிச்சலு வாக நிற்கிறான். அந்தச் சங்கடமான நிலை நீடித்தால் அவள் தன்னைச் சுட்டு விடுவாள் எனப் பயந்து சட்டென்று கீழே குதிக்கிறான்.)

நளினி: ஓர் அடி எடுத்து முன்வைத்தாலும் சுட்டுவிடுவேன்.

(என்னதான் தைரியத்தை வரவழைத்துக்கொண் டாலும் அவள் குரலில் நடுக்கம் இருக்கிறது. ராமுவுக்கு ஓர் அசட்டுத் துணிச்சல் ஏற்படுகிறது சட்டென்று தனது இடுப்பிலிருந்த கத்தியை அவளுக்கு நேர் நீட்டுகிறான்.)

ராமு: உன் மிரட்டலுக்கு நான் பயப்பட மாட்டேன். ஒரே வெட்டாக வெட்டி வீழ்த்தி விடுவேன்.

(அவளுக்கு ஏற்பட்ட நடுக்கம் ஒரு தொத்து வியாதி போல் இவனையும் பற்றிக் கொள்ளுகிறது. அவளுக்கு நேராகத் துப்பாக்கியை நீட்டியபடியே அவள் தனது ஆசனத்தில் அமருகிறாள். அவனும் கத்தியை நீட்டியபடியே தன்னிடத் தில் உட்காருகிறான். கத்தியும் துப்பாக்கியும் ஒன்றை ஒன்று குறி பார்த்தபடி பயணம் செய்கின்றன.)

காட்சி 4

(காட்பாடியில் எக்ஸ்பிரஸ் வந்து நிற்கிறது. துப்பாக் கியைக் கையில் பிடித்தவாறே நளினி கதவைத் திறக்கிறாள். அவளை வழிபார்த்திருந்த அவள் அண்ணன் மோகன் பெட்டிக்குள் நுழைந்து அவளது கோலத்தைக் காண்கிறான்.)

மோகன்: என்னம்மா இது. பொம்மைத் துப்பாக்கியை வைத்து என்ன செய்கிறாய்?

நளினி: இது மட்டும் இல்லாதிருந்தால் என்ன ஆகியிருக்குமோ! முதலில் சாமான் களை இறக்குங்கள்.

(கீழே இறங்குகிறாள். ராமு இதற்குள் கத்தியை மறைத்துக் கொள்கிறான். ஜெண்டில்மேன் மூழுக் காகக் கட்டி அவளுடைய இதரப் பொருள்களை யும் எடுத்துக் கொண்டு மோகன் வண்டியை விட்டு இறங்குகிறான். ராமு கதவைத் தாளிட்டு விட்டு நிம்மதியாகப் பெருமூச்சு விடுகிறான். வண்டி புறப்படுகிறது. பிளாட்பாரத்தில் நளினி யும் மோகனும் நடந்துசெல்லுகின்றனர்.)

மோகன்: என்ன நடந்தது, நளினி?

நளினி: என்னோடு பயணம் செய்த ஆசாமி ஒரு கேடி அண்ணா!

(தான் ராமுவின் எந்த எந்தச் செய்கைகளை எப்படிச் சந்தேகித்தாள் என்பதை விவரிக்கிறாள்.)

மோகன்: போலீசுக்கு உடனே தெரிவிக்க லாம் வா, நளினி.

நளினி: சாட்சி, சம்மன் என்று கோர்ட் டுக்கு ஆயிரம் தரம் போக வேண்டியிருக்கும். எனக்கு லீவு கிடையாது. ஏதோ சௌக்கிய மாக வந்துவிட்டேன். வாருங்க, போவோம்.

(இருவரும் வெளியே இருக்கும் காரில் ஏறிச் செல்கின்றனர்.)

காட்சி 5

(வண்டி மதுராவில் நின்றதும் ராமுவின் மாமனார் மாணிக்கம் அவனைத் தேடி வருகிறார். ராமு வண்டியை விட்டு இறங்குகிறான்)

மாணிக்கம்: நன்றாகத் தூங்கினீர்களா மாப்பிள்ளே?

ராமு: தூங்கியிருந்தால் ஒரே தூக்கமாகத் தான் தூங்கியிருப்பேன்.

(தனது கோணத்தில் முன்னால் நடந்த நிகழ்ச்சியை விவரிக்கிறான்.)

ராமு: நான் கத்தியை நீட்டிக் கொன்று விடுவேன் என்றதுதான் தாமதம், எப்படிப் பெட்டிப் பாம்பாய் அடங்கி விட்டாள், தெரியுமா? மதுரைக்கு வரவேண்டியவள் காட் பாடியிலேயே இறங்கி ஓடிவிட்டாள்.

மாணிக்: எல்லாம் என் மகளுடைய மாங் கல்ய பாக்கியம்!

ராமு: நிஜந்தான். இல்லாவிட்டால் தலை தீபாவளிக்குப் பதில் வேறு ஏதோவல்லவா நடந்திருக்கும்?

(இருவரும் போகின்றனர்.)

வட்ட மேஜை

★ சிறுகதைப் போட்டி
★ குழம்ப வேண்டாம்!
★ ராணுவ மலர்
★ அன்பும் அதிகாரமும்

நாவல், சிறுகதைப் போட்டி முடிவைக் குறைந்தபட்சம் மார்ச் 31, 1966க்கு ஒத்திப் போடுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

சென்னை,
18-11-65

கிரிஜா
ஜனார்தலக்ஷ்மி
சி. லலிதா
பி. வேதகிரி

தேசத்தின் தற்போதைய நெருக்கடி நிலைமை காரணமாய் எழுத்தாளர்களின் கவனம், செயல்கள், சிந்தனைகள் ஒருநிலைப்பட்டிருக்கவில்லை என்பதை உணர்வீர்கள். ஆகையால் வெள்ளி விழா நாவல் சிறு கதைப் போட்டிகள் முடிவுத் தேதியைச் சில மாதங்களுக்கேனும் தள்ளிவைக்குமாறு தாழ்மையுடன் கோருகிறேன்.

கடலூர்,
19-11-65 லால்குடி கிருஷ்ணமூர்த்தி

[எழுத்தார்வமுள்ள நேயர்கள் விருப்பத்துக் கிணங்க வெள்ளி விழாப் போட்டிகளின் முடிவுத் தேதியை 28-2-66க்கு மாற்றி வைத்திருக்கிறோம் என்பதை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்துகிறோம்.
— ஆசிரியர்]

'கல்கி' 21-11-65 இதழில் வெளியான பல்சுவைப் பகுதியில் ஜோதி அவர்களால் எழுதப்பட்டுள்ள கணக்கில் சுந்தரம் பிள்ளையின் குழப்பம் தீர இதோ வழி.

வாடகை செலுத்தவேண்டிய மூவரும் கொடுத்த பணம் ரூ. 30.00. திருப்பி ஒவ்வொருவருக்கும் கொடுத்தது ரூ. 3.00. டிபன் சாப்பிட்டது ரூ. 2.00. ஆக வாடகை மொத்தம் ரூ. 25.00. ஒருவருக்கான உண்மையான வாடகை ரூ. 8.33- (8-5-4) மூவருக்கானது ரூ. 25.00. திருப்பிக் கொடுத்த ரூபாய் ஒன்றுடன் மொத்தத் தொகை ரூ. 9.33- (9-5-4) ஒவ்வொருவருக்கும் சேராத பணம் 66- (0-10-8) ஆக மூவருக்கும் சேராத, சுந்தரம் பிள்ளை டிபன் சாப்பிட்ட பணம் ரூ. 2.00.

எனவே சுந்தரம் பிள்ளை இதற்காக மூளை குழம்ப வேண்டாம்!

சென்னை-13
23-11-65 இரவி

[சுந்தரம் பிள்ளையின் குழப்பத்தைத் தீர்க்க நேயர் எடுத்துக்கொண்ட பிரயாசைக்குச் சுந்தரம் பிள்ளை நன்றி பாராட்டினாலும், புதுப் பைசாக் கணக்கில் மூன்று மறைந்த மாயத்தைப் பற்றி அவர் மண்டையை உடைத்துக் கொள்வதாகக் கேள்வி.
— ஆசிரியர்]

கல்கி 'ராணுவ மலரி'ல் வெளியாகியுள்ள 'பார்த்தனுக்காக மட்டும் அன்று' படித்தேன். அது ஒரு மகத்தான உன்னதப் படைப்பு. கதையின் ஒவ்வொரு வரியைப் படிக்கும் போதும் நம் உடல் சிலிர்க்கிறது; கண்கள் பனிக்கின்றன. ''மனிதன் மிகச் சிறந்ததாகக் கருதும் உயிரைப் பணயம் வைத்தானானால் அவனால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை'', ''மரணம் எதிர்நோக்கும்போது கிட்டுகிற வழித் துணையே மற்றெல்லா நட்பையும்விட உறுதி மிக்கது'' — இவை போன்ற, முக்காலத்துக்கும் உண்மையான அருமையான வாக்கியங்கள் ஆங்காங்கே பளிச்சிடுகின்றன. போர்முனையில் சிறந்த சேவை செய்வதுடன் பேனா முனையிலும் ஒப்பற்ற தொண்டாற்றும் ராணுவ வீரர் எழுத்தாளர் தி. சா. ராஜு* அவர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுதல்கள்.

சென்னை
7-12-65 எம். எஸ். ஜெயா

'கல்கி' ராணுவ மலர் என்னைப் போன்ற ஆயிரக் கணக்கான மாணவ மாணவிகளும் படித்துப் பயன் பெறத்தக்கது. பல ரசமான விஷயங்களைப் பல புகைப்படங்களுடன் வெளியிட்டுத் தமிழ்கூறும் நல்லுலகத்துக்கு நல்ல பணி புரிந்திருக்கிறீர்கள். தங்கள் சீரிய முயற்சியும், இடைவிடா ஊக்கமும் போற்றுதற்குரியது. பாராட்டுக்குரியது. தக்க சமயத்தில் நாட்டின் க்ஷேமத்தைக் கருதி ராணுவ மலர் வெளியிட்டமைக்கு என் பள்ளியின் சார்பில் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரோடு,
2-12-65 குமாரி டி. கே. நந்தினி

திரு சாஸ்திரி அவர்கள் 'திங்கட்கிழமை' என்று குறிப்பாகக் கூறியிராமல் 'வாரத்தில் ஒரு நாள்' என்று பொதுவாக யோசனை சொல்லியிருக்கலாம். ஏனெனில், ஏற்கனவே நம் நாட்டில் வயது முதிர்ந்தோரில் பலரும், மற்றோரும், மத சமயக் கோட்பாடுகளின் அடிப்படையில் சில குறிப்பிட்ட நாட்களில் பட்டினி இருந்து வருகிறார்கள். அத்தகைய மரபில் வந்த நம் மக்களுக்கு, பிரதமரின் அன்பு நிறைந்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்வதில் அதிக மகிழ்ச்சியே இருக்கும்!

ஆனால், நம் மாநில ஆட்சி அதிகாரத்தின் அடிப்படையில் அடக்குமுறையைக் கையாண்டு உத்தரவு பிறப்பிக்க முயல்வது நன்மை பயக்காது. அன்பினால் விளையும் பயன் அதிகார வரம்புக்கு உட்படுமோ, என்ன ?

திருத்துறைப்பூண்டி
8-11-65 வ. க. ஜம்புநாதன்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10


புரதச்சத்து நிறைந்துள்ள அமுல் - உங்கள் குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு மிகச் சிறந்தது
புரதச்சத்து உடலில் உள்ள திசுக்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது. இந்தியாவில் உள்ள குழந்தைகளுக்கென, நிபுணர்களால் நிர்ணயிக்கப் பட்டுள்ளபடி அமுலில் 22 சதவிகிதம் புரதச்சத்து அடங்கியுள்ளது. அமுலிலுள்ள பிற உணவுச் சத்துக்கள், உங்கள் குழந்தைக்கு மிகுந்த சக்தியைத் தருவதுடன், மனநிறைவு தரும் வகையில் எடை கூடவும் உறுதியளிக்கின்றன. உறுதியான பற்கள், பலமான எலும்புகள்! தூய்மையான இரத்தம், பழுதற்ற பார்வை, மிருதுவான தோல் ஆகியவற்றிற்கும் உறுதியளிக்கிறது அமுல் பாலுணவு. மேலும், தொத்து நோய், சொறி சிரங்கு, பக்கவாத ரோகம், இரத்தச் சோகை முதலியவை வராமல் தடுக்க பெரிதும் உதவுகின்றது. அமுல் பாலுணவு உங்கள் குழந்தைக்கு மிகச் சிறந்தது.
சுத்த பாலிலிருந்து தயாரிக்கப்பட்ட அமுல் பாலுணவில், உங்கள் குழந்தைக்குத் தேவையான 7 வைட்டமின்கள் உள்ளன.

ERED No. M. 4392
ed as a Newspaper in Ceylon

